உதயன்


23

www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 293 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (14/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

# பொறுப்புக்கூறாவிடின் அரசுக்கு ஜெனிவாவில் கடும் நெருக்கடி

## இலங்கைக்கு முன்னெச்சரிக்கை விடுத்தார் பிளேக்

**அமெரிக்காவின் நிலைப்பாடு இதுதான் என்பதை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பின்போது நேற்று தெளிவாக எடுத்துரைத்தார் றொபேட் ஓ பிளேக்.**



கொழும்பு, செப். 14

சர்வதேச சமூகத்திடம் உறுதியளித்துள்ளபடி பொறுப்புக்கூறும் கடப்பாட்டிலிருந்து விலகி இலங்கை அரசு தொடர்ந்து இதே கொள்கையில் சென்று கொண்டிருந்தால் அடுத்த வருட முற்பகுதியில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டி வருமென அமெரிக்கா நேற்று முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறது.

கொழும்பில் நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சின்போது அமெரிக்காவின் இந்தக் கருத்தை தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை றொபேட் ஓ பிளேக் நேற்றுக்காலை கொழும்பு ஹில்டன் நட்சத்திர ஹோட்டலில் சந்தித்தார். இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிஸெனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

மீள்குடியேற்றம், தேசிய நல்லிணக்கம் மற்றும் நிரந்தர அமைதித் தீர்வொன்றை ஏற்படுத்துவதில் இலங்கை

பார்க்க பக்கம் 4

## கிழக்குத் தேர்தல் முடிவு குறித்து அதிக அக்கறை காட்டிய பிளேக்

### சந்திப்பின் பின் தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப்.14

கிழக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி குறித்தும் கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை குறித்தும் றொபேட் ஓ பிளேக் தம்முடன் கலந்துரையாடினார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் றொபேட் ஓ பிளேக்கிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் கொழும்பில்

பார்க்க பக்கம் 4

## ஆளும் தரப்புக்கே மு.காவின் ஆதரவு

கொழும்பு, செப்.14

கிழக்கு மாகாண சபையில் புதியதொரு ஆட்சியை ஏற்படுத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

இதற்கமைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குகிழக்கு மாகாண முஸ்லிம் முதலமைச்சர் பதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமையவுள்ள கிழக்கு மாகாணசபையில் அமைச்சுப் பொறுப்பொன்றும் மு.காவுக்கு வழங்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என அரச தரப்பு வட்டாரங்கள் கூறின.

கடந்த மாகாண சபையின் முதலமைச்சராக பணியாற்றிய பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திர

பார்க்க பக்கம் 4

## தீர்வு தாமதிப்பதற்கு கூட்டமைப்பே காரணம்

### பிளேக்கிடம் அமைச்சர் நிமால்

கொழும்பு,செப் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் காரணமாகவே இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தாமதமடைவதாக இலங்கை வந்துள்ள அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கிடம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

றொபேர்ட் ஓ பிளேக், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நீர்ப்பாசன அமைச்சில் வைத்து நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் நாங்களே ஆட்சி

கொழும்பு,செப் 14

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிச்சயம் ஆட்சியமைக்கும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

யாருடன் இணைந்து ஆட்சியமைக்கப்படும் என்பது அரசியல் சூழ்நிலைகளினால் தீர்மானிக்கப்படும் எனவும் அதிக ஆசனங்களை அரசே கைப்பற்றியுள்ளதால், எந்தப் பிரச்சினையும் ஏற்

பார்க்க பக்கம் 4

## பொதுநலவாயக் கூட்டத்தை தமிழக எம்.பிக்கள் புறக்கணிப்பு

கொழும்பு,செப் 14

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் கூட்டத்தைத் தமிழ்நாடு, புதுச்சேரியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர். இந்தியாவின் நாடாளுமன்றக் குழுவில் இவர்கள் இடம்பெறவில்லை.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் கூட்டத்தில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் பங்கேற்றுள்ளது.

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையை அடுத்து, இலங்கையின் மனிதஉரிமைகள் நிலை குறித்து, பிரிட்டன்

பார்க்க பக்கம் 4

## ஐக்கிய நாடுகள் சபை போன்று பொதுநலவாயம் நடக்கக்கூடாது

### அமைச்சர் பீரிஸின் அறிவுரை இது

கொழும்பு,செப் 14

அங்கத்துவ நாடுகளின் சுயாதீன விவகாரங்களில் திணிப்புகளை மேற்கொள்வதில் ஐ.நாவின் நடத்தையை பொதுநலவாயம் பின்பற்றக்கூடாது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

''பொதுநலவாயமானது ஐ.நாவிலிருந்து வேறுபட்டது. எனவே ஐ.நா.வின் கொள்கைகள், நடத்தைகளை பொதுநலவாயம் பின்பற்றினால் அது பாரிய தவறாகிவிடும்'' என நேற்று நிகழ்த்திய லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த நினைவுப் பேருரையின்போது அவர் கூறினார்.

பொதுநலவாயத்தின்

பார்க்க பக்கம் 4

## வழங்கிய வாக்குறுதிகளை உடன் நிறைவேற்றுங்கள்

### இலங்கையிடம் கோருகிறது பொதுநலவாய அமைப்பு

கொழும்பு,செப் 14

நல்லிணக்கம் தொடர்பாக, சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசு தவறினால் பொதுநலவாயத்தின் நம்பகத்தன்மை சவாலுக்குள்ளாகும் எனப் பொதுநலவாய அமைப்பு தெரிவித்துள்ளது.

தனது உள்நாட்டு பிரச்சினையை சமாதானமாகவும், கூட்டாகவும் தீர்ப்பதற்கான இலங்கை அரசின் மனவுறுதி மற்றும் ஆற்றலில் சர்வதேச சமூகம் நம்பிக்கையை இழந்தால் அது

பார்க்க பக்கம் 4

வடக்கில் மீளக்குடியமர்வு மற்றும் கண்ணிவெடி அகற்றல் தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் நேரில் ஆராய்ந்தனர். 2

கூடங்குளம் அணுஉலைக்கு எதிராக இடிந்தகரை அருகே கடலில் இறங்கி மனிதச்சங்கிலிப் போராட்டத்தில் குதித்தனர் மக்கள். 8

கடாபியின் ஆதரவாளர்களே லிபியாவில் குழப்பத்தை ஏற்படுத்த சதி செய்கின்றனர். எச்சரிக்கை விடுக்கிறார் ஒபாமா. 9

முறையான மீள் குடியமர்வே எமது இன்றைய தேவை. திருக்கோவில் மக்கள் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளிடம் மன்றாட்டம். 15

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப்.14

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 14 நாள்கள் இடம்பெறவுள்ளது.

விசேட திருவிழாக்களாக எதிர்வரும் 21 ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனம், 22 ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 23 ஆம் திகதி துகில் திருவிழாவும் 24 ஆம் திகதி பாம்புத் திருவிழாவும் 25 ஆம் திகதி கம்சன் போர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 27 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும், இடம்பெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மீளக்குடியமர்வு தொடர்பில் பொதுநலவாய பிரதிநிதிகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப்.14
வடக்கில் மீளக்குடியமர்வு மற்றும் கண்ணிவெடி அகற்றல் நிலைமைகள் தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர்.



யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வியாழக்கிழமை வருகை தந்த சுமார் 80 பேர் வரையான பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் உறுப்பினர்கள் வடக்கின் நிலைமை தொடர்பில் நேரில் ஆராய்ந்தனர்.

விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த இந்தக் குழுவினர், முற்பகல் 10 மணியளவில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் வடமாகாணம் தொடர்பிலான கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதிநிதிகளை வரவேற்று உரை நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து வடமாகாணத்தின் அபிவிருத்தி, உட்கட்டுமானம், விவசாயம், கைத்தொழில் போன்றவற்றின் தற்போதைய நிலை தொடர்பில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் விளக்கமளித்தார்.

இதன் பின்னர் பொதுநலவாய நாடாளுமன்றச் சங்க உறுப்பினர்கள் அங்கு கேள்விகளை எழுப்பினார்கள்.

இதன்போது வடமாகாணத்தில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் எந்தளவில் உள்ளன? இதனை விரைவுபடுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன்?, இன்னும் எவ்வளவு மக்களை மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளது? என்பது தொடர்பில் அவர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ.முருகதாஸ், யாழ். மாவட்டத்தில் 90 சதவீதமும், முல்லைத்தீவு மாவட்டம் முற்றுப்பெறும் நிலையிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 75 சதவீதமும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு நலன்புரி நிலையங்களில் 3 ஆயிரம் பேர் வரையில் மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளனர் என்று ஆளுநரின் செயலாளர் தெரிவித்தார்.

ரில்கோ விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் நல்லூர் ஆலயத்துக்கு மேற்படி குழுவினர் சென்றனர். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்று பளையில் இந்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டம், கிளிநொச்சி வைத்தியசாலை என்பவற்றை அவர்கள் பார்வையிட்டனர். (த-5)

## தென்பகுதி நபருக்கு நேற்றுப் பிணை

கிளிநொச்சி, செப்.14
கிளிநொச்சி கனகபுரத்தில் குடும்பஸ்தர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த தென்பகுதி நபர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிணை விண்ணப்பம் தொடர்பான இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கனகபுரம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நிமலன் கடந்த 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி மொட்டையான ஆயுதம் ஒன்றினால் குத்தப்பட்டு உயிரிழந்தார் என பொலிஸ் விசாரணை மற்றும் மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்தது.

இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த விமலதாச சபிர தேசப் பிரிய, சமரசிங்க ஆராச்சி லாகே சந்தன சமரசிங்க ஆகிய இருவரும் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். கிளிநொச்சி நீதிவானின் உத்தரவுக்கமைய சந்தேக நபர்கள் இரண்டு பேரும் விளக்கமறிலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் முதலாது சந்தேக நபர் ச்சார்பில் சட்டத்தரணி ஜே.ஆரூரன் பிணை விண்ணப்பம் ஒன்றை யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (த-4)

## தனது பிழைப்புக்காகவே மன்னிப்பு கோரினாராம் உன்னிகிருஷ்ணன்

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,செப்.14
தென்னிந்தியப் பாடகர் உன்னிகிருஷ்ணன் தனது பிழைப்புக்காகவே மன்னிப்புக் கோரினார். அத்துடன் அவருக்கு உலகத் தமிழர்களின் ஆதரவு தேவைப்பட்டமையாலேயே இவ்வாறு மன்னிப்புக் கேட்டார்.

இவ்வாறு கூறினார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த இசைக் கச்சேரியில் பங்குபற்றுவதற்காக பிரபல தென்னிந்தியப் பாடகர் உன்னிகிருஷ்ணன் கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இசைக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்த போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடையில் சென்று உன்னிகிருஷ்ணனுக்குப் பொன்னாடை போர்த்தியிருந்தார்.

இந்தச் சம்பவம் தமிழகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உன்னிகிருஷ்ணன் மீதான விமர்சனத்தை உண்டுபண்ணின.

இதனையடுத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தச் சம்பவத்துக்காக உலகத் தமிழர்களிடம் தான் மன்னிப்புக் கோருவதாகவும், டக்ளஸ் தேவானந்தா தனக்குப் பொன்னாடை போர்த்தியமை தனது இசைப் பயணத்தில் ஒரு கரும்புள்ளி எனவும் உன்னிகிருஷ்ணன் தெரிவித்திருந்தார்.

அத்துடன் தற்செயலாக நடந்த இந்தச் சம்பவத்துக்காக தான் மனம் வருந்துவதாகவும் அவர் கூறியிருந்தார்.

உன்னிகிருஷ்ணன் மன்னிப்புக் கோரியமை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அமைச்சர், உன்னிகிருஷ்ணன் தனது பிழைப்புக்காகத் தான் மன்னிப்புக் கோரியுள்ளார். உலகத் தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே அவர் இவ்வாறு செய்துள்ளார் என்றார் ''இந்தியத் தூதரகமும், மாநகரசபையும் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்விற்கே நான் சென்றேன்'' என்று கூறினார். (த-5)

## முல்லைத்தீவு வேணாவிலில் கண்ணிவெடி அகற்றல் பூர்த்தி

### விரைவில் அங்கு மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம், செப்.14
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் இதுவரையில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத வேணாவில் மற்றும் மந்துவில் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இந்தப் பிரதேசங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முழுமையாக கண்ணிவெடி அகற்றப்பட்டு மாவட்ட செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக மிதிவெடி செயற்பாட்டலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதிக்கட்ட போர் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த வகையில் வேணாவில் மற்றும் மந்துவில் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கை கள் நிறைவு பெறாததன் காரணமாக மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் மனிக்பாமில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் வேணாவில் மற்றும் மந்துவில் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. எதிர்வரும் 25ஆம் திகதி மேற்படி பிரதேசங்கள் இரண்டும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

இதனால் இந்தப் பகுதியில் வசித்த 611 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 59 பேர் விரைவில் சொந்த இடங்களில் மீளக்குடியமரவுள்ளனர். அத்துடன் மனிக்பாம் முகாமும் மூடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## இலங்கையர் மீதான தாக்குதலால் விமான நிறுவனங்களுக்கு நட்டம்

கொழும்பு,செப் 14
இந்தியாவின் தஞ்சாவூரில் இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் கொழும்பிலிருந்து திருச்சிக்கு விமான மூலம் பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்துள்ளது. இதனால் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ், மிஹின் லங்கா ஆகிய விமான நிறுவனங்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றன.

இந்த நிறுவனங்கள் திருச்சிக்கான தமது விமான சேவையை மேலும் விஸ்தரிக்கத் திட்டமிட்டிருந்த வேளையில் இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ், மிஹின் லங்கா ஆகியவற்றின் வருமானம் பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

ஈழ யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் சிங்கள யாத்திரிகர்கள் முதலில் கொழும்பிலிருந்து திருச்சிக்குப் பயணமாகினர். இவர்கள் பின்னர் திருச்சியிலிருந்து பௌத்த தலங்களான புத்தகாயா, சர்னாத் ஆகிய பகுதிகளுக்கும் பயணித்தனர். இப்பயணத்தின்போது இவர்கள் பல இந்துக் கோவில்களையும் தரிசித்துச் சென்றனர். இப்போது இவர்கள் கொழும்பிலிருந்து திருச்சி செல்லாமல் திருவனந்தபுரத்துக்கு விமானத்தில் பயணிக்கின்றனர்.

இதேபோல கொழும்புக்கு வரும் தமிழகச் சுற்றுலாப் பயணிகள் இப்போது சிங்கப்பூர் அல்லது கோலாலம்பூருக்கு செல்கின்றனர். இதனால் இலங்கைச் சுற்றுலாத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. (த)

## கவிழ்ந்தது படகு இருவர் உயிர் தப்பினர்

யாழ்ப்பாணம், செப்.14
பலாலி கடற்றொழிலாளர் சங்கத்துக்குச் சொந்தமான படகு ஒன்று நேற்று முன்தினம் தொழிலில் ஈடுபட்டுத் திரும்பியவேளை எதிர்பாராத விதமாக கடலில் கவிழ்ந்தது என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி தெரிவித்தார்.

பொலிகண்டி கடற்பரப்பில் குறித்த சங்கத்துக்குச் சொந்தமான படகில் நேற்று முன் தினம் காலை துரைராஜா, உதயராஜ் ஆகிய இருவரும் தொழிலுக்காகப் படகில் சென்றிருந்தனர்.

தொழில் முடித்து இருவரும் கரை திரும்பிக் கொண்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக இந்தப்படகு கவிழ்ந்தது.

படகில் அளவுக்கதிகமான மீன்கள் இருந்ததாலேயே படகு பாரம் தாங்காமல் கவிழ்ந்திருக்கலாமெனக் கூறப்படுகிறது.படகிலிருந்த பெருந்தொகையான மீன்களும் கடலில் வீழ்ந்தன. படகும் சேதத்துக்குள்ளானது.மீனவர்கள் இருவரும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் ஒருவாறு கரையொதுங்கியதால், அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் 20 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் தேடுதலில் குதித்தனர். பின்னர் அதிகாலை 2 மணியளவில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த மற்றையவரும் மீனவர்களால் மீட்கப்பட்டார். (த-13)

## ஐ.தே.கட்சியின் உறுப்பினர் கைது

கொழும்பு,செப். 14
வட மத்திய மாகாண சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அநுர புத்திக நேற்று அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிஹிந்தலை பிரதேச சபை ஐ.தே.க எதிர்க்கட்சித் தலைவரின் வீடு மீது கடந்த 10ஆம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்திய போது தாக்குதலுடன் அநுர புத்திகவுக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரியவந்தது.

இதனையடுத்து அநுர புத்திக கைது செய்யப்படுள்ளதோடு மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த)

## வட்டுக்கோட்டை கொலை வழக்கு: 16 வருடங்களின் பின் மூவர் நிரபராதிகள் என விடுதலை

யாழ்ப்பாணம், செப்.14
வட்டுக்கோட்டையில் 16 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை வழக்கில் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்ட 3 பேரும் விசாரணையின் பின்னர் நிரபராதிகள் என இனம் கண்டு விடுதலை செய்தது யாழ். மேல் நீதிமன்றம்.

இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22ஆம் திகதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னவன் முருகேசு என்பவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பேரை பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். சிவசுப்பிரமணியம் தவராசா, கணபதி ராசன், கணேசன் அஜித் ஆகிய மூவருமே சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஆரம்ப விசாரணைகளின் பின்னர் சம்பவம் தொடர்பாக விவரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவை பரிசீலனை செய்யப்பட்டு இதன் வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுவிசாரணை நடைபெற்றது. சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர். இவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான சி.சிவநேசன் மற்றும் ஜே.ஜெயரூபன் ஆகியோர் முன்னிலையாகி வாதாடி வந்தனர். எனினும் உரிய விசாரணைகள் முடிவதற்கு முன்னதாக முதலாவது சந்தேக நபரான தவராசா உயிரிழந்துவிட்டார். ஏனைய இரண்டு சந்தேக நபர்கள் மீதான வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணைகளின் பின்னர் வழக்குத் தொடர்பான தீர்ப்பை நீதிபதி நேற்று அறிவித்தார்.

சட்டத்தரணிகளான சிவநேசன், ஜெயரூபன் ஆகியோரது சமர்ப்பணங்களையும் பரிசீலித்து மூவர் மீதான குற்றச் சாட்டுக்கள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று தெரிவித்து மூவரையும் விடுதலை செய்து நிரபராதிகள் என அறிவித்தது நீதிமன்று. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மின் பெற்ற 9 பேர்

# 6 லட்சத்து 57 ஆயிரம் ரூபா மின்சார சபைக்குக் கட்டினர்

யாழ்ப்பாணம், செப்.14

சட்டவிரோத மின்சாரம் பெற்ற 9 பேருக்கு யாழ்.நீதி மன்றத்தால் 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் சட்டவிரோத மின்சாரம் பெற்றதால் மின் சார சபைக்கு ஏற்பட்ட நஷ்ட ஈடாக 6 லட்சத்து 57 ஆயி ரத்து 770 ரூபாவை மின்சார சபைக்கு செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு யாழ்.நீதி மன்றில் நீதிவான் பெ.சிவகு மார் முன்னிலையில் செவ் வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பகுதிகளில் பொலிஸாருடன் இணைந்து இலங்கை மின்சார சபை யினர் நடத்திய திடீர் பரி சோனையின் போது சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் குறித்த 9 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிவான் முன்னிலையில் முற்படுத் தப்பட்ட போது 9 பேரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

அதன்படி ஒவ்வொரு வரும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று மின்சார சபைக்கு நஷ்டம் ஏற்படுத் திய தொகையாக மின்சார சபையினரால் மன்றில் தனித்தனியே நஷ்ட ஈட்டுத் தொகை குறிப்பிடப்பட்டது.

9 பேருக்கும் 6 லட்சத்து 57 ஆயிரத்து 770 ரூபா நஷ்ட ஈட்டுப் பணமாக மின்சார சபையால் மன்றில் தெரிவிக் கப்பட்டது. அதனை மின்சார சபைக்கு செலுத்து மாறு உத்தரவிட்டு ஒவ் வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபா வீதம் 90 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப் பளித்தது நீதிமன்று. (ம-4)



யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் தேசியப் பாடசாலையில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து. ராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் பாட சாலை அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலையால் வரவேற்கப்படுகின்றனர். (ம)

## கரையோர பாதுகாப்பு சுத்திகரிப்பு தினம் நாளை

யாழ்ப்பாணம், செப்.14

நாடு தழுவிய ரீதியில் கரையோர பாதுகாப்பு சுத்திகரிப்பு தினம் அனுஷ் டிக்கப்படவுள்ளது. 7 வல யங்களாக இந்தக் கடலோ ரங்களின் சுத்திகரிப்பு தினம் நாளை அனுஷ்டிக்கப்பட வுள்ளது.

குறித்த தினத்தில் கடற் படை கலாட்படையினர் இணைந்து இந்தச் சுத்தி கரிப்பு தினத்தை நடை முறைப்படுத்தவுள்ளனர்.

கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் நாடு தழுவிய ரீதியில் உள்ள உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்த வகையில் இதை மேற்கொள் ளவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு கடற்படைத் தளமும் மேற் கொண்ட வேலைத்திட்டங் களின் அறிக்கைகளை வழங்க வேண்டும் எனவும் கோரப் பட்டுள்ளது. (ம-50)

# அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பொருள்களை கொள்வனவு செய்க

## வர்த்தக சம்மேளனம் அறிவுறுத்து

*யாழ்ப்பாணம், செப்.14*

*அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்து வர்த்தகர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.*

யாழ்.மாவட்ட வர்த்தகர் கள் தற்போதும் எதிர்காலத் திலும் ஏற்படும் பிரச்சினை களிலிருந்து விடுபடக் கூடிய வகையில் இந்த வேண் டுகோளை விடுத்துள்ளது.

இது தொடர்பான துண்டுப் பிரசுரத்தையும் வர்த்தகர் மத்தியில் யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம் மேளனம் வெளியிட்டது.

இந்தத் துண்டுப் பிரசு ரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

* வர்த்தகர்கள் தங்களின் வருமானத்துக்கு ஏற்ப திட்டங் களைத் தொடங்க வேண்டும்.

* வர்த்தக நடவடிக்கை களிலும் முதலீட்டு நடவ டிக்கைகளிலும் மற்றும் கடன் பெற்றுத் தொடங்கும் நடவடிக்கைகளிலும் திட்ட மிடல் இல்லாமல் எந்தக் காரணம் கொண்டும் செயற் படுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

* வர்த்தகர்கள் தங்களது நலன் சார்ந்த முதலீடுகளை மேற்கொள்ளும்போது தகுந்த ஆலோசனைகளைப் பெற் றுத் தொடங்குதல் வேண் டும்.

* அளவுக்கதிகமான பொருள்களைக் கொள்வனவு செய்தலைத் தவிர்த்து தங்களது வர்த்தக நிலையம் அமைந்துள்ள சூழலில் மக்களின் தேவைக்கு ஏற்ப பொருள்களைக் கொள்வ னவு செய்தல் சிறந்தது.

* தற்போதைய வட்டி வீதம் நாட்டில் கூடியிருப்ப தால் அதிகமாக கடன்பட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

* வர்த்தகர்கள் வர்த்த நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சட்ட ரீதியாக அத னைச் செயற்படுத்தல் வேண் டும்.

* விலைக்கட்டுப்பாடு, விலைப்பட்டியல் இடுதல் மற்றும் காலாவதியான பொருள்களை விற்பனை செய்தலைத் தவிர்த்தல் போன்றவற்றில் வர்த்தகர்கள் அதி முக்கிய கவனம் செலுத் துதல் வேண்டும் - உட்பட மேலும் பல விடயங்கள் சுட் டிக்காட்டப்பட்டுள்ளன. (ம-14)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் அடையாள அட்டை வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர்பிரிவில் தேசிய அடை யாள அட்டை இல்லாமல் இருப் பவர்களுக்கு யு.என்.டி.பியின் அனுசரணையுடன் அடை யாள அட்டைகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்காக ஒவ்வொரு பிரிவு கிராம சேவையாளர் அலுவலகங்களுக்கும் ஒவ்வொரு பட்டதாரிப் பயிலுநர்கள் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அடையாள அட்டை இல்லா தவர்களது சகல விவரங்களை யும் பெற்று வருகின்றனர். இந்த ஆவணங்கள் தனித் தனியே கோவைகளாக்கி வைக்கப் படவுள்ளன.

இதற்கான சகல விவரங் களும் பெற்றுக் கொள்ளப் பட்ட பின்னர் மாத இறுதி யில் கொழும்பிலிருந்து வருகை தரும் ஆட்பதிவுத் திணைக்களத்தினர் விசார ணைகளை நடத்தி அடை யாள அட்டைகளை உடன் வழங்குவார்கள் என்று பிரதேச செயலர் எஸ்.முரளீ தரன் தெரிவித்துள்ளார்.

இதே போன்று இந்தப் பிரிவில் இறப்பு, பிறப்பு, திருமண அத்தாட்சிப் பத் திரம் இல்லாதவர்களுக்கு கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்ற நடமாடும் சேவையில் உடனுக்குடன் அவற்றின் மூலப்பிரதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# வாழ்வகம் நிறுவுநர் நினைவு தின நிகழ்வு

வலி. வடக்கு, செப் 14

சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் அமைந் துள்ளவாழ்வகம்நிறுவனத்தின் நிறுவுநர் நினைவு தினமும் நினைவுப் பேருரையும் கடந்த செவ்வாய்க்கிழமை நிறுவனத் தலைவர் இ.ரவீந்திரன் தலை மையில் இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் நிறுவ னக் கொடியை நிறுவனத் தலைவர் ஏற்றி வைக்க அதனைத் தொடர்ந்து நிறுவுனர் செல்வி சின் னத்தம்பி அன்னலட்சுமியின் நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து திருவுருவச் சிலைக்கு மாலை களை சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொண்ட உடு வில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், நிறுவ னத்தலைவர் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து மாணவர் களின் நிறுவன கீதம் இசைக்கப்பட்டது. அடுத்து மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் கலந்துகொண்டார். வட மாகாண விசேட கல்வி அலகின் இணைப்பாளர் திருமதி நிசாந்தி பெர் ணான்டோ, வட மாகாண சமூக சேவைகள் பணிப் பாளர் திருமதி ந.இன்பராஜ், தெல்லிப்பழை யூனியன் கல்லாரி அதிபர் கே.இரத் தினகுமார், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ் தானத் தலைவர் ஆறு. திரு முருகன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் வைத்தியகலாநிதி ந.சிவ ராசா நிகழ்த்தினார். (ம-86)

# மத்தியஸ்த சபைகளில் பெண்களின் பங்களிப்பு தேவை

## நல்லூர் பிரதேச செயலர் வலியுறுத்து





யாழ்ப்பாணம், செப்.14

பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ளக் கூடியதாக மத்தியஸ்தர் சபைகளில் பெண்களின் பங்களிப்பு கூடுதலாக இருத்தல் வேண் டும் என்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்த னன் கூறினார்.

மத்தியஸ்தர் சபைகளில் அதிகரித்த பெண்களின் பங்களிப்பு தொடர்பாக நீதி அமைச்சின் அனுசரணை யுடன் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கான கருத் தரங்கு நேற்று வியாழக் கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் நல்லூர் பிரதேச செய லர் பா.செந்தில்நந்தனன் மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்தியஸ்தர் சபைகளில் பெண்கள் அதிகம் பங்கு பெறுவதன் மூலம் பெண் களின் பிரச்சினைகள் இலகு வாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் தீர்வுகாண வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இன்று எல்லாக் கட்ட மைப்புகளிலும் பெண்கள் சரிசம பங்கு வகிக்கும் நிலையில் மத்தியஸ்தர் சபை களில் குறைந்த அளவி லேயே காணப்படுகின்றனர்.

மத்தியஸ்தர் சபை பிரச்சினைகள் தொடர்பாக இருசாராருக்கும் ஒரு இணக் கம் ஏற்படவும் சமரசம் ஏற்படவும் கூடியதாக தனது செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் குறைந்த செலவில் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுகின்றது.

இன்று பெண்கள் பலதரப் பட்ட பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இந்த நிலை யில் அதற்கு சிறந்த தீர்வைக் காணக்கூடியதாக பெண்கள் பங்களிப்பும் மத்தியஸ்தர் சபைகளுக்கு முக்கியமாகும்.

பெண்கள் இதில் அங்கம் வகிக்க வேண்டியது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்து வதே இதன் நோக்கமாகும். சமூக மட்டத்திலும் பெண் கள் சார்ந்த அமைப்புக்களூ டாகவும் ஏனையோருக்கும் இது குறித்து தெரியப்படுத்த வேண்டும்- என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள் இன்று

### கூட்டம்

கைதடி அரச முதியோர் இல்ல நலன்புரி சங்கத்தின் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணிக்கு மாகாண உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் ஆர்.வர தீஸ்வரன் தலைமையில் இல்லத்தின் கேட்போர் கூடத் தில் நடைபெறும். (த-17)

* * *

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக் குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட் டம் காலை 9.30 மணிக்கு பணி மனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

# இலங்கை அகதிகளுக்கு எதிராக சட்டங்களை இறுக்கும் கனடா

## லிபரல் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.14

கனடாவின் தற்போதைய பழைமைவாதக் கட்சி (கொன்சர்வேட்டிவ்) அரசும் அதன் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சர் ஜெய்சன் கென்னியும் கனடாவிற்கு வரும் அகதிகளை கனடாவின் எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். அதுவும் குறிப்பாக இலங்கை போன்ற ஆசிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளை சிறைகளில் அடைக்கும் சட்டங்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதை சட்டமாக்கவும் முயலுகின்றார்கள்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் குடிவரவு தொடர்பான விவகாரங்களுக்கான நாடாளுமன்ற பேச்சாளருமான கெவின் லெமொறொக்ஸ்.

கனடா முன்னர் இங்கு அகதிகளாக வந்த வெளிநாட்டவர்களை வரவேற்பதில் உலக நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியான நாடாக விளங்கியது. உலக நாடுகள் பல, தங்கள் நாடுகளின் அகதிகள் தொடர்பான நடைமுறைகளை அமுல் செய்வதற்கு கனடாவின் வழிகளைப் பின்பற்றின என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட சில நாடுகளிலிருந்து வரும் அகதிகளை மட்டுமே கனடா ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் அமுல் செய்வதில் அமைச்சர் ஜெய்சன் கென்னி மிகவும் கண்டிப்பாகவுள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனி ஒரு மனிதனான அவர் எவ்வாறு அகதிகள் தொடர்பான சட்டங்களை தனது சொந்த விருப்பத்தின் படி செய்ய முடியும் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கனடாவின் ரொறன்ரோ நகரில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தற்போதைய கொன்சர்வேர்ட்டிவ் அரசும் அதன் பிரதமர் ஸ்ரீபன் கார்ப்பரும், கனடா வரும் அகதிகளுக்கும், வெளிநாட்டிலிருந்து வரும் புதிய குடிவரவாளர்களுக்கும் எதிராக பாதகமாக நடந்த கொள்கின்றனர்.

குறிப்பாக அரசின் குடிவரவு அமைச்சர் ஜெய்சன் கென்னி தனது சொந்தக் கருத்துக்களின் படி செயற்பட்டு வருகின்றார். அவரது சி-31 என்னும் புதிய சட்டமானது எதிர்காலத்தில் கனடாவிற்கு வரும் அகதிகளை மிகவும் மோசமாக பாதிக்கவுள்ளது.

அவரது எண்ணத்தின் படி கனடாவிற்கு வரும் அகதிகளை அவர் எதிரிகளாகவே பார்க்கின்றார். அவரைப் போலவே கனேடிய மக்களும் அகதிகளை எதிரிகளாகவே பார்க்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

அத்துடன், அகதிகள் விவகாரம் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள இந்த அரசின் காலத்தில் கனடாவிற்கு குடிவரவாளர்களாக வந்து மூன்று வருடங்களில் கனடிய பிரஜாவுரிமை பெற வேண்டிய ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அரசின் மந்தமான செயற்பாடு காரணமாக மேலும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளது.

அரசின் இந்த செயலானது குடிவரவு அமைச்சர் மீது எமக்கு நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகின்றது. இந்த நாட்டுக்கு வந்து கனடாவிற்கு விசுவாசமாக உழைத்துவரும் வெளிநாட்டவர்களை தாமதமாக குடியுரிமை பெறவைக்கும் சதி என்றே எமது கட்சி கருதுகின்றது. ஏனென்றால் முன்னைய காலத்தில் புதிய குடிவரவாளர்கள் கொன்சர்வேர்ட்டிவ் கட்சிக்கு தங்கள் ஆதரவை வழங்கவில்லை - என்றார்.

இந்தக் கருத்தரங்கில் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும் லிபரல் கட்சியின் பல்கலாசார விவகாரங்களுக்கான பேச்சாளருமான ஜிம் கரிஜியானிஸ் மற்றும் குடிவரவு துறை சார்ந்த சட்டத்தரணி திருமதி அஞ்சலா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 86 பேர் கைது

படகு மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 86 பேரைச் சிலாபம் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். இந்த வருடம் கைது செய்யப்பட்ட சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை 1900 ஆகும்.

நேற்றுக் காலை செனேஷா துவ என்னும் படகில் பயணம் செய்த 58 தமிழர்கள், 9 சிங்களவர்கள் உட்பட 67 பேர் கைது செய்யப்பட்டனர். செலோனி துவ என்னும் படகிலிருந்து 14 தமிழர்கள் 5 சிங்களவர்கள் உட்பட 19 பேர் கைது செய்யப்பட்டனர். சிலாபம் கரையோரத்திலிருந்து 20 கடல் மைல் தொலைவில் இவர்களின் படகுகள் வழிமறிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, சிலாபம், மன்னார், நீர்கொழும்பு, ஆனமடுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் முகத்துவாரம் மீன்பிடித் துறை முகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன் இவர்கள் மேலதிக விசாரணைக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த)

## வல்லிபுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் 30 ஆம் திகதி கேணித் தீர்த்தமும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

பருத்தித்துறையில் இருந்து மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயில், பருத்தித்துறையில் இருந்து தும்பளை ஊடாக வல்லிபுரக் கோயில், யாழ்ப்பாணத்தில் இருந்து வல்லிபுரக் கோயில் ஊடாக பருத்தித்துறை ஆகிய வழிகளில் பஸ் சேவைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-8-78)

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தன்மைக்குப் புறம்பான செயற்பாடுகளை அதன் மீது சுமத்த முயற்சிப்பதானது இந்த அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை ஆபத்தில் தள்ளக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுநலவாயமானது அரசுகளுக்கிடையிலான, தன்னார்வ அடிப்படையில் இணையக்கூடிய ஓர் அமைப்பாகும். எனவே அது ஏனைய நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக தீர்ப்பளிக்கும் தோரணையை ஏற்படுத்துவது சரியானதோ சாத்தியமானதோ அல்ல என அவர் கூறினார். ' என்ன செய்ய வேண்டும் என ஏனைய நாடுகளை பணிக்கும் நிலைப்பாட்டைப் பின்பற்ற முடியாது' என அவர் மேலும் கூறினார். (த)

## தீர்வு தாமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காண்பது தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் குறித்துப் பேசப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளாததன் காரணமாகவே அதன் பணிகள் தாமதமாகி வருவதாக அமைச்சர் சில்வா, அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை இன்று நியமித்தால், தெரிவுக்குழுவின் பணிகளை நாளை முதல் ஆரம்பிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தவிர வடமாகாணத்தில் அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகள், மீள்குடியேற்றம் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சல் சீசனும் கலந்து கொண்டார். (த)

## பொறுப்புக் கூறா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு அக்கறையின்றி இருப்பதாகவும், இதனால் தமிழ் மக்கள் மிகவும் நம்பிக்கையிழந்து விரக்தியான நிலைக்குச் சென்றிருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், பேச்சுமேசைக்கு வருவதற்கு கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றபோதிலும், அரசுக்கு அதில் போதிய ஆர்வமில்லாமல் இருப்பதை அவர்களின் செயற்பாடுகளிலிருந்து அறியமுடிகின்றதென்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் மேலும் இங்கு எடுத்துக்கூறியிருக்கின்றனரெனத் தெரிகிறது.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள றொபேட் ஓ பிளேக், இலங்கையின் மனித உரிமை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் அமைதி முயற்சிகள் பற்றியும் அமெரிக்கா உன்னிப்புடன் அவதானித்துவருவதாகவும், இந்த நிலைமை தொடருமாயின் அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியேற்படுமென்றும் தெரிவித்திருக்கிறாரென அறியமுடிகின்றது.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பதைத் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆதரவை பெற்றுக் கொள்வதற்காக வேறு கட்சிகள் கோரும் அனைத்தையும் வழங்குவதில்லை எனவும் எதனையும் வழங்காமல் எவரும் ஆதரவு வழங்க மாட்டார்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் கூறினார்.எது எப்படி இருந்தாலும் இறுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே ஆட்சியை பிடிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## கிழக்குத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெற்ற நேற்றைய சந்திப்பிலேயே இந்த விடயமும் பேசப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது, நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவு குறித்து பிளேக், அக்கறையுடன் கேட்டறிந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள றொபேட் ஓ பிளேக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பு ஒன்றை மேற்கொண்டது.

இந்தச் சந்திப்பில், முதலாவதாக பிளேக் எடுத்துக் கொண்ட விடயமே, கிழக்கு மாகாண சபைத் தேர்தல்தான். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

அத்துடன், தற்போது கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமைகள் குறித்தும் அவர் கேட்டார். அதற்கு நாம் உரிய விளக்கங்களை வழங்கியுள்ளோம்.

தொடர்ந்து அரசியல் தீர்வு விடயம், வடக்கு கிழக்கில் மீள்குடியேற்றம், தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் குறித்தும், காணாமல் போனோர் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இராணுவ ஆக்கிரமிப்பு, காணி சுவீகரிப்பு மற்றும் இவற்றில் அரசின் தற்போதைய செயற்பாடுகள் குறித்தும் அதிலுள்ள குறைபாடுகள் குறித்தும் பிளேக்கிற்கு நாம் விளக்கமளித்துள்ளோம் - என்றார்.

## பொதுநலவாயக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடும் விமர்சனங்களைத் தெரிவித்து வந்த போதிலும் இந்தக் கூட்டத்துக்கு தமது நாடாளுமன்றக்குழுவை கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது.இந்தியாவும் பெரியதொரு நாடாளுமன்றக் குழுவை இந்தக் கூட்டத்துக்காகக் கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ஆரம்பித்து வைக்கும் இந்தக் கூட்டத்தை புறக்கணிக்குமாறு தமிழகம் அழைப்பு விடுத்திருந்த போதிலும் இந்தியா தனது குழுவைக் கொழும்புக்கு அனுப்பியுள்ளது. எனினும்,இந்தியாவின் நாடாளுமன்றக் குழுவில் தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ஆளும் தரப்புக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காந்தன் இம்முறை மீண்டும் முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர் மீண்டும் முதல்வராக நியமிக்கப்படமாட்டார் என்றும் அரச தரப்பு வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. இதன்படி பிள்ளையான் மாகாண அமைச்சர் பதவியொன்றை மட்டுமே வகிக்கவுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் முதலமைச்சராக யாரை நியமிப்பது என்பது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று ஆராய்ந்த அதேசமயம், மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிட்டு வெற்றியீட்டிய ஹாபீஸ் நஸீர் அஹமட்டை முதலமைச்சர் பதவியில் அமர்த்துவது குறித்து தீவிர ஆலோசனைகள் இதன்போது நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், கட்சியின் தீர்மானம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்திலிருந்து உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## வழங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துரதிர்ஷ்டவசமானதாகும். பொதுநலவாயமானது அரசுகளுக்கிடையிலான பாரிய சக்தியொன்றாகத் தன்னை வரையறுத்துக்கொள்ளத் தவறியதாகக் குற்றம் சுமத்துபவர்களுக்குத் தானே ஆயுதம் வழங்கிய நிலைக்குப் பொதுநலவாயம் தள்ளப்படும் நிலையை இது ஏற்படுத்தும்'' எனப் பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவின் தலைவர் சேர் அலன் ஹசெல்ஹர்ட் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நிகழ்த்திய லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த உரையின்போதே ஹசெல்ஹர்ட் இவ்வாறு கூறினார்.

நல்லிணக்கச் செயன்முறைக்கான தொழில்நுட்ப உதவிகளைப் பொதுநலவாயம் வழங்கும் எனக் கூறிய அவர், தனது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான இலங்கை அரசின் ஆற்றலில் பொதுநலவாயம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தான் அர்ப்பணிப்புடன் இருப்பதைச் சர்வதேச சமூகம் நம்பச் செய்வதற்கு அரசு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்துச் சமூகத்தினருக்கும் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான செயன்முறைக்குக் காலவரையறை ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கோரினார். வெளிப்படைத்தன்மை, சமாதானம், சமத்துவம் என்பன ஜனநாயக ஸ்திரத்தன்மை மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும். எமது மாநாட்டின் கட்டமைப்புக்குள், இதற்கான உத்தரவாதத்தைப் பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்ப்பார்கள்' என அவர் கூறினார்.

இலங்கையின் இறையாண்மையை அத்துமீறுவதற்கு பொதுநலவாயம் முற்படவில்லை எனவும் ஆனால் வெற்றிகரமான உள்நாட்டுத் தீர்வு பூர்த்தியாக்கப்படுவதை காண விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் வரும் சிங்களவர்களுக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பு

## முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை,செப் 14

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் தமிழர்களின் படுகொலையைத் தமிழக அரசு கண்டிக்கும் அதே நேரத்தில் தமிழகத்துக்குப் பயணம் மேற்கொள்ளும் சிங்களவர்களுக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஸ்ரீரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து கூறியுள்ளதாவது,

தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழர்கள் மீது போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும்; தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில்; அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்; மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் துணிச்சலுடன் தீர்மானம் நிறைவேற்றினேன்.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகம் உட்பட இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் இன்னமும் கிடைக்கவில்லை என்பதால், அதற்கு நம் தமிழகத்தின் எதிர்ப்பை, உணர்வுகளை தெரிவிக்கும் வகையில் இலங்கையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்குத் தமிழகத்தில் பயிற்சி அளிப்பதைத்தடை செய்தேன்.

எனினும் இலங்கையிலிருந்து சுற்றுலா, ஆன்மீகப் பயணம் போன்றவற்றிற்காகத் தமிழகம் வருகை தரும் சிங்களவர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படக்கூடாது என்பதில் எனது அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. என்றார் ஜெயலலிதா.(த)

# அரசுடன் இணையுமாறு கடுமையான அழுத்தம்

### ஐ.தே.க. மாகாண உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,செப். 14

பல்வேறு சலுகைகள் வழங்குவதாகக் கூறி, தம்முடன் இணையுமாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தனக்கு அழுத்தம் கொடுப்பதாகத் திருமலையிலிருந்து ஐ.தே.க. சார்பாகக் கிழக்கு மாகாண சபைக்குத் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள இம்ரான் மஹ்ரூப் குற்றம் சுமத்தினார்.

இதைத் தான் நிராகரித்ததாகவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைவதாக வெளியான செய்திகள் பொய்யானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சலுகைகளைப் பகிரங்கப்படுத்தும் நிலையில் தான் இல்லை என ஆளுங்கட்சியினால் வழங்கப்பட முன்வந்ததாகக் கூறப்படும் சலுகைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியதற்கு அவர் தெரிவித்தார்.

'ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரான எனது தந்தை ஏ.ஜி.எஸ் மஹ்ரூப் மேற்கொண்ட சேவைகளை கட்சி மாறாமல் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருந்து மேற்கொள்ளவுள்ளேன்' என இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இந்த மாகாண சபைத் தேர்தலில் 10,045 வாக்குகளைப் பெற்று மாகாண சபை உறுப்பினராக இவர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# தமிழக பயண எச்சரிக்கை விரைவில் தளர்த்தப்படும்

கொழும்பு,செப் 14

இலங்கை யாத்திரிகள் தமிழகத்துக்குச் செல்வது தொடர்பாகத் தற்போது விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு விரைவில் நீக்கப்படுமென ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது கொடர்பாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுடன் தற்சமயம் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குச்சென்ற யாத்திரிகள் அங்கு தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து மக்களின் பாதுகாப்பு நலன் கருதி இலங்கையிலிருந்து தமிழகத்துக்குச் செல்லுவதை இலங்கை அரசு தடை செய்தமை தெரிந்ததே.

இந்தத் தடை உத்தரவு எப்போது தளர்த்தப்படுமென செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார். (த)

# டுபாயில் நகைகளைத் திருடிய இலங்கையர் மூவருக்கு சிறை

வயோதிப பெண்ணொருவரைத் தாக்கிவிட்டு 200,000 டினார் பெறுமதியான நகைகளைத் திருடிய மூன்று இலங்கையர்கள் மீது விதிக்கப்பட்ட இரண்டு வருடச் சிறை தண்டனையை டுபாய் மேல் முறையீட்டு நீதிமன்றம் உறுதிசெய்தது.

இலங்கையைச் சேர்ந்த இரண்டு பணிப்பெண்கள் மற்றும் ஒரு கடைச்சிப்பந்தி (ஆண்) ஆகியோருக்கு டுபாய் குற்றவியல் நீதிமன்றம் இரண்டு வருடச் சிறைத்தண்டனையை விதித்திருந்தது.

மகனின் வீட்டில் பேரக் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தவேளை, கதவில் தட்டும் சத்தம் கேட்டு கதவை திறந்தபோது இரண்டு பெண்களும் ஒரு ஆணும் வீட்டுக்குள் நுழைந்து கதவைப் பூட்டியதாகப் பாதிக்கப்பட்ட வயோதிப பெண் தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

ஒரு பெண் பேரக் குழந்தையைப் பறித்தெடுக்க, ஏனைய இருவரும் தன்னைக் கீழே விழுத்தி முகத்தை துணியால் சுற்றித் தாக்கிய போது தான் மயக்கமடைந்ததாகவும் அரை மணித்தியாலத்தின் பின் தான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது வீடு சின்னாபின்னமாகக் காணப்பட்டதுடன் குழந்தை அறை மூலையில் கிடந்ததாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வந்தவர்கள் தனது மகனின் நகை, தனது நகை, பிள்ளையின் நகை யாவையும் எடுத்து சென்றுவிட்டதை தான் அறிந்து கொண்டதாக அவர் கூறினார். வந்த பெண்களில் ஒருவர் பல தடவைகள் இந்த வீட்டுக்குள் வந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் இந்த இலங்கையர் மூவரையும் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட பெண் இவர்களை அடையாளம் காட்டினார். இலங்கையரான கடைச்சிப்பந்தி தான் இரண்டு பெண்களுடனும் சேர்ந்து இந்தத் திருட்டு நடவடிக்கையை திட்டமிட்டதாக ஒப்புக்கொண்டார். (த)

## இலங்கையிலிருந்து தங்கம் கடத்திய ஏழு பேர் சிக்கினர்

சென்னை,செப். 14

இலங்கையில் இருந்து நேற்றுமுன்தினம் 38 லட்சம் ரூபா மதிப்பிலான தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்த 7 பேரைச் சென்னை விமான நிலைய அதிகாரிகள் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணிக்கு வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானப் பயணி, அகமது மொய்தீன் (வயது-39) மீது அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அவரைச் சுற்றிவளைத்த அதிகாரிகள், தனி அறையில் சோதனை நடத்தினர்.ஆறு பேரிடம் இருந்து, 880 கிராம் தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.




Training

வேலை வாய்ப்பு நிறைந்த

Web Designing
Networking
Multimedia

Type Free <Course><Name> & Sms to 772395895

MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.

Supported by UNDP/JRRP

(சி/3359)

## நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

வடமராட்சி, செப்.14

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய நூற்றாண்டுவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருதினங்களிலும் பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இரா.ஸ்ரீ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதல்நாள் அமர்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதரக அதிகாரி வி. மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எல். நந்தகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் அமர்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.கமலேந்திரனும் கலந்து கொள்வர்.

இதன்போது நூற்றாண்டு மலரும் வெளியிடப்படவுள்ளது. இந்த நூலின் அறிமுக உரையை முன்னாள் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ந.அரியரத்தினமும், வெளியீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவர். (ங-16)

## பெற்றோர் தினம்

யாழ்ப்பாணம்,செப்.14

கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலய பெற்றோர் தின விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேளும் கலந்து கொள்ளவுள்ளனர். (16)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)



மண்டைதீவைப் பிறப்பிடமாவும், இல-45/2, விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்) நேற்று (13.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -சிவக்கொழுந்து தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - நாகமுத்து தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்றவர்களான தம்பி ஐயா, இராமலிங்கம், சிவக்கொழுந்து, தெய்வானை, சின்னத்தங்கச்சி, தங்கம்மா, நாகம்மா, இராசம்மா, துரைசிங்கம் மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணமணியின் பாசமிகு கணவரும் வளர்மதி, மதியழகன் (மலேரியா தடைப்பகுதி கிளிநொச்சி), இந்துமதி (ஆசிரியர் வவுனியா சமளங்குளம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகானந்தம்(ஆசிரியர், யாழ். நல்லூர் இந்து பெண்கள் வித்தியாலயம்), குணரூபன் (ஆசிரியர், கிளி/புன்னைனீராவி வித்தியாலயம் விசுவமடு), சிவதர்ஷினி (மருந்துக் கலவையாளர், கோண்டாவில் வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், தங்கமுத்து, மகேஸ்வரி, பத்மநாதன், விஜயலட்சுமி, நடராசா, கமலாம்பிகை, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிசானா, பிரணவன், சுவாதிகா, மகீபன், கிருஸ்னவி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விசுவமடு 12ம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 45/2, விசுவமடு.

தகவல்:
செ. மதியழகன் (மகன்),
Smathiy@yahoo.com

(22274)(8)

## கண்ணீர் அஞ்சலி



எமது கோயிலின் முன்னாள் தலைவர் அமரர் சுந்தரராமநாதரின் அன்பு மனைவியும், எமது நிர்வாகசபை உறுப்பினர் இ.சரவணமுத்துவின் மாமியுமாகிய

### திருமதி ஞானசவுந்தரி சுந்தரராமநாதர்

13.09.2012 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

( வண். ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்),
(பன்றிக்கோட்டுப்பிள்ளையார்),
கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகசபையினர்.

(22868)(8-14)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தனபாலசிங்கம்

(கங்காணியார்)



பண்ணாகம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தனபாலசிங்கம் நேற்று (13.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும் கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சசிதரனின் (சசி) பாசமிகு தந்தையும் யோகேஸ்வரன், பாலசுந்தரம், குணரட்ணம், பரமேஸ்வரி, இரத்தினராசா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல்:
த.சசிதரன் (மகன்)

(22873)(9.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை



இருபாலையைச் சேர்ந்த சிவஞானம் இராசலட்சுமி என்பவரை கடந்த 10.09.2012 தொடக்கம் காணவில்லை. இவர் புத்திசுவாதீனம் உடையவர். இவரைக் கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(22880)(5-6-7) தொடர்பு: 077 160 5833

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா மார்க்கண்டு



உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாற்றைப் .பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா மார்க்கண்டு நேற்று (13.09.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் சங்குவதி தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான முருகன் - குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் பாசமிகு மனைவியும், கௌசலாதேவி, சந்திராதேவி, மகேஸ்வரன், மதிவதனன், மணி, தங்கேஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், குணபாலசிங்கம், யோகநாதன், அஜந்தா, தேவசோதி, சுகுணலோஜினி, தர்சினி ஆகியோரின் அன்புமாமியும், தர்மலிங்கம், மாசிலாமணி, பாக்கியம், தங்கக்கட்டி, நேசமணி, சின்னராசா, பூபதி, கோசலாதேவி, கனகரெத்தினம், கந்தசாமி, சின்னக்கிளி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2012) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

(18746)(6-7-8)

## புனித சூசையப்பர் ஆலயம் சேதமடைந்து காணப்படுகின்றது

முல்லைத்தீவு, செப்.14

முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயம் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மிகவும் பழமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயமாக காணப்படும் புனித சூசையப்பர் தேவாலயம் கடந்த இறுதிப்போரின் போது மிக மோசமாக சேதமடைந்தது.

மேலும் புனித சூசையப்பர் ஆலயத்தினை சூழ அமைந்திருந்த திருக்குடும்ப கன்னியர் மடம் மற்றும் ஜே. ஆர்.எஸ் அகதிகள் பணி அலுவலகம் , விடுதிகள் என் பனவும் மிக மோசமான முறையில் சேதமடைந்து காணப்படுகின்றன. (எ-6)

## வலி கிழக்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கோப்பாய்

பொதுச்சபைக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின்புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான பொதுச் சபைக் கூட்டம் 1972 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க கூட்டுறவுச்சங்கங்கள் சட்டத்தில் 61 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் கூட்டுறவுச்சங்க விதி 18(1) கீழ் எதிர்வரும் (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கனக் கடன் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே சகல அங்கத்தவரும் இவ் அறிவித்தலை தனிப் பட்ட அழைப்பாக ஏற்று இக் கூட்டத்திற்கு தவறாது சமூகம் தந்து வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஸ்ரீ குகதீப்,
அதிகாரமளிக்கப்பட்ட கூட்டுறவு
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

(சி/3362)(8.14)

இந்தியாவுக்கு
கொழும்பு- மதுரை -கொழும்பு
7500/= Return
வண்ண வண்ண சேலை கட்டும் மீனாட்சி மதுரையிலே
நாங்கள் போகலாம் நேஷன் ரவல்ஸ்னிலே
எண்ணமெல்லாம் உங்கள் கையினிலே!
3DAY 2NIGHT
விமானப்பயணச்சீட்டுக்கள், தங்குமிடவசதிகள், 16925/= +Tax
பயணஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொலைபேசியூடாக பதிவுசெய்யலாம்
Through telephone you can preregister for the seat.
Nation Popular Travels & Tours
#82பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக)
www.nationtravels.com
Hot line 0114651199 Jaffna 0214920920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

# மரண அறிவித்தல்

## ஜோசவ் அல்பிரட் (இராசிங்கம்)



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசவ் அல்பிரட் நேற்று முன்தினம் (12.09.2012) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தேயு ஜோசவ்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மரினாவின் (டக்கி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, லூர்ந்தம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் ஜோண்சிங்கம் காலஞ்சென்ற வன்னியசிங்கம் (டேவிட்) மற்றும் இராசமலர், இராசமணி (பட்டு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நீல்மரின், நொயலின்மரின் காலஞ்சென்ற நொயல்மரின் மற்றும் நெல்சிமரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மொனிக்கா, ஜெயரூபன் ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனோஜா மலர்விழி, ஜெயோல்மரின், நொயல்மரின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

(22872)(9.14)

தகவல்:
யோ.யோண்சிங்கம்
(சகோதரன்)

# முதலாம் ஆண்டு நினைவு

பிறப்பு 13 * 05 * 1945



இறப்பு 28 * 08 * 2011

## செல்லையா பற்குணதேவி

ஆலமரத்தினை போல் ஆறநிழல் தந்து
அன்பு காட்டி அரவணைத்த என் அன்னையே
ஆறாத்துயருடனே ஆண்டொன்று கழிந்ததம்மா
அற வழிகாட்டி ஆளாக்கிய தெய்வமே
காணோமே உனை இங்கு கலங்குகின்றோம் தாயே
எப் பிறப்பானாலும் நீயெங்கள் அன்னையாக
வேண்டுமம்மா
நாம் உந்தன் பிள்ளையாக வேண்டும்
அழியாத உன் ஆத்மா சாந்தியடைந்திட
வேண்டுகிறோம்
நம் குல தெய்வங்களை


கரணவாய் மேற்கு,
கல்லுவம், கரவட்டி.

செல்லையா (கணவர்)
, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சோமசுந்தரம்

(இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன கற்குழி (குவாரி) பகுதி முன்னாள் ஊழியர்- காங்கேசந்துறை)



காரைநகர், புதுறோட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோமசுந்தரம் நேற்று முன்தினம் (12.09.2012) புதன்கிழமை மாலை நான்கு மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான சுப்பிரமணியம்- தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சரவணமுத்து -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்றவர்களான சின்னத் தங்கம், பூரணம், செல்வராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும் சரோஜாதேவி, இராஜேந்திரன் (சந்திரன்- லண்டன்) சாவித்திரி தேவி (சாரதா -லண்டன்) இராஜசுந்தரம் (நடனம் -லண்டன்) சாரதாதேவி (ராணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருநாவுக்கரசு (திரு வீடியோ அன் போட்டோ) புஸ்பராணி (ராணி- லண்டன்) ஞானசேகரம் (லண்டன்) பிரிய தர்சினி (பிரியா -லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அரவிந்தன் (லண்டன்) அருட்செல்வன் (தயா) அருட்குமார் (கண்ணம்மா) புஸ்பராணி, சஜிந்தன் (லண்டன்) சாரா (லண்டன்) திவாகர் (லண்டன்) அபிநயா (லண்டன்) பிரியங்கா (லண்டன்) மிதுலா, அபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுறோட்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர் அ.திருநாவுக்கரசு
(திரு.வீடியோ அன் போட்டோ இலங்கை)
S. இராஜேந்திரன்
(சந்திரன் -லண்டன்- 00442089654223 ,00447440026826)

(c/3361)(8.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அதுவும் அவசியமானதே....!

நாட்டின் தலைநகர் கொழும்பில், இப்போது பொதுநலவாய நாடாளுமன்றங்கள் சங்கத்தின் ஐம்பத்தெட்டாவது மாநாடு நடைபெற்று வருகிறது.

அந்தச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளைச் சேர்ந்த 850 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் மாநாடு முன்னதாக 2009 ஆம் ஆண்டில், போர்ட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்றது. அவ் வேளை, அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் உச்சிமா நாட்டில், சிவில் சமூகத்தைச் சேர்ந்த பதினொரு உறுப்பினர்கள் கொண்ட குழுவினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

106 பரிந்துரைகளை உள்ளடக்கிய அந்த அறிக்கையில், பொதுநலவாய நாடுகள் சார்பில் ஜனநாயகம் மற்றும் மனிதஉரிமைகள் தொடர்பான உயர்ஸ்தானிகர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

அதற்குப் பின்னர், பொதுநலவாய நாடாளுமன்றங்கள் சங்க உச்சி மாநாடு கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற வேளை, அந்தப் பிரேரணை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது, இலங்கை அரசு அதற்குப் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

அதே கொள்கையையே இப்போதும் எமது நாட்டு அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கிறது.

கொழும்பில் இப்போது நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றச் சங்கத்தின் மாநாட்டிலும் இது விடயத்தில் அரச தரப்பு தூக்கி எறிந்து நடந்துள்ளது.

அதாவது–

ஜனநாயகம், சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி, மனித உரிமைகள் பேணப்படுவதன் அத்தியாவசியம் ஆகியன பொது நலவாய நாடுகளால் உரிய முறைப்படி பேணப்படுகின்றனவா, கண்காணிக்கப்படுகின்றனவா என்பதனை அவதானிப்பதற்கு உயர் ஆணையர் ஒருவரை நியமிப்பது குறித்து கொழும்பு மாநாட்டில் ஆராயப்பட்டது; விவாதிக்கப்பட்டது.

இலங்கை அரசதரப்பில், அமர்வில் பங்குபற்றிய அமைச்சர்கள் நிமல் சிறிபால டி.சில்வா, ஜி.எல்.பீரிஸ், சரத் அமுனுகம, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார் ஆகியோர் அதற்குத் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஆனால் குறிப்பிட்ட பிரேரணைக்கு பிரிட்டன், கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஆதரவு அளித்தன.

அதேபோன்று, இலங்கை சார்பில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜயலத் ஜயவர்த்தன, ஜோன் அமரதுங்க, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் ஆதரவளித்தனர்.

எனினும், இந்த விடயம், நியூயோர்க்கில் நடைபெறவுள்ள அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் மாலைதீவு விவகாரத்துக்கு அடுத்ததாக ஆராயப்படும் என்று அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தகவல் வெளியிட்டார்.

எதுவோ,

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தை, ஒரு சக்திவாய்ந்த அனைத்துலகப் பேரவையாக இலங்கை கணக்கில் எடுக்கவில்லை. அதில் அங்கம் வகிப்பது நாட்டின் பெயர் விளம்பரத்துக்கு மட்டுமே என்ற தோரணையிலேயே அது நடந்துகொண்டதாகத் தோன்றுகிறது.

பொதுநலவாயம் என்பது ஐ.நா.போன்ற அமைப்பல்ல. அதற்குச் சட்டங்கள், சாசனங்கள் எதுவுமில்லை. பிரிட்டனின் குடியேற்ற நாடுகளாக இருந்தவை, தம்முள் ஒற்றுமையை உருவாக்கும் நோக்குடன் உருவாக்கிய அமைப்பே அது. எனினும் அது, தனது அங்கத்துவ நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட முடியாது என்பதே இலங்கையின் நிலைப்பாடு-என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் துலக்கி, மினுக்கி விளம்பியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கும் எதிர்பார்ப்பும் பின்வருமாறு அமைந்துள்ளது:

*ஜனநாயகத்தின் உயிர்ப்பான பெறுமானங்களைப் பலப்படுத்துவது குறித்து நாம் அதிகளவில் அக்கறைகாட்ட வேண்டும். எமது வேலைத் திட்டங்கள் வெறும் கோட்பாடுகள், தேற்றங்களுடன் நின்றுவிடக்கூடாது. மக்களைப் பாதிக்கும் நடைமுறைப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி அவற்றைத் தீர்ப்பதிலேயே அதி கவனம் செலுத்த வேண்டும்.

*மக்களின் நலன்களுக்கே எமது செயற்றிட்டங்களில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். மக்களின் சமூக நலன்கள், பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவற்றை இலக்குவைத்து நாம் செயற்பட வேண்டும்.

*ஜனநாயகப் பாதையில் நடந்து எமது நாடு கண்ட வளர்ச்சிகளையும் வெற்றிகளையும் மனதில் கொள்ள வேண்டும்.

*மொத்தத்தில், அபிவிருத்தி இல்லாமல் சமாதானம் மலர்வது கடினம். அமைதி இல்லாமல் அபிவிருத்தி காணமுடியாது என்று ஜனாதிபதி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

*பொதுநலவாய நாடுகள் தமது பாரம்பரியங்கள், கலாசாரங்களில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. நாம் மற்றவர்களுடன் சகல வகைகளிலும், விதங்களிலும் மாறுபட்டவர்களாக இருப்பினும், மற்றவர்களிடம் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு செயற்பட்டால் மட்டுமே உண்மையான ஜனநாயகம் வளரும், என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி உள்ளார்.

நல்லது–

இத்தகைய "தத்துவங்கள்" கேட்பதற்குச் சுவையாகவே இருக்கும். ஆனால், இந்த நாட்டில் தமிழ் மக்கள் ஜனநாயகத்தை முழு அளவில், செயலளவில், அனுபவிக்க வகையுண்டா என்பதற்கு நீண்ட காலமாகப் பதில் இல்லாமலே தொடர்கிறது.

நாட்டின் பாரம்பரியம் மற்றும் அதற்குள்ள தனித்துவத்தைப் பேணுவதில் காட்டப்படும் இயல்பும் விருப்பமும், வரவேற்கத்தக்கதே. ஆனால், தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய, அவர்களிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமைகளை வழங்குவதில் ஆறு தசாப்தங்கள் ஆகியும் இன்னமும் தாமதம் காட்டப்படுவதன் அர்த்தம் என்ன? தெற்கின் அரசியல் தலைவர்கள் அதனையும் வெளிநாட்டவர்களுக்குத் தெரியப்படுத்துவது அவசியமானதே....!

நாட்டின் ஒரு பிரிவு மக்களுக்குரிய உரிமைகளை முழு அளவில் வழங்காமல், சகல பிரசைகளும் சேர்ந்து உழைப்பதற்கு முழு அளவில் வகை செய்யாமல், ஜனநாயக விழுமியங்களை முழுங்கிக்கொண்டு, அரைகுறையாகத் தொட்டுக் காட்டுவதனால் சர்வதேசங்கள் தனித்தோ, கூட்டாகவோ இலங்கைக்கு கைகொடுத்து உயர்த்திவிட வேண்டும் என்று எண்ணுவது உரிய பலனைத் தந்துவிடாது.



# மோட்டார் வாகன வருடாந்த வரியை இனிமேல் உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் அபராதம்

## வர்த்தமானி மூலம் அறிவிப்பு

நவாலி,செப்.14

மோட்டார் வாகனமொன்றின் வருடாந்த வரிக்கட்டணத்தை வாகன உரிமையாளர் குறித்த திகதிக்குள் செலுத்தத் தவறினால் தண்டப் பணமாக மேலதிக தொகை செலுத்த வேண்டுமென்று மோட்டார் வாகன திணைக்களத்தினால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதி முறை கடந்த 2011 ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது என்று 2011 ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த ஒரு வாகனத்தின் வரிப்பணம், குறித்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செலுத்துமிடத்து வழமையான கட்டணத்தின் இருபது வீதமும், அத்துடன் குறித்த திகதியிலிருந்து ஓராண்டுக்குப் பின்னர் செலுத்தப்படும் போது வழமையான கட்டணத்தின் முப்பது வீதமும் அறவிடப்படும்.

மோட்டார் வாகனமொன்றை உடமை மாற்றம் செய்யும் போது, மாற்றிய திகதியிலிருந்து பதினான்கு நாள்களுக்குள் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்காது விட்டால் கழிந்த ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபா வீதம் வழமையான கட்டணத்துடன் சேர்த்து மேலதிகமாக செலுத்த வேண்டும் என்று போக்குவரத்து அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையை பலரும் தெளிவாக அறியாமையால் பிரதேச செயலகங்களில் மோட்டார் வாகனப் பிரிவில் உத்தியோகத்தர்கள் நீண்ட நேரம் வாகன உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனவும் கூறப்பட்டது. (ம-100)

# தென்பகுதி தனியார் நிறுவனங்கள் கட்டாயப்படுத்தி பொருள் விநியோகம்

## குடாநாட்டு வர்த்தகர் கடனில் மூழ்க இதுவே காரணம்

### என்கிறார் வர்த்தக சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம்,செப்.14

தென்பகுதியைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் கட்டாயப்படுத்தல் மூலம் வர்த்தக நிலையங்களுக்கு விற்பனைப் பொருள்களைக் கடன் அடிப்படையில் வழங்கி வருகின்றன. இதனால் குடாநாட்டு வர்த்தகர்கள் கடன்களை மீளச் செலுத்த முடியாமல் கடைகளை மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் இவ்வாறு தெரிவித்தார்.

குடாநாட்டு வர்த்தகர்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகங்களுடன் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தென்னிலங்கையிலிருந்து வியாபாரப் பொருள்களை கடன் அடிப்படையில் வழங்கும் தனியார் நிறுவனங்களின் வருகையும் அதிகரித்துள்ளன. இந்தத் தனியார்நிறுவனங்கள் வர்த்தக நிலையங்களுக்கு கடன் அடிப்படையில் கட்டாயப்படுத்தல் மூலம் பொருள்களை வழங்குகின்றன.

வர்த்தகர்களும் கடன் என்பதால் எதைப் பற்றியும் யோசிக்காமல் பொருள்களை வாங்கி சந்தைப்படுத்த முடியாமல் காட்சிக்கு வைத்துள்ளனர்.

கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட பொருள்களுக்கான கால எல்லை முடிவடைந்தவுடன் வட்டியுடன் கொள்வனவுக்கான பணத்தையும் செலுத்த முடியாமல் சொத்துக்களை அடமானம் வைத்து மேலும் மேலும் கடனாளிகளாகவே மாறிக் கொண்டிருக்கின்றனர்.

இதனைவிட குடாநாட்டில் 120 இற்கும் மேற்பட்ட வங்கிகள் சேவை வழங்குகின்ற போதும் தற்போது முன்னறிவித்தல் எதுவுமின்றி வர்த்தகர்களுக்கு கடன் வசதிகள் படிப்படியாக குறைக்கப்பட்டு முற்றாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் வர்த்தகர்கள் கடைகளை பூட்ட வேண்டிய நிலையில் உள்ளனர். இதனைவிட வங்கிகளில் வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் கடன்களை மீளச் செலுத்த முடியாதவர்களாகவும் உள்ளனர்.

வர்த்தகர்களின் தொழில் நடவடிக்கைகள் பொருளாதார ரீதியாக பாதிப்படையாத வகையில் வங்கிகள் குறைந்த வட்டியில் தொழில் முயற்சிக் கடன்களை வழங்க வேண்டும். -எனவும் தெரிவித்தார். (ம-14)

# கிழக்குத் தேர்தலின் பின் இந்தியாவின் வகிபாகம் என்ன

## இப்படிக் கேட்கிறார் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பாஸ்கரா

நடந்து முடிந்த கிழக்கு மாகாண தேர்தலின் பின் இந்தியாவின் பங்கு எவ்விதத்தில் அமையவுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த பல தசாப்த காலமாக வடக்கு கிழக்கு மாகாண தீர்வு விடயங்களுக்காக இந்தியா தனது ஆதிக்கத்தை ஆங்காங்கே செலுத்தி வந்தது தெரிந்ததே.

கடந்த முறை தேர்தலில் கூட தமிழ் பிரதிநிதி முதலமைச்சராக வருவதற்கு மறைமுக இந்தியத் தலையீடு இருந்ததை தட்டிக் கழிக்க முடியாது.

அதுமட்டுமன்றி ராஜீவ்காந்தி, ஜெயவர்த்தனா கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் வடக்கு, கிழக்கு இணைந்த மாநிலம் என்பது தெட்டத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இலங்கையில் இந்திய இராணுவ ஆதரவுடன் வடக்கு, கிழக்கு முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் தமிழ் ஈழம் பிரகடனம் செய்து இலங்கையில் இருந்து வெளியேறியது போன்ற எல்லா நிழ்வுகளிலும் இந்தியத் தலையீடு இருந்ததை மறுதலிக்க முடியாது.

காலப்போக்கில் இலங்கை அரசு வடக்கு கிழக்கை தனி மாநிலமாக்கிய போது கூட இந்தியா தனது அதிருப்தியை தெரிவித்ததைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்கத்தேய நாடுகளின் பிரசன்ன அரசியலில் தீர்வு முயற்சிகளின் போது கூட இந்தியா முக்கிய பங்கு வகித்துள்ளது.

இப்படியான சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்தில் தற்போது தமிழ் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் சார்ந்த கூட்டணி ஆட்சி அமைக்காது அரசு சார்ந்த கூட்டணி அமைவானது இந்தியாவின் இலங்கை சார்ந்த கொள்கை முன்னெடுப்பில் பெரிய முட்டுக்கட்டையும் இலங்கை தேசிய இனப்பிரச்சினை தீர்வில் பெரிய பின்னடைவும் ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும்

இதனைக் கருத்தில் கொண்டு இந்தியா சில தீர்க்கமான முடிவு எடுப்பது காலத்தின் தேவையாகும்.-என்கிறார். (ம)

# உழவு இயந்திர அச்சு உடைந்ததில் விபத்து



கொழும்புத்துறை, செப்.14

உழவு இயந்திரத்தின் அச்சு உடைந்ததில் மினி பஸ்ஸுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கொழும்புத்துறை சுவாமியார் வீதிச் சந்தியில் இடம் பெற்றது.

யாழ்.மாநகர சபையின் கழிவு அகற்றும் உழவு இயந்திரத்தின் அச்சு உடைந்ததிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. இதன் போது பாடசாலை சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ்ஸின் முன் பகுதி சேத மடைந்தது.

சுவாமியார் வீதியில் இருந்து குப்பைகளை ஏற்றிக் கொண்டு வந்த உழவு இயந்திரம் கொழும்புத்துறை வீதியூடாக வந்த பஸ்ஸுடன் மோதியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-135)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்த மக்கள் வெடிபொருள் அச்சத்தில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்கள் தாம் தினமும் வெடிபொருள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**வீடுகளின் இடிபாடுகளுக்கிடையில் பெருமளவு ஆபத்தான வெடிபொருள்கள் காணப்படுவதாகவும் மீள் குடியமர்ந்த மக்கள் தெரிவிக் கின்றனர்.**

இறுதிப் போரின்போது உக்கிர சண்டைகள் இடம்பெற்ற பகுதிகளான ஆனந்தபுரம், கோம்பாவில், மந்துவில், மல்லிகைத்தீவு, இரணைப்பாலை ஆகிய பகுதிகளிலும் முள்ளிவாய்க் கால் வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை மாத்தளன் ஆகிய பகுதிகளிலும் பொது மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்யும்போது பல்வேறு வகையான வெடிபொருள்களைக் கண்டுள்ளனர். இவை தொடர்பாக உரியவர்களுக்குத் தகவல்கள் வழங்கப்பட்டு அவை அகற்றப்பட்டு வருகின்றன. இதைவிட குப்பைகளை எரிக்கும்போதும் பல வெடிப்புச் சத்தங்கள் கேட்கின்றன.

இதைவிட ஆனந்தபுரம் பகுதியில் கிணறுகளைத் துப்புரவு செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் தங்களது வீடுகளின் இடிபாடுகளுக்கிடையில் பெருமளவு ஆபத்தான வெடிபொருள்கள் காணப்படுவதாகவும் மீளக் குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 8ஆம் திகதி மீள்குடியமர்வு இடம்பெற்ற ஆனந்தபுரம் பகுதியில் வீடுகளை அமைப்பதற்கென காணியைத் துப்புரவு செய்த போது இரண்டு வீடுகளில் ஆபத்தான நிலையில் மண்ணுள் புதையுண்ட நிலையில் வெடி பொருள்கள் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## வவுனியா தெற்கு பள்ளிகளில் டெங்கு ஒழிப்புக்கு உத்தரவு

நெளுக்குளம், செப். 14

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அண்மையில் வவுனியா நகரப்பகுதியில் பல டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இதனை வவுனியா பொதுவைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியதையடுத்து வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் டெங்கு நோயைக் கட்டுபடுத்துவதற் குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில நாள்களாக வவுனியா நகரப்பகுதியில் பல டெங்குநோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. எனவே இந்த நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றை உரிய முறையில் அழிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஊழியர்களை டெங்குநோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முடியும். மேலும் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அறிக்கை வடிவில் வாராந்தம் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கவும்-என்றுமுள்ளது. (க- 402)

## பாதிப்புக்களை மதிப்பீடு செய்யும் கலந்துரையாடல் மன்னாரில்

மன்னார்.செப், 14

மன்னார் மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பீடு செய்யும் அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது .

மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்டி டிமெல் தலைமை தாங்கினார்.

இந்த கலந்துரையாடலில் விவசாயத் திணைக்களத்தின் பிரதிநிதிகள், கால்நடை மருத்துவர்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது மன்னாரில் ஏற்பட்ட கடும்வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், விவசாயம் மற்றும் கால்நடைத் துறையில் ஏற்பட்ட இழப்புக்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## கடும் வறட்சியால் முசலி மக்கள் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேசசெயலர் பரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கடும் வறட்சிகாரணமாக 550 ஏக்கர் விவசாய செய்கை பாதிப்படைந்துள்ளதுடன் மக்கள் குடிதண்ணீர் இன்றியும் அவதிப்படுகின் றனர்.

அதில் பாண்டாவெளி . பூனைச்சிக்குளம். வெளிமல ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் கடந்த 4 வருடகாலமாக மீள்குடியமர்ந்த மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடிதண்ணீர் இல்லாத பிரச்சினை தொடர்பில் இதுவரை முசலி பிரதேச சபை மற்றும் பிரதேச செயலர் பிரிவோ எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கும் உதவிகளைக் கூட முசலி பிரதேசமக்கள்இதுவரை பெற்றுகொள்ளவில்லை என்று மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (எ-12)

## நாவறண்டு அலையும் காட்டு மிருகங்கள்

துணுக்காய், செப்.14

துணுக்காயில் தற்போது நிலவிவரும் கடும் வறட்சியான சூழ்நிலையால் மனிதர்கள் மட்டுமன்றி காட்டு மிருகங்களும் குடிதண்ணீர் தேடி வருவதைக் காண முடிகின்றது.

குறிப்பாகக் காட்டு மிருகங்கள் பெரும் அவல நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள குளங்கள் வற்றியமையால் குளக் கட்டுக்களை வந்துசேரும் இந்த மிருகங்கள் நீரில்லாத குளத்தை வெறித்துப் பார்ப்பதையும் காணமுடிகிறது.

துணுக்காய் பிரதேச சபையினர் இரண்டு பவுசர்கள் மூலமாக 20 கிராம அலுவலர் பிரிவுகளில் குடிதண்ணீரை வழங்கி வருவதால் மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துகாணப்படுகின்றனர்.

ஆனால் மிருகங்களின் நிலைதான் மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. தொடர்ந்து இந்த நிலை நீடிக்குமாயின் ஏராளமான மிருகங்கள் இறந்து விடுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-415)

## மின்சாரத்துக்காக ஏங்கும் குஞ்சுக்குளம்

துணுக்காய் ,செப். 14

யோகபுரம் மத்தி கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட குஞ்சுக்குளம் கிராம மக்கள் மின்சாரத்தை பெற முடியாத நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநகர் பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் நீளம் வரையான பகுதிக்கு மின் கம்பிகள் இழுக்கப்பட்டுள்ளதாகவும் இன்னமும் 700 மீற்றர் தூரத்திற்கு மின்கம்பங்கள் நடப்பட்டுக் கம்பிகளும் இழுக்கப்பட்டால் தாம் மின்னிணைப்பை பெறமுடியுமென இங்குள்ள 20 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தெரிவித்துள்ளன

இந்த விடயம் தொடர்பாகத் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் தாம் தெரிவித்துள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.



இந்தக் கிரராமத்தில் பாடசாலை செல்லும் மாணவர்கள் பலர் உள்ளனர். இவர்களுள் 20 க்கும் மேற்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களும் அடங்குவர்.

இவர்கள் அனைவரும் குப்பி விளக்கின் உதவியுடனேயே தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

தமது அவலநிலையை உணர்ந்து மின்சாரத்தை வழங்கியுதவுமாறு இந்தக் கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க- 415)

## மீன்வாடியை சேதப்படுத்தியவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துக

மன்னார் உப்புக்குளம் கோந்தைப்பிட்டி இறங்கு துறையில் உள்ள ஜோசப் வாஸ் நகர் மீனவர்களின் மீன்பிடி வாடிகளை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றில் இந்தச் சம்பவம் தொடர்பான பி396-12 எனும் இலக்க வழக்கினை விசாரணைக்கு எடுக்குமாறு நகர்தல் பத்திரம் ஒன்றினை தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து மன்னார் நீதிமன்றில் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கடந்த ஜூலைமாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் கடந்த ஜூலை மாதம் 18ஆம் திகதி மன்னார் நீதிமன்ற கட்டடம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது கைதாகி தற்போது அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளதாக மன்னார் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்த னர்.

மேலும் சந்தேக நபர்களை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு அனுராத்புரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மன்னார் நீதிவான் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சந்கேக நபர்களில் ஒருவருக்கு மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல்,மன்னார் ஊடகவியலாளர்களுக்கு மிரட்டல் விடுத்தமை மற்றும் மன்னார் கோந்தைப்பிட்டி மீன்பிடி வாடிகள் தாக்கப்பட்டமை தொடர்பான 3 வழக்குகள் மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-12)

## வவுனியாவின் கிராமப்பகுதிகள் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் அவதி

வவுனியா பிரதேசத்திலுள்ள பல இடங்களில் என்றும் இல்லாதவாறு தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

நெளுக்குளம், காத்தான் கோட்டம், ஊர்மிலா கோட்டம், வேப்பங்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பல கிணறுகள் வற்றிய நிலையில் காணப்படுகின்றன . சுமார் 75க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் காத்தான் கோட்டத்தில் ஒரு கிணற்றில் மட்டுமே குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. குளிப்பதற்கும், வீட்டின் ஏனைய தேவைகளுக்கும் வேறு கிணறுகளை நாட வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

இவர்களில் பலர் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்டவரிசையில் காத்து நிற்பதையும் காணக்கூடிய தாக உள்ளது. அத்துடன் கொளுத்தும் வெயிலில் சிறுவர் முதல் பெரியவர் வரை குடம், வாளி என்பவற்றுடன் நீரைத் தேடி தூர இடங்களுக்கும் செல்கின்றனர். ஓரளவு வசதி படைத்தவர்கள் பணத்தைக் கொடுத்து நீரைப் பெற்றுவருகின்றனர். ஆனால் இக்கிராமத்தில் வசிக்கும் பெருமளவான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதனால் பணத்தைக் கொடுத்து நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இதனைத் தேடி அலைந்து வருகின்றனர். மேலும்தற்போது நிலவும் கடுமையான வறட்சி நீடிக்க கூடிய சூழ்நிலை காணப்படு வதால் குடிதண்ணீருக்கு முற்றாக தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகலாம் என அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-400)

## வவுனியா தமிழ்ச்சங்கத்தின் பாரதிவிழா 16ஆம் திகதி

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் வவுனியா வைரவ புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆதி விநாயகர் ஆலயக் கலா மண்டபத்தில் தமிழருவி சிவகுமாரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

மங்கல விளக்கை சண்முகம் தபேந்திரன், திருமதி தபேந்திரன் ஜெயந்தி ஆகியோர் ஏற்றி வைப்பர். வரவேற்புரையை வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் ஆற்றுவார். தொடக்க உரையை சமூக பெரியார் இரா. சுப்பிரமணியம் ஆற்றவுள்ளார். மாணவர் உரைகளும் இடம்பெறவுள்ளன.

இசையரங்கில் 'நமக்குத் தொழில்கவிதை' என்னும் பாரதியார் பாடல்கள் இசைக்கப்படவுள்ளன.

சிறப்பு நிகழ்வாக ''மெல்லத் தமிழினிச்சாகும்'' என்ற பாரதியாரின் ஏக்கம் கனவாகிக் கலையுமா? நிஜமாகி நிலைக்குமா என்ற பொருளில் பட்டிமன்றம் இடம் பெறும். இப்பட்டி மன்றத்தின் ''கனவாகிக் கலையும்'' என்ற தலைப்பில் சி.வரதராஜன், சோ.தர்மபாலன், க.தியாகலிங்கம் ஆகியோரும் ''நிஜமாகி நிலைக்கும்'' என்ற தலைப்பில் திருமதி த.நிறைமதி, வீ.பிரதீபன், ச.கருணாகரன் ஆகியோரும் வாதிடுவர். இப்பட்டிமன்றத்துக்கு நடுவராகப் பிரதேச செயலரும் கவிஞருமாகிய அ.சிவபாலசுந்தரன் கடமையாற்றவுள்ளார். (க-402)

## வவுனியா சிறுவர் இல்லங்களில் உள சமூக மேம்பாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.14

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறார்களுக்கு உளசமூக மேம்பாட்டை ஏற்படுத்தும் வகை யில் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன என்று மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து சிறுவர் இல்லங்களிலும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை இது தொடர்பான நிகழ்வு கள் நடத்தப்படவுள்ளன.

தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறும். வவுனியா மாவட் டத்தில் 15 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிகழ்வுகளை 'சர்வோதயம்' நிறுவன உதவியுடன் தேசிய பாதுகாப்பு அதிகாரசபை ஏற்பாடு செய்துள்ளது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட நிதியில் இரண்டாம் கட்ட வீடமைப்பு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.14

யாழ். மாவட்டத்தில் உள்ள நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களுக்கு வீடமைப்பு அதிகார சபை விசேடமாக ஒதுக்கப்பட்ட 40 மில்லியன் ரூபாவில் இருந்து இரண்டாம் கட்ட வீட்டுக்கடனை வழங்கவுள்ளது என்று மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களுக்கான வீட்டுக் கடன் திட்டத்தில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில் 10 வீடுகள் தரம் உயர்த்தலுக்கும் ஒரு புதிய வீட்டுக்கும் என 3.7 மில்லியன் ரூபாவும், ஒரு கிராமம் ஒரு வீடு என்னும் திட்டத்தில் 12 புதிய வீடுகளுக்கும் 13 தரம் உயர்த்தலுக்குமாக மொத்தம் 25 வீடுகளுக்கும் 10.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-13)

## ஒளி பெற்றது முற்றவெளி

யாழ்ப்பாணம், செப்.14

கடந்த சில நாள்களாக இரவில் இருளில் மூழ்கிய முற்றவெளிப் பிரதேசம் மீண்டும் ஒளிபெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் பழுதடைந்த வீதி மின் விளக்குகள் அகற்றப்பட்டு அவற்றுக்குப் பதிலாக புதிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. யாழ்.முனீஸ்வரன் கோயிலடி, வீரசிங்கம் மண்டபத்தை அண்மித்த பகுதி, தனியார் பஸ் நிலையம் போன்ற பகுதிகளுக்கு புதிதாக மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இரவில் மின் ஒளி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இரவில் வெளிச்சமின்றி இருளில் மூழ்கிய இந்தப் பிரதேசம் இன்று மீண்டும் இரவில் ஒளி பெற்றுள்ளது. (த-17)

## வீதிப் புனரமைப்பு முடிந்த பின்பு முக்கிய இடங்களுக்கு சமிக்ஞை விளக்கு

யாழ்ப்பாணம், செப்.14

யாழ். குடாநாட்டு வீதிகளின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னரே பிரதான வீதிகளுக்கான வீதிச் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது குடாநாட்டில் பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வீதிகள் அகலிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டு 'காப்பெற்' போடப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் முடிவடைந்த பின்னரே பிரதான வீதிகளின் சந்திகளில் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அந்த அதிகாரி மேலும் கூறினார்.

**வீதிகள் அகலிக்கப்பட்டுப் புனரமைக்கப் பட்டு 'காப்பெற்' போடப் பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் முடிவடைந்த பின்னரே பிரதான வீதிகளின் சந்திகளில் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

குறிப்பாக யாழ்.நகரில் வின்சர் சந்தி, ஆரியகுளம் சந்தி, ஆஸ்பத்திரிவீதிச் சந்தி, சத்திரச்சந்தி, சுண்டிக்குழிச் சந்தி போன்ற முக்கிய சந்திகளில் இருந்த சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை :-

வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி போன்ற பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளின் முக்கிய சந்திகளுக்கும் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பௌதிகவியல் விஞ்ஞான ஆய்வு கூட உதவியாளர் முருகேசு-ஜெயக்குமாரின் சாவை அடுத்து அவரின் மகளுக்கு சேமிப்பு தொகையாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது. பாடசாலையின் ஆசிரியர் பணியாளர் பேரவையால் சேகரிக்கப்பட்ட இந்த நிதியை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் வழங்குகிறார். (ம-422)

## கொடிகாமம் பிரதேச ஆஸ்பத்திரியில் மூடப்பட்ட நிலையில் பற்சிகிச்சை பிரிவு

### வைத்தியர் இன்மையே காரணம்

தென்மராட்சி, செப்.14

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வந்த பற் சிகிச்சை பிரிவு கடந்த மூன்று மாதங்களாக இயங்காததால் பிரதேச மக்கள் தமது தேவைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு செல்கின்றனர்.

கடந்த வருடம் கொடிகாமம் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட பற்சிகிச்சைப் பிரிவு வாரத்தில் ஒரு நாள் நடத்தப்பட்டு வந்தது.

இது கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டதால் இந்தப் பகுதி பல்நோயாளர்கள் சாவகச்சேரி மற்றும் மந்திகை வைத்தியசாலைகளுக்கு செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தினருடன் தொடர்பு கொண்ட போது:- சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய பற்சிகிச்சை நிபுணர் இருவரில் ஒருவர் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் வாரத்தில் ஒரு நாள் பற்சிகிச்சைப் பிரிவினை நடத்தி வந்தார்.

குறித்த பற்சிகிச்சை நிபுணர் இடமாற்றலாகி சென்றுள்ளதால் சாவகச்சேரி வைத்தியசாலையில் தற்போது ஒரு பற்சிகிச்சை நிபுணர் கடயைாற்றுகின்றார். கொடிகாமம் வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வந்த பற்சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய பற்சிகிச்சை நிபுணர் ஒருவர் இடமாற்றலாகிச் சென்றுஎ்ளார். பதிலாக பிறிதொரு வைத்தியரை நியமிக் கும்படி சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளோம்.

வைத்தியர் நியமிக்கப்பட்டால் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் வழமை போன்று வாரத்தில் ஒரு தடவை பற்சிகிச்சை பிரிவை நடத்த முடியும். வைத்தியர் எப்பொழுது நியமிக்கப்படுவார் என்பது பற்றிக் கூறமுடியவில்லை- என்று தெரிவித்தார். (ம-4-9-131)

## மண்டைதீவுக்கு குடிதண்ணீர் விநியோகம் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.14

மண்டைதீவுப் பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் நேற்று வியாழக்கிழமை மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் உள்ள நன்னீர் கிணற்றில் இருந்து குழாய் மூலம் கடல் வழியாக இந்தக் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அல்லைப்பிட்டியில் இருந்து கடல் வழியாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் சேதமடைந்தமையால் கடந்த ஒரு மாத காலமாக மண்டைதீவுக்கான குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த நீர் விநியோகக் குழாய்களைச் சீர் செய்யும் பணிகள் கடந்த சில நாள்களாக நடைபெற்றன. இந்தப் பணிகள் முடிவடைந் ததை அடுத்து குடிதண்ணீர் விநியோகம் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## மானிப்பாயில் விஞ்ஞானக் கண்காட்சி



நவாலி, செப்.14

மானிப்பாய் சர்வதேச பாடசாலையில் பாடசாலை மாணவர்களுக்கான கண்காட்சி ஒன்று இடம் பெற்றது.

இந்தப் பாடசாலையில் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான விஞ்ஞானப் பொருள்கள், பற்றறியின் உதவியுடன் இயங்கும் புதிய கண்டுபிடிப்பான பொருள்கள் என்பன காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

நாகர் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட சோழர் காலத்து சேது மன்னன் ஆட்சியில் புழக்கத்திலிருந்த 1890-1896 காலப்பகுதிக்கான நாணயக்குற்றிகள் மற்றும் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகள் என்பனவும் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

காட்சிக்கு வருபவர்களை முதலில் இயந்திர மனிதன் கை கொடுத்து வரவேற்கும் வகையிலான ஏற்பாடுகளும் செய்யப் பட்டு இருந்தன. (ம-100)

## உயர்பாதுகாப்பு வலயம் முற்றாக நீங்கும் என உறுதி கூற முடியாது

### இப்படிக் கூறுபவர் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப்.14

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் முற்றாக இல்லாமல் போகும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். இன்னும் 3 மாதங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பகுதிகளில் சில விடுவிக்கப்படவுள்ளன என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த மக்கள் சபாபதிபிள்ளை மற்றும் கோணப்புலம், நீதிவான் முகாம்களில் இருக்கின்றனர். இவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவில்லை. பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் இவர்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

முகாம் காணி தனியாருக்குச் சொந்தமானது. அதனால் குறித்த காணியிலிருந்து முகாம் மக்களை வெளியேற்றுமாறு காணி உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பது குறித்துச் சுட்டிக் காட்டப்பட்டது.

இது தொடர்பில் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த முகாம்கள் தொடர்பில் நீண்ட காலமாகவே பிரச்சினை இருந்து வருகின்றது. குறித்த முகாம் மக்கள் விரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். முகாம் மக்களது சுகாதாரத் தேவைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.- என்றார்.

முகாம் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவுகள் வழங்கப்படுவதில்லை என்று தற்போது அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்ட போதும் அதற்கு எந்தவித பதிலையும் அவர் வழங்கவில்லை.

இதைவிட உயர் பாதுகாப்பு வலயம் முன்னரை விட சுருக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்படாத எஞ்சிய பகுதிகளில் பெருமளவான பகுதிகள் 3 மாதங்களுக்குள் விடுவிக்கப்படும்.

அதற்காக வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் முற்றாக அகற்றப்படும் என்று உறுதியாக சொல்ல முடியாது. அதற்காக மக்கள் நம்பிக்கையை தளரவிட வேண்டாம். பொறுமையாக இருக்க வேண்டும்.

இலங்கை அரசு நாடு முழுவதும் உயர் பாதுகாப்பு வலயம் இல்லாதிருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதால், எதிர்காலத்தில் உயர் பாதுகாப்பு வலயம் இல்லாமல் போகக் கூடும். அதனை ஓர் இரவில் ஏற் படுத்திவிட முடியாது. -என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## குருநகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஏற்பதில்லை

யாழ்ப்பாணம், செப்.14

குருநகர் பொலிஸ் நிலையத்தில் பொது மக்களின் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதில்லை என யாழ்.பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதனால் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு மக்கள் செல்ல வேண்டியுள்ளதாகவும் அங்கும் நீண்ட நேரம் காக்க வைக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

எனினும் நீண்ட நேரம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய பொதுமக்கள் காத்திருக்கத் தேவையில்லை எனவும் முறைப்பாடு எடுக்கத் தாமதமானால் எவரது அனுமதியும் பெறாமல் தலைமைப் பொலிஸ் அதிகாரியைச் சந்தித்து மக்கள் தமது பிரச்சினைகளைத் தெரிவிக்க முடியும் எனவும் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் பேர் கடலிருப்புப் போராட்டம்

## கூடங்குளம் அணு உலைக்கு எதிராக



கூடங்குளம், செப்.14

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள், நேற்று இடிந்தகரை அருகே கடலில் இறங்கி மனிதச்சங்கிலி அமைத்து சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற தண்ணீரில் சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பின்பற்றி, கூடங்குளம் போராட்டக்காரர்களும் தங்களது போராட்டத்தை புதிய பாணியில் நேற்று மாற்றினார்கள். கடற்கரை அருகே, கடலில் இறங்கி பெண்கள் உட்பட அதிகமானோர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கூடங்குளம் கடற்கரையில் நடந்த தடியடி மற்றும் தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து இடிந்தகரை தேவாலயத்தில் அணு உலை எதிர்ப்பாளர்கள் நடத்திய 48 மணி நேர உண்ணா விரதம் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

கூடங்குளம் அணு உலையில், எரிபொருள் நிரப்புவதை நிறுத்த வேண்டும், போராட்டக்குழுவின் தலைவர்களைக் கைது செய்வதை நிறுத்த வேண்டும், ஏற்கெனவே கைதானவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**விமானம், கப்பல் மூலம் கண்காணிப்பு**

கடலுக்குள் இறங்கி மீனவர்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில் கடற்படைக்குச் சொந்தமான கண்காணிப்பு விமானம் தாழப் பறந்து மீனவர்களை கண்காணித்து வருகிறது. இதேபோல் கடற்படைக்கு சொந்தமான கப்பல் ஒன்றும் கூடங்குளம் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருக்கிறது. கூடங்குளம் அணு உலை மத்திய அரசுக்கு சொந்தமானது என்பதால் பாதுகாப்பு கருதி கடற்படை விமானமும், கப்பலும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளதாகக் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை நேற்றைய போராட்டத் தில் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் சுப. உதயகுமார் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் அவர் தலை மறைவாகவே இருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து வருவதாக தெரிகிறது. இதனிடையே தாமே போராட்டத்துக்கு தலைமை ஏற்று வருவதாகவும் அதனால் போரட்டத்தை உறுதியோடு முன்னெடுப்போம் என்று தகவல் ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. (வ)

## கருணாநிதிக்கு அழைப்பாணை



அவதூறுவழக்கில், தி.மு.க. தலைவர் கருணாநிதியை, ஒக்ரோபர், 10 ஆம் திகதி முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பும்படி, சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம், 4ஆம் திகதி தி.மு.க., பத்திரிகையான, 'முரசொலி'யில், கருணாநிதியின் கேள்வி- பதில் வெளியானது. 'கோத்தகிரியில், ஒரு குடம் தண்ணீர் ஐந்து ரூபா என, ஒரு பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளதே' என்ற கேள்விக்கு, கேலியாகப் பதிலளித்துள்ளார்.

இதையடுத்து, கருணாநிதி மற்றும், 'முரசொலி' ஆசிரியருக்கு எதிராக, முதல்வர் ஜெயலலிதா சார்பில், அவதூறு வழக்கு, தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'முதல்வரின் பெயருக்கு களங்கம் விளை விக்கும் விதத்தில், இந்த,'கேள்வி - பதில்' வெளியாகி உள்ளது. இதில், எந்த அடிப்படையும் இல்லை. எனவே, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

### கூடங்குளம் விவகாரம்

## 'ஜெ'இற்கு கறுப்புக்கொடி ஸ்ரீரங்கத்தில் 13 பேர் கைது



திருச்சி, செப்.14

திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஸ்ரீரங்கம் செல்லும் வழியில் முதல்வர் ஜெயலலிதாவுக்கு கறுப்புக் கொடி எதிர்புக் காட்டிய 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

முதல்வர் ஜெயலலிதா நேற்றுக் காலை சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் பகல் 11.15 மணிக்கு திருச்சி விமான நிலையத்தை அடைந்தார். விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து அவர் காரில் ஸ்ரீரங்கம் சென்றார். அங்கு தெற்குச் சித்திரை வீதி-மேலச் சித்திரை வீதி சந்திப்பில் பகல் 11.45 மணிக்கு ஆரம் பித்த அரசு விழாவில் கலந்து கொண்டார். அப்போது அவர் மேலூரில் ரூ.8.67 கோடி மதிப்பில் அமைக்கப்படும் வண்ணத்துப்பூச்சி பூங்கா, ஸ்ரீரங்கம்- திருவானைக் காவல் பாதாள சாக்கடை திட்டம், ஸ்ரீரங்கம் உள் விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நட்டார். (வ)

## பாக். உளவாளி கைது

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதி ஒருவர் கைதாகியுள்ளார்.

பாகிஸ்தான் அரசின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. தீவிரவாத செயல்களை ஊக்குவிக்கும் பொருட்டு தீவி ரவாதிகளை இந்தியாவுக்குள் அனுப்பி வைக்கிறது.

காஷ்மீர் மாநிலம் கீத்ஸ்வார் நகரில் தீவிரவாதி ஒருவர் பதுங்கியிருப்பதாக அந்த மாநிலப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் பொலிஸார் ஜாவியத் அகமத் எனும் பெயருடைய தீவிரவாதியை கைது செய்தனர்.

ஏற்கனவே இவர் மீது 1996 ஆம் ஆண்டில் நடந்த லஜபத் நகர் குண்டு வெடிப்பு சம்பவத்திலும், ஆப்கானிஸ்தானில் நடந்த காந் தஹார் விமானக் கடத்தல் சம்பவத்திலும் நெருங்கிய தொடர்பிருப்பதும் தெரிய வந்துள்ளது.

## செப். 19 இல் ஹசாரே குழு கூட்டம்

### கிரண் பேடி தெரிவிப்பு



ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தங்களது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி முடிவு செய்வதற்காக அன்னா ஹசாரே குழுவின் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெற உள்ளதாக அன்னா குழு உறுப்பினர்களில் ஒருவரான கிரண் பேடி தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தனது குழுவில் உள்ள உயர்மட்ட தலைவர்களுக்கு, சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே அழைப்பு விடுத்திருப் பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற வங்கி ஆண்டுவிழா நிகழ்ச்சி ஒன்றின்போது இதுகுறித்து பேசிய கிரண் பெடி,

அன்னாவோ, தானோ அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்றும், ஊழலுக்கு எதிரான போராட் டத்தில் தங்களது அடுத்தகட்ட யுத்தி குறித்து எதிர்வரும் 19 ஆம் திகதி நடக்கும் கூட்டத்தில் தான் தெரியவரும்.

தற்கால அரசியல் அமைப்பிலிருந்து ஊழலை அழிப்பதற்கான யுத்தி பற்றி முடிவை எடுப்பதுதான் எங்களது நோக்கம். அரசியல் கட்சிகளுக்கெதிரான போராட்டம் சவாலானது. 2014 இற்குப் பின்னர் அவர்களுக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் நிபந்தனை அடிப்படை யிலேயே அளிக்கப்பட வேண்டும்-என்றார்.

## குழந்தைகளின் இறப்பு வீதம் இந்தியாவில் அதிகரிப்பு

உலகத்தில் ஒவ்வொரு நாளும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 19 ஆயிரம் பேர் போதிய சத்துணவின்றி உயிரிழக்கின்றனர் என்று அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இதில், இந்தியா தான் முதல் இடத்தில் உள்ளது என்பது இன்னும் பேரதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

2011 ஆம் ஆண்டில் மட்டும் போதிய அடிப்படை வசதியும், சத்துணவும் இல் லாமல் உடல்நிலை பாதிக் கப்பட்டு சுமார் 15.55 லட்சம் குழந்தைகள் இந்தியாவில் மட்டும் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. நேற்று முன்தினம் வெளியிட்ட குழந்தைகள் இறப்பு வீத அறிக்கையில், உலகிலேயே 5 நாடுகளில் மட்டும்தான் குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. அவை இந்தியா, நைஜீரியா, காங்கோ, பாகிஸ்தான், சீனா ஆகியனவாகும்.

ஏனைய நான்கு நாடுகளை விடவும் இந்தியாவில் குழந்தைகள் இறப்பு வீதம் மிக அதிகமாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## அஸாம் கலவரத்தின் எதிரொலி

### 500 பேர் மாயம்

அஸாம் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தைய டுத்து பாதுகாப்பாக நிவா ரண முகாம்களில் தங்கியி ருந்த சுமார் 500 பேர் காணாமற் போயுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அஸாம் மாநிலத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு, போடோ பழங்குடியினத்தவர்களுக்கும் வங்கதேச சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் மூண்டது.

இதனையடுத்து மாநிலத்தின் கோக்ரஜார், துப்ரி, சிராங் மாவட்டங்களில் கலவரம் அதிகளவு வெடித்தது.

கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களை தங்க வைக்க நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் சுமார் 215 முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. 2 லட்சம் பேர் முகாமில் தங்கியிருந்தனர்.

இந்தநிலையில் முகாமில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை குறித்து கணக் கெடுக்கப்பட்ட போது ஆயிரக்கணக்கானோர் திடீரெனக் காணாமல் போயுள் ளனர்.

அஸாம் மாநிலத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு, போடோ பழங்குடியினத்தவர்களுக்கும் வங்கதேச சிறு பான்மை முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் மூண்டது.

தற்போதுவரை எடுத்துள்ள கணக்கெடுப்பின் படி 500 பேர் வரை காணாமல் போயுள்ளது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் மாயமானவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஏர் இந்தியா நிறுவனத்திற்கு புதிதாக வாங்கப்பட்டுள்ள, 'போயிங் 787' விமான சேவை, டில்லியில் ஆரம்பமாகியது. விமானப் போக்குவரத்து துறை அமைச்சர், அஜீத்சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வீரப்பன் குறித்த திரைப் படத்தை வெளியிட மனைவி அனுமதி மறுப்பு

சந்தனக்கடத்தல் வீரப்பன் குறித்த திரைப் படத்தை வெளியிட அவரது மனைவி முத்துலட்சுமி அனுமதி மறுத்துள்ளார்.

தென் மாநிலங்களில் சந்தன மரங்கள் மற்றும் யானைத் தந்தங்களை வெட்டி எடுத்து முறை கேடாக கடத்தல் செய்து விற்று வந்தவர் வீரப்பன்.

எனவே இவர் சந்தனக் கடத்தல் வீரப்பன் என்றே அறியப்படுகிறார்.

நீண்ட நாள்களாக தமிழகப் பொலிஸின் கண்களில் சிக்காத இவர், 2004 ஆம் ஆண்டு சிக்கி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்த நிலையில் அவரது வாழ்க்கையை பற்றிய படம் வனயுத்தம் என்ற பெயரில் தமிழில் வெளிவருகின்றது.

இந்தப்படத்துக்கு வீரப்பனின் மனைவி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்தப் படத்தில் தன்னுடைய கதாப்பாத்திரம் அவலமாக சித்திரிக்கப்பட்டுள்ளதாக அவர் கருதுகின்றார்.

இது தொடர்பாக முத்துலட்சுமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்தப்படம் வெளிவந்தால் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கை சீர்குலைந்து விடுமெனவும் தெரிவித்துள்ளார்.

இந்தப்படத்தில் அர்ஜுன் பொலிஸாகவும் கிஷோர் வீரப்பனாகவும் நடிக்கின்றனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் விமான விபத்து 10 பேர் சாவு; 4 பேர் காயம்



மாஸ்கோ, செப்.14

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் நேற்று முன் தினம் சிறிய ரக விமானம் கீழே விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

ரஷ்யாவின் கிழக்கே, பெட்ரோபவ்லோவ்ஸ்கி கம்சட்ஸ்கை பகுதியில் இருந்து, இரண்டு இன்ஜின்கள் கொண்ட சிறிய ரக விமானம் ஒன்று, பலனா நகருக்குச் சென்றது. விமானத்தில், 12 பயணிகள் மற்றும் இரண்டு ஊழியர்கள் இருந்தனர். உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் நண்பகல் 12.28 மணி அளவில், பலானாவில் இருந்து, 10 கிலோ மீற்றர், தூரத்தில் உள்ள மலைப் பகுதியில் விமானம் தரையிறங்க முற்பட்டது. அப்போது திடீரென விமானம் கீழே விழுந்து நொருங்கியது. இதில், விமானத்தில் இருந்த விமானி உட்பட, 10 பேர் இறந்தனர். நான்கு பேர் படுகாயம் அடைந்தனர். விமானம் முற்றிலுமாகச் சேதமடைந்தது. விபத்து நடந்த பகுதி ஹெலிகொப்டர் மூலம் கண்டறியப்பட்டு, காயமடைந்த நான்கு பேரும் பத்திரமாக மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அமெரிக்கத் தூதர் படுகொலைக்கு

# ஒபாமா கண்டனம்

## தூதரகங்களின் பாதுகாப்பை அதிகரிக்கவும் உத்தரவு



லிபியாவுக்கான அமெரிக்கத் தூதர் மற்றும் 3 தூதரக அதிகாரிகள் சென்ற வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரச அதிகாரிகளின் மீதான இதுபோன்ற வன் முறைத் தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியதாகும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கண்டனம் தெரிவித்தார்.

இதனிடையே, பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கும்படியும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-


நீண்டகாலமாகவே அமெரிக்காவுக்கு எதிராக பல அச்சுறுத்தல்கள் உள்ளன. அதனால்தான் இதுபோன்ற தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இந்தத் தாக்குதல் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி நீதியை நிலை நாட்டுவோம்.

கடாபியை ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டதனை தொடர்ந்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த, இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவரது ஆதரவாளர்கள் கூட்டுச்சதி செய்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

தூதரகம் தாக்கப் பட்டதையடுத்து உலக நாடுகளில் உள்ள அனைத்து அமெரிக்கத் தூதரகங்களிலும் பாதுகாப்பை பலப்ப டுத்தி உள்ளனர். லிபியாவில் உள்ள தூதரகம் தாக்கப்பட்டதைப் போல அரபு நாடுகளில் உள்ள தூதரகங்கள் தாக்கப்படலாம் என்று கருதி அமெரிக்கப் படைகள் உஷார் அடைந்து உள்ளன. ஏற்கனவே அரபு நாடுகளைச் சுற்றி 5 அமெரிக்கப் போர்க் கப்பல்கள் நிற்கின்றன.

லிபியாவில் நடந்த தாக்குதலையடுத்து மேலும் 2 விமானம் தாங்கி போர்க் கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளது. யு.எஸ்.எஸ். லபூன், யு.எஸ்.எஸ். மெக்பால் ஆகிய 2 கப்பல்கள் லிபியாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இரு கப்பல்களும் ஏவுகணைகளை வீசும் திறன் கொண்டதாகும். அவசர நிலை ஏற்பட்டால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த கப்பல்களை அனுப்பி வைத்துள்ளது.

# சூறாவளியை முன் கூட்டியே கண்டறியும் ரோபோ அறிமுகம்



சூறாவளியை முன் கூட்டியே அறியும் புதிய ரோபோவை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து சோதனை செய்துள்ளனர். இந்த ரோபோ', கடல் மட்டத்தில் மிதந்து ஆய்வுகளை மேற்கொள்கிறது. இதன் மூலம் கடலில் ஏற்படும் மாற்றங்கள், காலநிலை மாறுபாடுகள், சூறாவளி, புயல் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும்.

இயற்கையான ஆபத் துகள் தாக்காத வண்ணம் ரோபோ வடிவமைக்கப்பட் டுள்ளது. அதாவது 85-120 மைல் வேகத்தில் வீசும் சூறாவளிக் காற்றைக் கூட, இது தாங்க வல்லது. இதன் மூலம் புயல் மையம் கொண்டுள்ள இடம், தாக்கத்தின் அளவு, செல்லும் திசை ஆகியவற்றைத் துல்லியமாக அறியலாம். நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதால், இதற்கு முன் இருந்த கடல் ரோபோக்களை விட இது சிறப்பாக இயங்குகிறது. இந்த ரோபோவை சோதனை செய்தது போலவே, ஆளில்லாத சிறிய படகு ஒன்றையும் சோதனை செய்தனர். இந்த படகு 5 அடி 5 அங்குலம் நீளமுடையது. கடல் வளங்கள், மீன்கள், தொல்லியல் ஆய்வுகள் ஆகியவற்றைத் துல்லியமாகப் பதிவு செய்யும். படகில் சென்சர்கள் இருப்பதால், தெளிவான படங்களை எடுக்கவும் பயன்படுகின்றது. கடலை ஆய்வு செய்ய எண்ணற்ற தொழில்நுட்பங்கள் இருந்தாலும், புதிய சாதனங்கள் முற்றிலும் புதிதானவை.

# தலிபான்களின் வருமானம் கடந்தாண்டு ரூ.5,000 கோடி

**ஐ.நா. தகவல்**

தலிபான் தீவிரவாதிகள் கடந்தாண்டு மட்டும் ரூ. 5,000 கோடி வருமானம் ஈட்டி உள்ளதாக ஐ.நா. தகவல் வெளியிட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் இருந்து வழங்கப்படும் நன் கொடை, ஆப்கானிஸ் தானில் பயிரிடப்படும் ஒபியம் போதைப் பொருள், பொதுச் சொத்துகளை கொள்ளையடித்தல் உள்ளிட்டவை மூலம் இந்த தொகையை தலிபான்கள் ஈட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையிலான ஓராண்டு காலத்தில் தலிபான்கள் ரூ.2,200 கோடிக்கு மேல் பணம் திரட்டியுள்ளனர். இந்தத் தொகையில் ரூ.1,500 கோடி மேல் மட்டத் தலைவர்களிடம் சென்றுள்ளது. மீதமுள்ள 700 கோடி களத்தில் செயற்படும் தீவிரவாதிகளுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பயிரிடுபவர்கள், கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்களிடம் இருந்தே அதிக அளவு பணம் கிடைக்கிறது. மேலும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பகுதி மக்களிடம் இருந்தும் தலிபான்கள் பணம் வசூலிக்கின்றனர்.

இவை தவிர ஆப்கானிஸ்தானில் செயற்படும் கட்டுமான நிறுவனங்கள், தொலைபேசி நிறுவனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், சுரங்க நிறுவனங்கள், பெரும் தொழில்களை நடத்துபவர்களை மிரட்டியும் தலிபான்கள் பணம் பறிக்கின்றனர். இவைதவிர பல்வேறு நாடுகளில் இருந்து தலிபான்களுக்கு நன்கொடையாகவும் பணம் வருகிறது.



லிபியத் தூதர் அலி சுலைமான், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரனை வொஷிங்டனில் சந்தித்தார்.

# பயன்படுத்தமுடியாத நிலையிலுள்ள வாகனத்தில் 16 சடலங்கள் மீட்பு

மெக்சிகோ,செப்.14

மெக்சிகோவில் பயன்படுத்த முடியாத நிலையில இருந்த வாகனம் ஒன்றில் இருந்து, சுட்டுக்கொல்லப்பட்ட 16 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மெக்சிகோ நாட்டில் போதைப்பொருள் கடத்தல் தொழில் அதிகமாக இடம் பெற்று வருகிறது. இங்குள்ள மிசோகன் மாநிலத்தில் மிசோகன் பேமிலி மற்றும் நைட் டெம்ப்லர் என்று இரு போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கிடையே அதிகமாக மோதல் நடப்பது வழக்கம். இந்த நிலையில் குவேரேரோ பகுதியில் உள்ள ஒரு வீதி ஓரமாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வானில் 16 பேரின் சடலங்கள் கிடப்பதை பொலிஸார் மீட்டுள்ளனர்.

போதைக் கடத்தல் குழுக்களிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இந்த 16 பேரும் கொல் லப்பட்டு, சடலங்களை வானில் வைத்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்று அந்தநாட்டு அரசு கூறியுள்ளது.

இறந்தவர்கள் அனைவரும் அருகிலுள்ள மிசொகன் மாநிலத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

கடந்த மாதமும் இது போன்று 11 சடலங்கள் மீட்கப்பட்டன. வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த அதிகமான பாதுகாப்புப் படையினர் வேண்டும் என்று இந்தப்பகுதி நிர்வாகம் அரசைக் கேட்டுள்ளது.

செல் வாக்கோடு திகழும் இந்த போதைப்பொருள் கடத்தல் கும்பல் மோதலில் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை 55 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது.

(வ)

# பெண் தீவிரவாதியை விடுதலை செய்யுங்கள் ஜவாஹிரியின் மிரட்டல் காணொலி வெளியீடு

பாகிஸ்தானில் கடத்தப்பட்ட அமெரிக்கரான வாரன் வெயின்ஸ்டீன் தங்களிடம் இன்னும் பணயக் கைதியாக உயிருடன் இருப்பதாக அல்குவைதா இயக்கத்தின் தலைவரான அய்மான் அல் ஜவாஹிரி தெரிவித்துள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் ஜவாஹிரியிடமிருந்து காணொலிகள் வெளியாவது குறைந்திருந்த நிலையில், இப்போது அவரது புதிய வீடியோவை அல்குவைதா வெளியிட்டுள்ளது. சில அல்குவைதா இணையத்தளங்களில் இந்தக் காணொலி வெளியாகியுள்ளது.

அதில் பேசியுள்ள ஜவாஹிரி, கடந்த ஓகஸ்ட் மாதம் லாகூரில் வைத்து கடத்தப்பட்ட வாரன் வெயின்ஸ்டீனை இன்னும் உயிருடன் தான் வைத்துள்ளோம்.

அவரை விடுவிக்க வேண்டுமானால் அமெரிக்க சிறையில் உள்ள ஓமர் அப்துல் ரஹ்மான், ஆபியா சித்திகி ஆகியோரை அமெரிக்கா விடுவிக்க வேண்டும்.

கண் பார்வையற்றவரான ஓமர் அப்துல் ரஹ்மான் நியூயோர்க்கைச் சேர்ந்தவர். 1990 ஆம் ஆண்டில் நியூயோர்க்கில் தீவிரவாத் தாக்குதலுக்கான சதித்திட்டத்துக்கு உதவியதாக கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள் ளார்.

மூளை நரம்பியல் விஞ்ஞானியான ஆபியா சித்திகி அமெரிக்காவில் படித்தவர். 2008 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவர் நியூயோர்க்கில் குண்டுவெடிப்புகள் நடத்துவதற்கான சதித்திட்டம் தீட்டியிருந்ததாக கைது செய்யப்பட்டு 86 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜவாஹிரி தனது காணொலியில் இன்னொரு முக்கிய தகவலையும் தெரிவித்துள்ளார். சில மாதங்களுக்கு முன் பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா உளவு விமானத் தாக்குதலில் அல்குவைதாவின் முக்கிய தளபதியான அபு யஹ்யா அல் லிபி கொல்லப்பட்டு விட்டார் என்று தெரிவித்துள்ளார்.

லிபியா நாட்டைச் சேர்ந்த லிபி கடந்த 2005ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்காவின் அதி பாதுகாப்பு மிக்க சிறையிலிருந்து தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சோமாலியாவில் தற்கொலைத் தாக்குதல்

# நூலிழையில் தப்பினார் ஜனாதிபதி

### 8 பேர் சாவு

மொகாடிஷு, செப்.14

சோமாலியாவில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில், சோமாலிய ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது மற்றும் கென்ய நாட்டின் அமைச்சர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். 8 பேர் உயிரிழந்தனர்.



சோமாலியாவின் புதிய அதிபராக ஹசன் ஷேக் முகமது 2 தினங்களுக்கு முன்னர் பதவியேற்றார். இவருடன் பேச்சு நடத்த கென்ய நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் சாம் ஆன்கெரி வந்திருந்தார். இருவரும் தலைநகர் மொகாடிஷுவில் உள்ள விடுதியில் நேற்று முன்தினம் சந்தித்து இரு நாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென தற்கொலைப் படை தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் விடுதியில் இருந்த 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஜனாதிபதி ஹசனும், அமைச்சர் ஆன்கெரியும் அதிர்ஷ்டவசமாக உயிர்த் தப்பினர். இந்தத் தாக்குதலுக்கு அல்குவைதா தீவிரவாத அமைப்புடன் தொடர்புள்ள, அல் ஷபாப் பிரிவினைவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

தாக்குதலை நேரில் சந்தித்த தொலைக்காட்சிச் செய்தியாளர் ஜமீலா கூறுகையில்,

தீவிரவாதிகள் 2 பேர் விடுதிக்குள் திடீரெனப் புகுந்து சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். விடுதியில் பரிமாறப்பட்டிருந்த கறி உணவுகள் நாலாபுறமும் தெறித்து பறந்தன என்று அதிர்ச்சியுடன் தெரிவித்தார்.

## முபாரக்கின் சொத்து விவரத்தை ஆராய சட்டத்தரணியை அனுப்புகிறது பிரிட்டன்

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஷ்னி முபாரக்குக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக தமது நாட்டு சட்டத்தரணி ஒருவரை எகிப்துக்கு அனுப்பி வைக்க பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.



பிரிட்டன் வெளிவிவகார செயலாளருக்கும் எகிப்தின் புதிய ஜனாதிபதி முஹமட் மொர்சிக்கும் இடையில் நடத்தப்பட்ட சந்திப்பில் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் சொத்துக்கள் தொடர்பில் பிரிட்டன் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து கடந்த வாரம் அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எகிப்தின் அதிகாரிகளுடன் தொடர்ந்தும் பிரிட்டன் அதிகாரிகள் கலந்துரையாடல்களை நடத்தவுள் ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ஹொஷ்னி முபாரக்குக்கு எதிரான போராட்டங்கள் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அவருக்குச் சொந்தமான சொத்துகள் பலவற்றை பிரிட்டன் முடக்கியிருந்தது.

## கட்டடத்துக்கு நவீன முறையில் திரை

### அபுதாபியில் பிரமாண்டம்

அபுதாபியில் பிரமாண்ட கட்டடத்தைச் சுற்றிலும் பைபர் கிளாஸ் போர்வை அமைக்கப்பட்டுள்ளது. சூரியன் நகர நகர இந்த போர்வையும் சுற்றிக் கொண்டே இருக்கும். கணினி உதவியுடன் இது இயங்குகிறது.



ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைநகர் அபுதாபியில் 'அல் பாஹர் ரவர்ஸ்' என்ற கட்டடம் கட்டப்பட்டுள்ளது. சூரிய வெளிச்சம் கண்ணை கூசாமல் இருக்க இதில் பிரத்தியேக, பிரமாண்டமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கட்டடத்தை சுற்றிலும் போர்வை போல பிரமாண்ட சன் ஸ்கிரீன் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தை விட்டு 6 அடி தொலைவில் இது உள்ளது. காலை அலுவலகம் ஆரம்பிக்கும் நேரத்தில், இந்த சன் ஸ்கிரீன் கிழக்குப் பக்கத்தில் இருக்கும். வெயில் உச்சிக்கு ஏற, ஸ்கிரீன் மெல்ல நகரத் தொடங்கும். மாலை நேரத்தில் மொத்த ஸ்கிரீனும் மேற்கு பக்கம் போய் விடும். இவ்வாறு சூரியனின் இருப்பிடத்துக்கு ஏற்ப கணினி உதவியுடன் சன் ஸ்கிரீன் நகர்கிறது. பைபர் கிளாஸ் பொருளால் இந்த ஸ்கிரீன் தயாரிக்கப்பட்டுள்ளது.

கண்ணுக்குப் போதிய வெளிச்சம் மட்டுமே உள்ளே வரும். சூரிய ஒளி விழாத தால் வெப்பமும் குறையும். இதனால், மின் விளக்கு, குளிரூட்டிச் செலவு கணிசமானளவு குறைவடையும் என்கின்றனர் .

## ஈரானின் எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சி

ஈரானின் கச்சா எண்ணெய் உற்பத்தி, 40 சதவீதம், குறைந்துள்ளதாக, அமெரிக்கா தெரிவித்துள்ளது.

> பொருளாதாரத் தடை காரணமாக, ஈரானின் எண்ணெய் உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளது.


ஈரான், இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரிப்பதாக, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றன. இதன் காரணமாக, ஈரான் மீது, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

ஈரானிடமிருந்து, கச்சா எண்ணெய், வாங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியா உள்ளிட்ட சில நாடுகள், குறைந்தளவில் ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்து கொள்ள அமெரிக்கா, அனுமதித்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி விக்டோரியா நுலந்த் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாடுகள், ஈரான் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக, அந்தநாட்டின் எண்ணெய் உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளது. இதன் மூலம் ஈரானுக்கு, காலாண்டுக்கு, 52 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாடுகள், ஈரானுக்கு, இதே போன்ற நெருக்கடியை தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

அமைதிப் பணிக்காகத் தான், அணுசக்தியை பயன்படுத்துவதாக ஈரான் கூறுகிறது. எனினும், அணுசக்தியை இராணுவத்துக்குப் பயன்படுத்தவில்லை, என்பதை அந்நாடு, நிரூபிக்க வேண்டும். இதை சர்வதேச நாடுகள் எதிர்பார்க்கின்றன. எனவே, ஈரான் இது தொடர்பாக, பேச்சு நடத்த முன்வரும் என நம்புகிறோம்-என்றார்.

## முப்பத்திமூன்றாவது ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
17.07.1913

மறைவு
20.08.1979

### அமரர் கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர்- வைத்தியலிங்கம் மரக்காலை)

திதி: திரயோதசி – 14.09. 2012

நிஜங்கள் நிழல்கள் ஆனாலும்
வரும் நினைவுகள் மாறுவதில்லை
உங்கள் உடல் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை
அவனியில் உங்கள் நினைவால்
அனுதினமும் நாம்வாடுகின்றோம்.

110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

[22826](45.6.7)

DANISH REFUGEE COUNCIL

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDPs) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, emergency response, protection, and capacity development; and operates within a strategy based on participation and partnership. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Killinochchi and a liaison office in Colombo.

**Field Officer - Trincomalee1 /Vavuniya 1/Jaffna 1**

The Field Officer will work as a member of the District office team in Vavuniya, Jaffna & Trincomalee under the lead ship of Head of Office/Program/Project Manager with a primary role in the assistance of IDPs and host communities, counseling, monitoring and the provision of referrals for individuals and communities

**The position are available in our Trincomalee,Vavuniya & Jaffna offices.**

**Qualifications:**

- University degree in law, social sciences, social work or a related field. Extensive professional experience can be considered in lieu of a university degree.
- Experience in similar job and/or 3 + DRC experience.
- Knowledge of community mobilization and community development.
- Training and facilitation skills.
- Familiarity with the administrative structures of Sri Lanka, confidence and ability to liaise with government authorities, UN agencies, NGO's and communities.
- Experience working in the field of community development.
- Knowledge of IDP context and that of vulnerable groups.
- Excellent oral and written communication skills in English and local languages are essential requirement.
- Very good report writing skills in English.
- Creative problem solving abilities
- Computer skills in MS office.

**Applicants**

- Interested candidates are invited to submit their application (Cover letter and CV, along with two non-related referees) electronically to recruitment@drc-lk.org or via hardcopy to Danish Refugee Council, No 77,1st Cross Street, Vavuniya in word or PDF format no later than September 20, 2012 indicating your name and the title of the position in the subject line of the e-mail.
- Please note that DRC is not to be held responsible for late transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted.
- The recruitment process will consist of written tests and interviews to be held in Vavuniya, Jaffna & Trincomalee.
- As an equal opportunity employer DRC encourages the application of women and/or underrepresented communities for the position.
- Canvassing in any form will be a disqualification.

(f/3338) (6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(11)

இருட்டில் சற்று நேரம் இருந்தால் மயங்கி விழுந்துவிடக் கூடிய நரம்புத் தளர்ச்சி உடையவர்களும் இருக்கிறார்கள். இருட்டு அப்படி ஒன்றும் பயப் படக்கூடிய விடயமல்ல என்று நிரூபித்து இவர்களுடைய பயத்தை படிப்படியாக போக்கிவிட முடியும்.

உயரமான இடங்களுக்கு ஏறப் பயப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். உயரத்திலிருந்து கீழே பார்த்தால் இவர் களுக்கு தலைசுற்ற ஆரம்பித்துவிடும். இதை ஆங்கிலத்தில் **Vertigo** என்று சொல்லுவார்கள். இந்தக் குறைபாடும் கூட பயிற்சியின் மூலமாக நிவர்த்தி செய்யப்படுவது சாத்தியமே. உயரத்தைப் பற்றிய எண்ணம் மனதிலே தோன்றுகின்றபோது அதுவே பீதிக்குக் காரணமாகி விடுகிறது. உயரமான இடங்களிலிருந்து மனதை உறுதிப்படுத்திக்கொண்டு ஆழமான இடங்களைப் பார்க்கின்ற பயிற்சியை ஏற்படுத்திக்கொள்ளும் போது இது சாதாரண விஷயமாகத் தோன்ற ஆரம்பிக்கும்.

சிலர் தனிமையிலிருக்க பயப்படுவார்கள். ஒரு அறைக் குள் பகல் நேரமானாலும் இரவு நேரமானாலும் தனியாக இருக்க இவர்கள் அச்சப்படுவார்கள். இந்தக் குறையுள் ளவர்கள் சில சந்தர்ப்பங்களில் தனி அறையில் இருக்கும் போது சுவர்கள் நெருங்கிவந்து தங்களைத் தாக்குவது போன்ற பய உணர்ச்சியையும்அடைவதுண்டு.இதை ஆங்கிலத்தில் **Claustrophobia** என்று சொல்வார்கள்.சில கைதிகளைச் சிறையில் அடைக்கும் போது தனியாக



அடைக்கப்பட்டால், இந்தக் குறையுடையவர்களாக இருந்தால் கூச்சலிட்டு குழப்பம் விளைவிப்பார்கள்.சில சிந்தனையாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கூட இந்தக் குறையிருப்பதுண்டு.தனிமையில் அமர்ந்து அவர் சிந்திக்க முடியாது,எழுத முடியாது. யாரையாவது அருகில் வைத்துக் கொண்டுதான் சிந்திப்பார்கள்,எழுதுவார்கள் .சிலரிடம் இந்தக் குறைபாடு குறைவாக இருக்கும்.வேறு சிலரிடம் இந்தக் குறைபாடு மிகுதியாக இருக்கும்.

வேறு சிலருக்குத் தண்ணீரைக் கண்டால் பயம். இவர்களுக்கு கடல் பிரயாணம் ஒத்துக்கொள்ளாது. பொதுவாக முதல் முறையாக கப்பலில் பிரயாணம் செய்வோருக்கு **sea-sickness** ஏற்படுவதுண்டு. இது ஏற்படுகிறவர்களுக்கு தலை சுற்றும் , வாந்தி வரும். பழகப் பழக இந்தப் பயம் குறைந்து விடும்.

இந்த மாதிரிப் பயங்கள் அனைத்தும் மனோநிலையில் தோன்றும் வியாதிகள். ஆதலால் மனதை ஓர் அளவுக்கு திடமாக வைத்துக்கொண்டால் இவை பெரிதாகப் பாதிப் பதில்லை.

இந்த அத்தியாயத்தில் பயத்தின் வகைகள் அனைத் தையும் நான் பட்டியல் போட்டுக் காட்டிவிட்டதாகச் சொல்ல முடியாது.மனிதனுக்கு பயஉணர்ச்சி பல்வேறு நிலைகளில் தோன்றுகிறது.எதைக் கண்டு பயப்படு கிறார்களோ அதற்கு பழகிப்போகும் போது அந்தப் பயம் மெதுவாக நீங்கி விடும்.மனோதிடம் இருந்தால் பயம் விரைவில் நீங்கிப் போகிறது.

துணிந்தார்கள்,வென்றார்கள்!

பயம் என்கிற உணர்ச்சி,வழி வழிக் காலமாக மனித இனத்திடம் வளர்ந்து வந்துள்ள ஓர் உணர்ச்சியாகும். சில சந்தர்ப்பங்களில் மனிதனுக்கு பாதுகாப்பாகவும் பயன் படுகிறது. அது எப்படி என்று பின்னர் வரும் அத்தியாயங்களில் நான் விளக்குவேன்.

சிறு வயதிலிருந்து பயத்துக்கு இடம் கொடுக்காமல் குழந்தைகளை வளர்த்து வந்தால் அவர்கள் பெரியவர் களாகும் பொழுது அச்சத்திற்கு இடமளிக்காமல் துணிவுடன் காரியங்களைச் செய்யும் இயல்பு டையவர்களாக ஆகிவிடுகின்றார்கள். சில குழந்தைகள் சிறு பிராயத்திலேயே பயமின்றி செயல்படுவதை நாம் பார்க்க முடியும்.ஆனால் அதே குழந்தைகளை அச்சுறுத்தி நாம் வளர்க்கும் பொழுது அவை பயஉணர்ச்சிக்கு இடம் கொடுத்து எதைக் கண்டாலும் பயப்படும் கோழைகளாக வாழ்க்கையில் சிக்கல்களை எதிர் நோக்கிச் சமாளிக்கும் திராணியற்றவர்களாக இருந்து விடுகிறார்கள்.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# தர்மத்தை நிலை நாட்டும் வகையில் காரியங்களை நிறைவேற்ற வேண்டும்

## பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.14

இறைவனுடைய அவதாரங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒன்றை உணர்த்துவதாகவே அமைந் துள்ளன. இந்த அவதாரங்கள் வழி அதன் விழுமியங்களுக்கு கட்டுப் பட்டு தர்மத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்ற வகையில் எமது காரியங்களை நாம் நிறைவேற்ற வேண்டும்.

இதன் மூலம் எமது வாழ்க் கையின் தத்துவத்தை இறைவனின் அருளாட்சியுடன் உணர்ந்து கொள்ள முடியும் என்று சின்மயாமிஷனின் வடமாகாண வதிவிட ஆச்சாரி பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவித்தார்.

கிருஷ்ணன் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு முழங்காவில் கிருஷ்ணர் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட நிகழ்வில் ''கண்ணன் அவதரித்து விட்டான்'' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:-

இந்து சமயத்தில் இருக்கக் கூடிய ஒரு சிறப்பு இறைவன் தருமத்தை நிலைநாட்டுவதற்காக காலத்துக்குக் காலம் பல அவதாரங் கள் எடுத்து எல்லா ஜீவராசி களையும் தன்னுடைய அருளாட் சிக்கு உட்படுத்துவதாகும். அந்த வகையில் காத்தல் கடவுளாம் விஷ்ணு பகவான் பத்து அவதாரங்களை எடுத்திருக்கின் றார். இன்னும் எடுக்க இருக்கிறார்.

அவதாரம் என்று சொல்லும் போது இறைவன் தன்னுடைய நிலையில் இருந்து இறங்கிவருதல் என்று பொருள்படும். விஷ்ணு பகவானுடைய பத்து அவதாரங் களும் உயிரினத்தின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை எடுத்துக் காட்டுகின்றது. முதலாவதாக ஏற்பட்ட அவதாரம் மீன்அவதாரம். (இது நீரில் மட்டும் வாழக்கூடியது) அடுத்து இடம்பெற்றது கூர்ம (ஆமை) அவதாரம். (இது நிலத்திலும், நீரிலும் வாழக் கூடியது) மூன்றாவது வராக (பன்றி) அவதாரம். இது அடுத்த வளர்ச்சியைக் குறிக்கிறது. மிருகமாக எல்லா இடங்களிலும் செல்லக் கூடியதாகவும், குட்டி களுடன் ஒற்றுமையாக வாழக் கூடியதாகவும் இது உள்ளது. நான்காவது நரசிம்ம அவதாரம். நர (மனிதன்), சிம்ம (மிருகம்) இது மனிதன் பாதி மிருகம் பாதி கலக்கப்பட்டது. மிருகத்தன்மையி லிருந்து மனிதத் தன்மைக்கு மாற்றம் பெறுவதைக் குறிக்கிறது.

ஐந்தாவதாக வாமண (குள்ள மனிதன்) முழுமையான கட்டை மனிதன். மிருகத்தன்மையில் இருந்து விடுபட்டு மனித குணத் துடன் இருப்பதைக் குறிக்கிறது. ஆறாவதாக பரசுராம அவதாரம் முழுமையான மனிதனாக இருந் தாலும் கையிலே கோடரி வைத்திருக்கிறான். (முழுமையான மனிதனாக உடல் ரீதியாகவும் மிருக உணர்வுடனும் இருப்பதைக் குறிக்கும்.)

ஏழாவது இராம அவதாரம். இது பரிபூரண மனிதனைக் குறிக்கிறது. எட்டாவது பலராம அவதாரம். இதுவும் பரிபூரண மனிதத் தன்மையைக் குறிக்கிறது. ஒன்பதா வதாக கிருஷ்ண அவதாரம் மனிதர்களின் உயர்ந்த நிலை யையும், பத்தாவதாக கல்கி அவதாரம் இடம்பெறவுள்ளது.

இந்த அவதாரம் பல வருடங் களுக்கு பிற்பாடு தெய்வீக அவதா ரமாக இடம்பெறவுள்ளதால் ஆக விஷ்ணு பகவானுடைய பத்து அவதாரங்களும் உயிரினத்தின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

எனவே இறைவனுடைய அவதா ரங்கள் எமக்கு ஏதோ ஒன்றை உணர்த்துவதாக அமைந்திருப் பதால் அதன் வழியான வாழ்க்கை விழுமியங்களுக்கு நாம் கட்டுப் பட்டு நடக்க வேண்டும். (எ-14)

# புனரமைப்புக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

வரணி,செப்.14

வரணி அரசினர் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்பு சம்பந் தமான கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் வைத்திய சாலையில் இடம்பெற்றது.

தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர் விவரம் வருமாறு:-

தலைவர்-டாக்டர்.க.ஆறுமுகம், உபதலைவர்-சி.சின்னத்தம்பி, செயலாளர்-செ.நவரட்ணசாமி (ஜே.பி), பொருளாளர்-வீ.சிவரா சசிங்கம், உபசெயலாளர்-ம.குக தாசன், நிர்வாகசபை உறுப் பினர்களாக-ப.சுடரானந், ம.வானதி, பா.விமலா, க.கணேசலிங்கம், கா.கந்தசாமி, க.ஆறுமுகம், கணக்காய்வாளராக சி.அருணாசலம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-122)

# சிறுவர் கலாசார போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ். சமுர்த்தி அலுவலக சிறுவர் கலாசார போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன. வெற்றியீட்டிய சிறுவர்களின் விவரம் வருமாறு:-

**15-18 வயது**

முதலாம் இடம்- என்.சிந்துஜா, நல்லூர் பிரதேசசெயலகம், இரண்டாம் இடம்- அருள் அருள் நாயகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- வி.ஜந் துஜா,கோப்பாய் பிரதேச செயலகம்.

**சித்திரம் வரைதல்**

**5 - 9 வயது**

முதலாம் இடம்- எஸ்.சிவானு சன், நெடுந்தீவு பிரதேச செயலகம், இரண்டாம் இடம்- ஆர்.யுனிஸ், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- ரி.சதுசனன், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.

**10- 14 வயது**

முதலாம் இடம்- பி.கபிலன் உடுவில் பிரதேச செயலகம், இரண் டாம் இடம்- ஜெ.மன்மதகரன், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்-எஸ்.திவ்யன், ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்.

**15-18 வயது**

முதலாம் இடம்- ஜெ.பகீரதன், பருத்தித்துறை பிரதேச செயலகம், இரண்டாம் இடம்- [illegible], யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்-ஆர்.சன்ராஜ், தெல் லிப்பழை பிரதேச செயலகம்.

**சிறுகதை**

**5 - 9 வயது**

முதலாம் இடம்- ஏ.கியூறிலூட் சலா,நெடுந்தீவு பிரதேச செயலகம், இரண்டாம் இடம் -ரி.சதுசனன், சண்டிலிப்பாய் பிரதேச செய லகம்,மூன்றாம் இடம்- ஆர்.திபீகா, சங்கானை பிரதேச செயலகம்.

**10-14 வயது**

முதலாம் இடம்-என். பிரகலா தன், சங்கானை பிரதேச செயலகம், இரண்டாம் இடம்- ஏ.திலுக்சனா தேவி,நெடுந்தீவு பிரதேச செயல கம், மூன்றாம் இடம்-என்.லக் சிகா,காரைநகர் பிரதேச செயலகம்.

**15-18 வயது**

முதலாம் இடம்-ஏ.வேணி ஸ்ரெ லினி,நெடுந்தீவு பிரதேச செயல கம், இரண்டாம் இடம்-கே.நிரோ ஜினி, காரைநகர் பிரதேச செயல கம், மூன்றாம் இடம்,வி.சிந்துஜா, வேலணை பிரதேச செயலகம்.

**திறந்த குழு நாடகம்**

முதலாம் இடம்-சுழிபுரம் மேற்கு கெக்குளு கழகம், சங்கானை பிர தேச செயலகம், இரண்டாம் இடம்- மல்லாகம் கெக்குளு கழகம், தெல் லிப்பழை பிரதேச செயலகம், மூன்றாம் இடம்-தியாகராஜா கெக் குளு கழகம்,காரைநகர் பிரதேச செயலகம்.

(எ-14) (முற்றும்)

# பேராசிரியர் தி.வேல்நம்பிக்கு சிறந்த பேராசிரியருக்கான விருது



யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பிக்கு உலகளாவிய ரீதியில் சிறந்த பேராசிரியர் என்ற விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் பாண்டிச் சேரியைத் தளமாகக் கொண்டு இயங்கும் விஞ்ஞானிகள்,அபி விருத்தியாளர்கள், மற்றும் பீடங்க ளுக்கான சங்கம் (Association of Scientist, Developers and Faculities & ASDF ) என்ற அமைப்பு உலகளாவிய ரீதியில் இருந்து கிடைக்கப்பெற்ற 350 விண்ணப்பங்களைப் பரிசீலித்து இந்த விருதை அறிவித்துள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் 30ஆம் திகதி சென்னை கில்டன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இதேவேளை முகாமைத்துவக் கல்விக்கான வாழ்நாள் சாத னையாளர் விருது என்ற உயர் விருதும் ஏற்கனவே, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் பேராசிரியர் தி.வேல்நம்பிக்கு வழங்கப்படவுள்ளதும், இந்த விருது வழங்கல் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் இடம் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(எ)

# நியமனம்

தென்மராட்சி கல்வி வலய அலுவலக நிர்வாக உத்தி யோகத்தராக திருமதி லோஜினி யசோதரன் நியமிக்கப்பட்டார்.

அலுவலகத்தில் நிர்வாக உத்தி யோகத்தராக கடமையாற்றிய சி.தர்மகீர்த்தி இளைப்பாறியதைய டுத்து கல்வி வலய நிதிக் கிளையின் பிரதம முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய திருமதி லோஜினி யசோதரன் நியமிக்கப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆபத்தான பாதையில் அரசு

போருக்குப் பின்னர் ஒரே தேசம் ஒரே இனம் என்கிற கூப்பாடுகள் ஓங்கி ஒலித்தாலும் இந்த நாடு இனத்துவ ரீதியில் பிரிந்தே கிடக்கிறது என்பதற்கு கிழக்குத் தேர்தல் சிறந்த உதாரணம்.

கிழக்கு மூவினங்களையும் கொண்ட மாகாணம். அங்கே நடந்த முடிந்த தேர்தல் முடிவுகள் எந்த இனக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையைத் தரவில்லை. தமிழர்கள் தமிழர்களுக்கும் சிங்களவர்கள் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்குமே பெரும்பாலும் வாக்களித்துள்ளார்கள்.

கிழக்கு மாகாண சபைக்கான 37 ஆசனங்களில் 35 மட்டுமே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றது. மீதி இரண்டும் மேலதிக ஆசனங்களாக வெற்றி பெற்ற கட்சிக்கு வழங்கப்படுகின்றது. அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 35 ஆசனங்களில் 9 சிங்களவர்களும் 15 முஸ்லிம்களும் 12 தமிழர்களும் அடங்குகிறார்கள்.

2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி கிழக்கில் பதினைந்தரை லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்டச் சமமான நிலையிலும் சிங்களவர்கள் சற்றுக் குறைவாகவும் காணப்படுகிறார்கள். தேர்தல் முடிவுகளிலும் இனப்பரம்பலின் இந்த ஆதிக்கத்தைக் காணமுடியும்.

முஸ்லிம்களின் வாக்குகளையும் பெறுவதற்காக தனது பட்டியலில் அரசு முஸ்லிம்களுக்கு அதிக இடங்களைக் கொடுத்திருந்தமையால் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கை முதன்மை பெற்றது. எனினும் வாக்களிக்கும்போது அந்தந்த இன மக்கள் தத்தமது இனப் பிரதிநிதிகளுக்கே வாக்களித்திருக்கிறார்கள் – அவர்கள் எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் – என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன.

இந்தக் கணக்கு வழக்குகளின் அடிப்படையில் கிழக்கில் தேசிய அரசு ஒன்று அமைவதில் தவறு ஏதும் இருக்க முடியாது. ஆனால் மனித வாழ்க்கையும் அரசியலும் கணக்கு வழக்குகளுக்குள் மட்டும் அடங்குவதன்று. எனவேதான் கிழக்கில் தேசிய அரசு ஒன்றை அமைப்பது நோக்கி இலங்கைக்கு வெளியில் இருந்தான சக்திகள் வழங்கிய அழுத்தங்கள் பெருமளவில் வெற்றியளிக்கவில்லை.

அரசிடம் இருந்து தேசிய அரசுக்கான அழைப்பு ஒன்று வரும் என்றும் கூட்டமைப்பு அதனை எடுத்த எடுப்பில் நிராகரிக்காமல் இருக்க வேண்டும் என்றும் அந்தச் சக்திகள் விரும்பின. அதற்காகக் காய் நகர்த்தின. ஆனால் அரச உயர் மட்டத்தில் இருந்து அதற்குப் போதிய சாதகமான சமிக்ஞைகள் காட்டப்படவில்லை.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நல்லெண்ண நடவடிக்கையாகக்கூட இது இருக்க முடியும் என்பதாக அந்தச் சக்திகள் நம்பின. ஆனால் அரசு அதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு வெளியிலிருந்து எவ்வளவுதான் அழுத்தங்கள் வந்தாலும் அடங்காத போக்கில் செயற்படும் இந்த அரசின் போக்குத் தொடர்கிறது. இது ஆபத்தானது. இலங்கையின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கக் கூடியது. மீண்டும் இங்கு அமைதியின்மையை உருவாக்கக் கூடியது.

# போர்: இந்தியாவுக்குப் படு தோல்வி சீனாவுக்குப் பெரு வெற்றி அமெரிக்காவுக்கும் தோல்வி

■ சண்முகவடிவேல்

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான இறுதிப் போரின் தாய் சீனா. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ வெற்றியடைந்தமைதான் இந்தப் போரில் குலவெற்றி.


போர் ஜனாதிபதித் தேர்தல் சார்ந்த அரசியலால் நிர்ணயிக்கப்பட்டது. இராணுவ அர்த்தத்தில் புலிகளின் தோல்வி கடலில் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. புலிகளின் 13 ஆயுதக் கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டதோடு புலிகள் தரையில் முடமாக்கப்பட்டுவிட்டனர். ஆனாலும் குறிப்பாக இந்திய மத்திய அரசின் பொதுத்தேர்தல் களமும், சர்வதேச ராஜதந்திர சூழலும், புலிகளின் கெட்டியான இராணுவத் திறனும், தரையில் ராஜபஷக்களுக்கு சவால் விடக்கூடிய போர்ச் சூழலை ஏற்படுத்தியிருந்தன.

ராஜபக்ஷக்கள் இதனை பின்வரும் வகைகளில் தாண்டும் முயற்சியில் ஈடுபட்டனர். முதலில் இராணுவ இழப்புக்களின் மத்தியில் ஸ்கந்தபுரத்தோடு எல்லையிட்டுத் தம் தாக்குதலை நிறுத்த இராணுவத்தினர் திட்டமிட்டனர். ஆனால் களநிலையில் ஏற்பட்ட சில மாற்றங்களைத் தொடர்ந்து இராணுவம் தொடர்ந்து முன்னேறுவது என்ற முடிவுக்கு வந்தனர்.

ஆயினும் கிளிநொச்சியைக் கைப்பற்றிக் கண்டி வீதியை தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதுடன், போரை நிறுத்துவதே அரசியல் ரீதியாகத் தமக்குச் சாதகமானதென பஸில் ராஜபக்ஷ ஒரு கருத்தை முன்வைத்தார் என உறுதிப்படுத்தப்படாத செய்தி உண்டு. அதாவது கண்டி வீதியைக் கைப்பற்றுவதோடு புலிகளை முடக்கி போரை நிறுத்துவது தமக்குச் சாதகமானதென பஸில் கருதினார் போலத் தெரிகிறது. ஆனால் கோத்தபாய ராஜபக்ஷவும், இராணுவத் தலைமைத் தளபதி சரத் பொன்சேகாவும், புலிகளை அழிக்கும்வரை போரைத் தொடரவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர் எனவும் கூறப்படுகிறது.

சிங்கள அரசு இதுவரை கடைப்பிடித்து வந்த ஓர் அரசியல் இராணுவ மூலோபாயம் இப்போது ராஜபக்ஷ அரசால் மாற்றப்படும் நிலையேற்பட்டது. அதாவது இலங்கைக்கு எதிரான அம்மை நோய் போல இந்திய ஆதிக்கப் படர்ச்சி இருப்பதாகவும், விடுதலைப் புலிகள் அந்த அம்மைநோயை எதிர்க்கவல்ல அமைப்பாகப் பேணப்படவேண்டியவர்கள் என்ற ஒரு மூலோபாயத்தை பிரேமதாச காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு வகுத்திருந்தது.

அதாவது ஐ.தே.கவின் கொள்கையின்படி புலிகள் பலவீனப்படுத்தப்பட்டு, அதேவேளை பேணப்பட வேண்டியவர்கள். ஆனால் உலக அரங்கிலும் குறிப்பாக ஆசியாவில், சீனா தலையெடுத்து வரும் நிலையில் இந்திய ஆதிக்கத்தை இலங்கையில் பரவவிடாது தடுத்து நிறுத்த வல்ல சீனப்பெரும் சுவரை பாக்கு நீரிணையில் நிறுத்தி விடலாமென ராஜபக்ஷக்கள் கணக்குப் போட்டனர். [illegible] தேவைப்படவில்லை.



**அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதற்கு வீரமும் இராணுவத் திறனும் தேவையில்லை. மக்களை கொல்வதென்று முடிவு எடுக்கவல்ல கோழைத்தன மனமே அதற்குப் போதுமானது. எனவே இங்கு சிங்களம் பெற்ற வெற்றி புலிகளுக்கு எதிரான அவர்கள் கூறும் இராணுவ வியூக வெற்றியல்ல. அது மக்களைக் கொன்றுகுவித்த அவமானகரமான ஓர் இனப்படுகொலை வெற்றியாகும்.**

1980களில் இலங்கைக்கு உறுதுணையாக இருந்த அமெரிக்கா பின்வாங்கியது போன்ற சர்வதேச சூழல் தற்போது சீனாவிற்கு இல்லையென்றும், சீனா தமக்கு நிரந்தர உறுதுணையாக இருக்கக்கூடிய பலத்தை பெற்று வருவதாகவும் நம்பிய ராஜபக்ஷ அரசு புலிகளை அழிக்கும் வரை போரைத் தொடர்வது என்ற முடிவுக்கு வந்தது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கிற்கு முடிவு கட்ட விரும்பிய இந்திய ஆட்சியாளரின் பிரதான தேவையைப் பயன்படுத்தி சீன அரசின் உறுதியான ஆதரவுடன் போரை இறுதிவரை நடத்த ராஜபக்ஷக்கள் சித்தமாகினர். இந்திய தேர்தல் சூழலில் ஏற்பட்ட தளம்பல்களை தமது ராஜதந்திரத் திறனால் ராஜபக்ஷக்கள் கடந்தார்கள். மக்களைப் படுகொலை செய்வதன் மூலம் தம் இராணுவ முன்னேற்றத்தை அடையலானார்கள். இங்கு போர் அப்பாவி மக்களைப் படுகொலை செய்கின்ற இனப்படுகொலையின் வெற்றியாக அமைந்ததே தவிர இராணுவ வியூகத்தின் வெற்றியல்ல. அதாவது இனப்படுகொலை வியூகத்தால் வெற்றி பெற்றார்களே தவிர இராணுவ வியூகத்தால் வெற்றி பெறவில்லை.

முழு அளவில் மக்களை பெரும் படுகொலைக்கு உள்ளாக்கியமையாலும், உணவு, மருந்து விநியோகங்களை முற்றிலும் இல்லாமல் செய்தமையாலும், மக்களை நடமாட்டமின்றி சிறுபகுதிக்குள் அடைத்து சமூகச் செயற்பாட்டையும், மனித நடமாட்டத்தையும் முற்றிலும் முடமாக்கிவிட்டு அந்த மக்கள் மீது கேட்பாரின்றி வான்வழி கடல்வழி, தரைவழிகளால் குண்டு மாரி பொழிந்தமையாலும், பெரும் தமிழின அழிப்பு அரங்கேறியது; புலிகள் செயலற்று வீழ்ந்தனர்.

இதைத்தான் இன்றைய இலங்கை அரச தரப்பினர் இராணுவ வெற்றி என்று கூறுகிறார்கள். அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதற்கு வீரமும் இராணுவத் திறனும் தேவையில்லை. மக்களை கொல்வதென்று முடிவு எடுக்கவல்ல கோழைத்தன மனமே அதற்குப் போதுமானது. எனவே இங்கு சிங்களம் பெற்ற வெற்றி புலிகளுக்கு எதிரான அவர்கள் கூறும் இராணுவ வியூக வெற்றியல்ல. அது மக்களைக் கொன்றுகுவித்த அவமானகரமான ஓர் இனப்படுகொலை வெற்றியாகும்.

புலிகளை முடக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் கொள்கையே தவிர புலிகளை அழிக்க வேண்டும் என்பதல்ல. புலிகள் சவால்விட முடியாத அளவிற்கு முள்ளிவாய்க்காலுடன் முடக்கப்பட்டுவிட்டதாக நம்பிய மேற்குலகம் பெரும் தொகையில் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த சூழலில் மனிதாபமான படையிறக்கலின் மூலம் ராஜபக்ஷ அரசையும், புலிகளையும் ஒரே நேரத்தில் கட்டுப்படுத்தி விடலாமென நம்பியது போல் தெரிகிறது. ஆனால் புலிகளின் தலைமைப் பீடம் அழிக்கப்படும் வரை போர் தொடரப்பட வேண்டுமென்ற இந்திய அரசின் விருப்பத்தை மேற்குலகால் தாண்ட முடியவில்லை.

அமெரிக்கப் படை இறுதி நேரத்தில் பாதுகாப்பதற்கு வரும் என்ற ஒரு தகவல் புலிகளிடம் காணப்பட்டுள்ளது. அதேவேளை போர் நிறுத்தம் கோரி புலிகள் இறுதி நாள்களில் ஒரு சீன வெளிநாட்டுத் தூதரகத்திற்கு ஊடாக சீனாவை அணுகியிருந்தனர். இரண்டு நாள் அவகாசம் கோரிய குறிப்பட்ட அந்த சீனத் தூதரகம் இறுதியில் கைவிரித்தது. எப்படியோ 140,000இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் உடலங்களின் மீது உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் தத்தம் அரசியல் இலக்குகளைக் கணக்குப் பார்த்தனர். அனைத்து வகை உள்நாட்டு, வெளிநாட்டு சர்வதேச அரசியல் சக்திகளின் தேவைகளுக்குமான அரசியல் இராணுவ பரிசோதனைப் பிராணிகளாய் (Guinea pigs) அப்பாவித் தமிழ் மக்கள் ஆக்கப்பட்டனர்.

தன் மயிர் துவாரத்திற்கூட வியர்வை படியா பெரு வெற்றியை சீனா இந்தப் போரில் அடைந்தது. தமிழர்கள் பேரழிவிற்கு உள்ளாகினர். புலிகள் களநிலை அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்டனர்.

இந்தியா புலிகளை அகற்றும் விடயத்தில் வெற்றி பெற்றாலும் சீனாவிடமும், மற்றும் அந்நிய சக்திகளிடமும் இலங்கையைப் பெருமளவு பறிகொடுத்து விட்டது. இந்தியா மலையை இழந்து கைமண் பெற்றது. இதனால் கடல்வழி இந்தியாவின் பாதுகாப்பும், வளர்ச்சியும் கேள்விக்கு உள்ளாகிவிட்டன. ராஜபக்ஷக்கள் தம் பரம்பரைக்கான வெற்றியைத் தேடினர். ஆயினும் இலங்கை அரசு, தான் பிளவுண்டு நீண்ட காலத்தில் தோல்வியடைவதற்கான ஆழமான மூலக் கூறுகளைப் பெற்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தை நோக்கி எங்கள் சிந்தனைகள் சிறகு விரிக்கட்டும்

ச.சுவந்தினி
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்.



யாழ்.மாவட்ட மக்களின் பாரம்பரிய வாழ்வாதாரத் தொழிலாக விவசாயம் இருப்பதுடன் பயிர்ச்செய்கைக்குரிய வளமான சூழலும் தொன்று தொட்டு இன்று வரை பேணப்பட்டும் வருகின்றது . தொழில்நுட்பம் பலவாறாக வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் விவசாயத்திலும் அதனைப் பயன்படுத்துவது பொருத்தமானதாகவே இருக்கும்.

ஆனால் தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்தும் போது தான் அதிலிருந்து உச்ச விளைவினைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு முன்பாக எமது வளங்களைப் பாதுகாப்பது முக்கிய கடமையாகும். அப்பொழுது தான் எமது உள்ளூர் வளங்களினையும் தொழில்நுட்பத்தினையும் ஒன்றிணைத்து உரிய பயனைப் பெற முடியும். வளங்களில் மிக முக்கியமானது மண் ஆகும். ஆனால் இனிவரும் காலங்களில் அதன் வளங்குன்றி பயிர்ச் செய்கைக்கு உகந்ததல்லாத நிலையை அடையக் கூடிய அபாயம் உள்ளது. அதிக இலாபம் கருதி தவறான பயிர்ச் செய்கை முறைகளை மேற்கொள்வதே அதற்கான பிரதான காரணமாகும். பொதுவாக நாங்கள் எதிர்கால விளைவுகளை மறந்து இன்றைய தினத்திற்கான இலாபங்களை மட்டுமே சிந்திக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் பயிர்ச்செய்கைக்குள்ளான நிலங்களிலுள்ள மண்ணானது இன்று வரை உகந்ததாகக் காணப்படுவதுடன் அதில் பற்றாக்குறையெதுவும் ஏற்படவில்லை.

ஆனால் வெளிநாடுகளில் இந்தப்பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக கடலின் மீது கூட பயிர்ச்செய்கையை மேற்கொள்கிறார்கள். எனவே எமது வளங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து ஆரோக்கியத்துடன் பேண வேண்டும். இதில் விவசாயிகளின் பங்கு அதிகமாகும். தொடர்ந்து மண்கட்டமைப்பானது எவ்வாறு தவறான, போதிய அறிவில்லாத பயிர்ச்செய்கை முறைகளின் மூலம் பாதிக்கப்படுகின்றது எனவும் அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகள் பற்றியும் ஆராய்வோம்.

மண்கட்டமைப்பு என்பது மண் துணிக்கைகளையும் அவற்றிற்கிடையில் காற்றிடைவெளிகளையும் கொண்ட அமைப்பாகும். அதனைச் சுற்றிவர சேதனப் பொருள்களின் படை காணப்படுகின்றது. மண் துணிக்கைகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து கட்டமைப்பு வேறுபடும். மண்ணில் சேதனப் பொருள்களின் அளவு குறைவாகக் காணப்படும் பொழுது மண் கட்டமைப்பு ஒரு நிலையற்ற தன்மையை அடையும். நிலையான மண் கட்டமைப்பானது நீர் ஊடுருவலுக்கும் காற்றோட்டத்திற்கும் அத்தியாவசியமானது. அப்பொழுது தான் நாற்றுக்களின் வெளிப்பாடும் வேர் வளர்ச்சியும் அதிகரிக்கும்.

'மண் கட்டமைப்புச் சரிவு என்பது மேற்கூறிய நிலையான கட்டமைப்பானது பல்வேறு செயற்பாடுகளினால் மாற்றமடைவதாகும். இது மண்வகை, நிலப் பயன்பாட்டுச் செயற்பாடுகள், நீர், வளி, சத்துக்கள் என்பனவற்றில் தங்கியுள்ளது.

பல்வேறு விவசாய நடைமுறைகள் மண் கட்டமைப்புச் சரிவை ஏற்படுத்த வல்லன. இயந்திரங்களைப் பயன்படுத்தி மண்ணைப் பண்படுத்தல், இயந்திர களைக்கட்டுப்பாட்டு முறைகள், மூடுபயிர்களை மண்ணிலிருந்து அகற்றுதல், திரும்பத் திரும்ப ஒரே இடத்தில் தொடர்ச்சியாக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் மண்ணினது கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றன.

மீண்டும் மீண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதனால் மண் திரள்கள் உடைக்கப்பட்டு இறுதியாக ஒரு நெருக்கமான நிலையை அடைகின்றது.

இதனால் காற்றிடைவெளிகள் குறைவதுடன் தொடர்ச்சியான பண்படுத்தலுக்கு அதிக சக்தியைப் பிரயோகிக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. எனவே இவற்றைப் பயன்படுத்துவதைக் குறைக்கலாம். அவ்வாறு பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படின் அதற்கேற்ற மண் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். உதாரணமாக பசுந்தாட் பசளை உட்பட [illegible] சேதனப் பசளைகளை மண்ணினுள் சேர்ப்பதன் மூலமாக மண்ணிலுள்ள சேதனப் பொருள்களின் அளவினைக் கூட்டி மண் கட்டமைப்பினை நிலையான தன்மையாகப் பேண முடியும்.

இயன்றளவு அசேதன உரங்களைப் பாவிப்பதைக் குறைப்பது நன்று. இதனால் நன்மை தரும் உயிரினங்களின் பெருக்கத்தினைப் பேணுவதுடன் மண்ணின் தரத்தினை அதிகரிக்கவும் முடியும். இரசாயனங்கள் இந்த உயிரினங்களின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

தொடர்ச்சியாக ஒரே இடத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது மண்ணிலுள்ள சேதனப் பொருள்கள் மற்றும் ஊட்டச் சத்துக்களை தாவரம் பயன்படுத்திக் கொள்ளுவதனால் அவற்றின் அளவு குறைவடைகின்றது. அத்துடன் சேதனப் பொருள்கள் மண் துகள்களுக்கு ஆதாரம் வழங்குவதுடன் மண் அங்கிகளுக்கு (மண்புழு) உணவாகவும் அமைகின்றது. அதிகரித்த தொடர்ச்சியான சாகுபடியானது மண் கட்டமைப்பைச் சீர்குலைக்கும். எனவே இவ்வாறான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கு சுழற்சி முறைப் பயிர்ச்செய்கையானது ஒரு தீர்வாக அமையும்.

இது பீடைத் தாக்கங்களைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் மண்ணின் சத்துக்களைத் தொடர்ச்சியாகப் பேணவும் உதவுகிறது. அவரைக்குடும்பத் தாவரங்களை (பயறு, கௌப்பி) சுழற்சி முறைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவது பொருத்தமானதாகும். காரணம் அவை வளிமண்டல நைதரசனை மண்ணில் பதிக்கும் ஆற்றல் கொண்டவை.

மேலும் களைகளின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவதோடு மீதிப்பயிர்கள் மற்றும் மண் மூலமாக அடுத்த போகங்களுக்கு [illegible] பீடைகளைக் கட்டுப்படுத்தவும் இந்தப் பயிர்ச்செய்கை முறை உதவும். இதன் மூலமாக பயிர்கள் வினைத்திறனான முறையில் நீர், ஊட்டச்சத்துக்கள், சூரிய ஒளி, இடப்பரப்பு முதலியனவற்றைப் பயன்படுத்திக் கொள்வதனால் அதிக உற்பத்தியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மண்ணில் மூடுபயிர்கள் காணப்படுமாயின் நீர், காற்று மூலமாக ஏற்படும் மண்ணரிப்பினைத் தடுக்க முடியும். அதிக மழைவீழ்ச்சியின் போது மழையானது நேரடியாகத் தரையை அடிப்பதனால் வளமான மேல் மண்ணானது இழக்கப்படுகின்றது.

இதனை விட நீர் வழிந்தோடலின் மூலமாக மேலும் இந்தச் செயற்பாடு அதிகரிக்கின்றது. இதனால் நெருக்கமான படையமைப்பு ஏற்படுகிறது. மிகுதியாக இருக்கும் மண்படையின் மேற்படையானது உலர்வடைந்து உதிரக் கூடிய தன்மையை அடையும். நெருக்கமான படையமைப்பு பயிர்ச்செய்கைக்கு பயன்படும் மண்படையின் கீழும் உருவாகலாம்.

இதனால் மண்ணில் நீர் ஊடுருவலுக்கும் நீரை ஏனைய படைகளுக்கு விநியோகிப்பதற்கும் உதவுகின்றது. ஆரோக்கியமான கட்டமைப்பு எனின் ஆழமான படைகளுக்கு நீர் இழப்பதை குறைத்து தாவர வளர்ச்சிக்கு தேவையான நீரை வழங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும்.

மழை பெய்த பிற்பாடும் நீர்ப்பாசனம் செய்த பிறகும் தேவையான நீரைத் தேக்கி வைத்திருக்கக் கூடிய ஆற்றல் மட்டுமல்லாது காற்றிடை வெளிகளை மீளப் பெறக்கூடிய தன்மையையும் கொண்டிருக்கும். இந்தவகையான மண்ணைப் பயன்படுத்துவது இலகுவாக இருப்பதுடன் தாவரங்கள் தமக்குத் தேவையான கணிசமான அளவு நீரை அகத்துறிஞ்சக் கூடியதாகவும் இருக்கும்.

ஆனால் நெருக்கமான படையமைப்பு காணப்படுமாயின் நீர் ஊடுருவல் குறைந்து அளவுக்கதிகமான நீர் மேற்படையினுள்ளேயே தேங்கி விடும். இதனால் காற்றின்றிய சூழல் ஏற்பட்டு வேர்களின் சுவாசம் பாதிப்படைந்து இறுதியில் அழுகல் நிலையை அடையும்.

மூடுதாவரங்களை வளர்ப்பதன் மூலமாக மண்ணில் பாதுகாப்பு மேற்படை போன்ற அமைப்பை ஏற்படுத்த முடியும். அதனை விட அவற்றின் மீதிகளை மண்ணில் இடுவதனால் மண்ணின் ஈரப்பதனைப் பேணுவதுடன் ஆவியாதலின் அளவினையும் குறைக்கலாம். கால்நடைகளின் அதிகபடியான மேய்ச்சலும் அசைவும் மேற்கூறிய மண்கட்டமைப்புத் தாக்கங்களை சிறிய அளவில் ஏற்படுத்தலாம்

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு விட்டு அறுவடை செய்த பிற்பாடு தரையை வெறுமையாக விடுகிறார்கள்.இதனால் காற்றின் மூலமாக சிறிய மண்துணிக்கையானது எடுத்துச்செல்லப்படுவதனால் ஊட்டச்சத்துக்கள் அடுத்தடுத்த பயிர்ச்செய்கைக்கு கிடைக்கும் அளவு குறைவடைகின்றது. இதனால் நாற்றுக்களாக இருக்கும் போதே பயிர்களால் மேலதிக வளர்ச்சியைத் தொடர முடியாமல் பின்னர் அவை வாடி விடுகின்றன.

எனவே தரையை வெறுமையாக விடாமல் சணல் போன்ற மூடுபயிர்களை வளர்த்து இவ்வாறான விளைவுகள் ஏற்படுவதைக் குறைக்க வேண்டும்.

நிலைபேறான பயிர்ச்செய்கை என்பது சூழலிலுள்ள வளங்களையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி தரமான உணவு உற்பத்தியினை மேற்கொள்வதோடு எதிர்கால சந்ததிகளும் வளங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பதாகும். இதனால் வளங்களின் சுரண்டல் தடுக்கப்படுவதுடன் சேதனப் பொருள்கள் மற்றும் சத்துக்களின் மீள் சுழற்சிக்கும் இது வழிவகுக்கும்.

எனவே விவசாயிகள் இவ்வாறான நடைமுறைகளுக்குத் தங்களைப் பழக்கிக் கொள்ள வேண்டும். இயற்கைச் சமநிலை மற்றும் சூழற்றொகுதியை குறுகிய கால வருவாயைக் கருதி மாற்றியமைப்பது எதிர்காலத்தில் கணக்கிட முடியாத செலவுகளை ஏற்படுத்தக்கூடும்.

அதிக இலாபத்தினைக் கருதி இப்பொழுது செய்யும் தவறான பயிர்ச்செய்கை முறைகள் எதிர்காலத்தில் அவற்றினைச் சீர்திருத்துவதற்கு அதிக செலவினை ஏற்படுத்தலாம் என்பதைக் கவனத்திற் கொண்டு இன்றைய பயிர்ச்செய்கை முறைகளை மேற்கொள்வது சாலச் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரை குறையான அர்ப்பணிப்பு

அன்று என்னுடைய பிறந்த நாளன்று. என்னைச் சந்தித்த என் நண்பர்- அமெரிக்காவில் இருந்து வந்தவர். அழகிய பரிசுப் பொதி ஒன்றை வழங்கி வாழ்த்துக் கூறினார். இது எதற்கு?'' என்றேன். '' அன்பளிப்பு.. அன்பின் அடையாளம்'' என்றார் நண்பர். அமெரிக்காவில் இப்படி யாராவது பரிசு கொடுத்தால் உடனடியாக அதை பிரித்துப் பார்த்து '' ஆஹா... இப்படி ஒன்று வாங்கத்தான் நினைத்திருந்தேன்... நீங்கள் கொடுத்து விட்டீர்கள்'' என்று கொடையையும் கொடுத்தவனையும் புகழ்ந்து தள்ள வேண்டும். இந்தியாவில் உடனே பிரித்தால் '' அடப்பாவி உடனே பிரித்து விலை என்னன்று பாக்கறான்'' என்று கேலி சொல்லுவார்கள். என் நினைவுக்கு இரண்டும் மாறி மாறி வந்ததால் ஒரு நிமிடம் தடுமாறினேன்.

நண்பரே அந்தப் பொட்டலத்தை என்னிடம் இருந்து வாங்கி, அதன் அழகிய மேலுறையையும் என் சிக்கலையும் ஒரே நேரத்தில் கிழித்துப் பரிசை விடுவித்தார். அழகிய கைக்கடிகாரம். ''நன்றி என்ற வார்த்தையை சொல்லி உங்களை அந்நியப்படுத்த விரும்பவில்லை'' என்றேன். நண்பரோ என்னை ஆக்கிரமிக்கத் தொடங்கினார். '' உடனே இதைக் கட்டுங்கள்'' என்றார். ஏற்கனவே நான் ஒன்று கட்டி இருந்ததால் '' இரண்டு கடிகாரம் கட்டிக் கொண்டு போனால் மற்றவர்கள் சிரிக்க மாட்டார்களா?'' என்றேன். ''பழசைக் கழற்றி விடுங்கள்'' என்று அவரே அதைச் செயல்படுத்த பரபரத்தார். அத்தோடு விடவில்லை

'' நான் எப்போதும் உங்ளைப் பார்த்தாலும் நீங்க இந்த கடிகாரத்தோடு தான் இருக்க வேண்டும். இதைக் கழற்றவே கூடாது. இதை யாருக்கும் நீங்கள் பரிசளிக்கக் கூடாது. உள்ளே வைக்கக் கூடாது!'' என்று அடுக்கடுக்காய் நிபந்தனைகள் விதித்தார். அன்பில் கூட அடக்குமுறை அராஜகம் வலை பின்னத் தொடங்கியது.

'நான் என்ன அடகுக் கடையா வைத்திருக்கின்றேன்? எதோ அடகு பிடிக்கின்ற பொருளை அடகுக் கடைக்காரன் எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்' என்று நிபந்தனை ஒப்பந்தம் போடுகிற மாதிரி பேசுகிறாரே என்று எனக்குத் தோன்றியது. அன்பளிப்பின் மீது ஆளுமை செலுத்துதல் ஒரு போதும் தூய அன்பு ஆகாது. வழங்கப்பட்ட பொருள் மீது உள்ள மரியாதை, வழங்கப்பட்ட நபர் மீது இல்லை! எந்தக் கணம் பரிசு கை மாறுகிறதோ அந்தக் கணமே அந்தப் பொருள் மீதான சகல உரிமைகளும் எதிர்பார்ப்பும் அழிந்து போனால்தான் தூய அன்பு வெளிப்படுகிறது. அந்தப் பொருள் மீதான சகல பிடிப்புகளையும் விட்டுக் கொடுத்தால்தான் அது அன்பளிப்பு.. இல்லையேல் அது பரிசளிப்பு! அன்பளிப்பில பொருள் முக்கியமே அல்ல. இது பலருக்கும் புரிவதே இல்லை.

இந்த அன்பளிப்பை நம்மில் பலர் பிழையாகச் செய்வது போலவே இறைவனிடத்தில் எம்மை அர்ப்பணிக்கும் அர்ப்பணிப்பிலும் நாம் தவறுதலாகவே நடந்து கொள்கிறோம். எனக்குத் தெரிந்த ஒருவர் ஒரு கோயிலில் ஆண்டு தோறும் ஏழாம் திருவிழா முழுவதும் தமது உபயம் என்று வாக்களித்தார். ஆனால் 2ஆம் வருடம் அவருடைய வைப்பாட்டி கோயிலுக்கு வந்த போது குருக்கள் அந்த அம்மாளைச் சரியாகக் கௌரவிக்கவில்லை என்பதால் அடுத்த வருடம் முதல் திருவிழா செய்ய மறுத்து விட்டார்! அது பக்தியா? சமர்ப்பணமா? அர்ப்பணிப்புடைய ஆன்மிகமா? இல்லை, அராஜகம். அக்கிரமம். அயோக்கியத்தனம்.

நானே இறைவனுக்கு உரியவன்; எனவே என் செல்வம் சொத்து யாவுமே அவனது உடைமை என்கின்ற தெளிவும், தீர்க்கமும் இல்லாதவர்கள் கோயிலுக்கு கொடுப்பது கொடையல்ல, கொடுமை! தானமல்ல, திமிர்! இந்த அகில உலகமும் இறைவனுக்கே உரியது என்ற உண்மையை உணராமல் இறைவனுக்கு தாம் ஏதோ படியளப்பதாக நினைக்கும் வள்ளல்கள் வடிகட்டிய பாவிகள்....! அர்ப்பணிப்பைப் புரிந்து கொள்ள ஓர் நிகழ்ச்சி.



சுகி.சிவம்



# சமூகத்தின் முழு நம்பிக்கையைப் பெற்ற வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி.




(கடந்தவாரத் தொடர்ச்சி...)

உடல் உழைப்பால் உயர்ந்து கல்வியால் சிறந்த வாதரவத்தை கிராமத்தின் கல்வி வளத்துக்கு மூலதாரமாக விளங்கும் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் கிராமத்தோடு ஒன்றிணைந்த தொடர்பு நிலையில் காணப்படுகின்றன. கிராமத்தில் வாழும் பெற்றோர் தமது கிராமத்தில் உள்ள ஒரே ஒரு பாடசாலையில் பூரணமான நம்பிக்கை வைத்து தமது பிள்ளைகளை முழுமையாகச் சேர்த்துக் கொள்வது யாழ்.மாவட்டத்தில் எந்தப் பிரதேசத்திலும் கண்டு கொள்ள முடியாத உண்மையாகும். தூய்மையான கிராமியச் சூழல் மற்றும் கல்வியின் கவனக் கலைப்பான்கள் பெருமளவில் இல்லாத சமூகக் கட்டமைப்பு தனியார் கல்விநிலையங்களின் ஏகபோகமான ஆதிக்கம் என்பன இல்லாமல் இருப்பதால் மாணவர்கள் பாடசாலை மீதும் ஆசிரியர்கள் மீதும் நம்பிக்கை வைத்து கல்வி அடைவு மட்டத்தில் முன்னேறி வருகின்றனர்.

நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைக் கட்டமைப்பு உருவான காலப்பகுதியில் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு பணியாற்றிய அதிபர்கள்,ஆசிரியர்கள் அனைவரும் வாதரவத்தை வாழ் மக்களினாலும் பழைய மாணவர்களினாலும் நன்றியறிதலோடு இன்றும் நினைவு கூரப்படுகின்றனர். 1910 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் எஸ்.வல்லிபுரம், என்.ஏ.இராமலிங்கம், எஸ்.தம்பித்துரை, எஸ்.சின்னப்பு, ஜே.கே.சிவப்பிரகாசம், வே.சின்னத்தம்பி, த.கந்தசாமி, சி.கந்தசாமி, வீ.இளையதம்பி, த.கந்தசாமி க.இராசதுரை, நா.அருளம்பலம், ச.குமாரசுவாமி, சு.முத்துக்குமாரசுவாமி, எஸ்.சண்முகரத்தினம், எஸ்.சிவலிங்கராசா, கா.தர்மரத்தினம் ஆகியோரும் 2009.07.07 திகதியிலிருந்து ஜே.ஏ.தவநாயகமும் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

பொதுப் போக்குவரத்து வசதி மற்றும் வளவசதி குறைவான கிராமமாக வாதரவத்தை இருப்பதனால் அதிகஸ்டப் பிரதேசமாக கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத் தப்பட்டிருப்பதோடு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் பணிபுரியும் அதிபர் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக தலா 2500 ரூபா வழங்கப்படுவதோடு ஆசிரியர்கள்- அதிபர் சேவை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்போது சேவைக்கால வருடத்துக்கு 05 புள்ளி வீதம் ஆகக் கூடுதலாக 30 புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகளும் உள்ளன.

பாடசாலையில் இந்த வருடம் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புகளில் 175 மாணவர்களும் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளில் மொத்தம் 248 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். மாணவர்களுக்கான வகுப்பறை வசதிகளைப் பொறுத்த வரையில் தரம் ஒன்றுக்கான வகுப்பறையைத் தவிர ஏனைய வகுப்புகள் அனைத்தும் திறந்த நிலை வகுப்புகளாகவே உள்ளன.

இத்தகைய ஊக்குவிப்பு ஆசிரியர்கள் சுயவிருப்பத்தோடு பாடசாலையில் கடமை புரிவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்த மேலதிக வசதிநிலை பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை இல்லாமல் சமநிலைப்படுத்தி உள்ள போதிலும் உடற்கல்வி உள்ளிட்ட விசேட பாடத்துறைகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. தற்பொழுது 16 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பாடசாலையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் 2010.10.25 இல் மிக விமரிசையாக நடைபெற்றது.

பாடசாலையில் இந்த வருடம் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புகளில் 175 மாணவர்களும் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளில் மொத்தம் 248 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். மாணவர்களுக்கான வகுப்பறை வசதிகளைப் பொறுத்த வரையில் தரம் ஒன்றுக்கான வகுப்பறையைத் தவிர ஏனைய வகுப்புகள் அனைத்தும் திறந்த நிலை வகுப்புகளாகவே உள்ளன. இந்தநிலையில் வகுப்பறைக்கான கல்வி நிலைக் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்பாராத பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. 60 X 20 அளவு கொண்ட இரண்டு கட்டடங்களும் 40 X 20 கொண்ட கட்டடம் ஒன்றும் தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான பத்து வகுப்புகளையும் நடத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. பொருத்தமான வகுப்பறைத் தடுப்புகள் மற்றும் மறைப்புகள் இல்லாத நிலையால் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எதிர்பாராத நெருக்கடியை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். புதிய கல்விக் கொள்கை, மஹிந்த சிந்தனை போன்றவற்றின் அடிப்படையில் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கை எதிலும் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் இதுவரை உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை.

ஞானி

மட்டுப்படுத்தப்பட்ட வள வசதிகளுடன் கற்றல், கற்பித்தல், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் முழுமையாக அக்கறையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வகையில் தமிழ்த்தினப் போட்டி, மெய்வன்மைப் போட்டி உள்ளிட்ட சகல விதமான போட்டிகளிலும் விக்கினேஸ்வரா வித்தியாலயம், கோட்டமட்டம், வலய மட்டம், யாழ். மாவட்ட மட்டம் போன்றநிலைகளில் வெற்றிபெற்று பரிசில்களைப் பெற்று வருகின்றது.

செல்வி பா.தினேசா 11 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் வட மாகாண மட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். செல்வன் பா.யசிகன் 19 வயதுப் பிரிவு 1500 மீற்றர் ஓட்டத்தில் வடக்கு மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். செல்வன் வி.தஷிந்தாஸ் சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டியில் (தரம்-11) வட மாகாண மட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். அத்துடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்றனர்.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மன்றம், விஞ்ஞானமன்றம், கணிதமன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், இந்து மன்றம் உள்ளிட்ட அனைத்து மன்றச் செயற்பாடுகளும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுவதோடு சாரணியம் போன்ற செயற்பாடுகளும் உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலையோடு இணைந்த நிலையில் உள்ள வயல் நிலம் தனியாருக்குச் சொந்தமானது. தற்பொழுது மாணவர்களின் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதனை பாடசாலைக்குச் சொந்தமானதாக கொள்வனவு செய்வதற்கு பாடசாலைச் சமூகம் முயன்று வருகின்றது.

கிராமத்துக்கு மத்தியில் அமைந்திருக்கும் பாடசாலையின் எல்லை வேலிகள் பொருத்தமான பாதுகாப்பான முறையில் மறுசீரமைப்பு செய்வதற்கோ, எல்லை மதிலை அமைப்பதற்கோ உரிய நிதிவளம் இல்லாமல் இருப்பதால் பாடசாலைத் தோட்டம் மற்றும் பயிர் வகைகளை கட்டாக்காலி கால்நடைகள் நாளாந்தம் சேதமாக்கி நாசம் செய்வது மாணவர் ஆசிரியர் மத்தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்தி விடுவதோடு தொடர்ந்து அத்தகைய முயற்சியில் ஈடுபட முடியாத தோல்வி நிலைக்கும் உள்ளாக்கி விடுகின்றது.

''சமகாலச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் பாடசாலையின் வளவசதிகளை மேம்படுத்துவதற்கு புலம்பெயர் உறவுகள் பழைய மாணவர்கள்; நலன்விரும்பிகள் மற்றும் நிறுவனங்கள் ஏற்புடைய உதவிகளை வழங்க முன்வரவேண்டும். இதனைப் பாடசாலைச் சமூகம் நன்றியறிதலோடு எதிர்பார்த்துள்ளது. வித்தியாலயம் மேலும் வளம் பெற வாழ்த்துவோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொத்துவிலில் கடும் மழை

பொத்துவில்,செப்.14

பொத்துவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை மழையுடன் காற்று வீசியதால் பல வீடுகளின் கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டு வீடுகள் சேதமடைதுள்ளதுடன், வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையால் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது என்று பொத்துவில் பிரதேச செயலாளர் ஏ. எல்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு திடீரென ஆரம்பித்த இடி மின்னலுடனான மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதனால் இந்தப் பிரதேசத்துக்கான மின்சாரம் செயலிழந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மக்கள் வழங்கிய அதிகாரத்தை மக்களுக்காகவே பயன்படுத்துவேன்

### ஆரிப் சம்சுடீன் கூறுகிறார்


அம்பாறை,செப்.14

மக்கள் வழங்கிய ஆணை மூலம் கிடைத்துள்ள அரசியல் அதிகாரத்தை மக்களின் சுபீட்சத்துக்காக உபயோகிப்பதே எனது இலக்கு என நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ள ஆரிப் சம்சுடீன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியலில் இணைந்து ஏறக்குறைய 50 நாள்களில் நடந்த இம்மாகாண சபைத் தேர்தலில் முதல் தடவையாகப் போட்டியிட்ட எனக்கு அம்பாறை மாவட்ட மக்கள் அரசியல் அதிகாரத்தை வழங்கியுள்ளனர்.

சகோதர பிரதேசங்களுக்கும் அரசியல் அதிகாரம் சென்றடைய வேண்டும் என்ற தேசிய காங்கிரஸின் தலைவர் அமைச்சர் அதாவுல்லாவின் வியூகத்துக்கேற்ப தலைமைத்துவத்தின் வியூகத்தை வெற்றிபெறச் செய்வதற்காக அதிகபட்ச வாக்குகளை அளித்த அக்கரைப்பற்று வாழ் மக்களுக்ளுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எவ்வித பாகுபாடுகளுமின்றி எனக்குக் கிடைத்துள்ள இந்த அரசியல் அதிகாரத்தை பிரதேச மக்களின் சுபீட்சமான வளம் நிறைந்த வாழ்வுக்காக உபயோகிக்கத் திட்டமிட்டுள்ளேன் - என்றார்.(ச)



களனி ரஜமஹா விஹாரைக்கு நேற்றுமுன்தினம் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புத்தபெருமானின் புனித தாதுவைத் தரிசித்துள்ளார்.

# முறையான மீள்குடியமர்த்துகையே கஞ்சிகுடிச்சாறு மக்களின் தேவை

### கமலேஷ் சர்மாவிடம் திருக்கோவில் மக்கள் மன்றாட்டு



அம்பாறை,செப்.14

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் போரால் இடம்பெயர்ந்த தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு பிரதேச மக்கள் கடந்த மூன்று வருடங்களாகியும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. வேறு இடங்களில் குடியமர்ந்துள்ள அந்த மக்கள் அடிப்படை வசதிகள் இன்றியே வாழ்ந்து வருகின்றனர். ஆகவே தம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி ஏனைய மக்களைப் போல வாழ வைக்குமாறு பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா தலைமையிலான குழுவினரிடம் இந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா தலைமையிலான பிரிட்டன்தூதர் கிரிஸ்நொய்ஸ், தலைமை அலுவலக முகாமையாளர் சிமோன் கிம்சன், மக்கள் தொடர்பாடல் செயலாளர் றிச்சட் யுகே ஆகிய நான்கு பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் புதன் கிழமை காலை திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் ஹெலிக்கொப்டரில் வந்து இறங்கினர்.

இந்தக் குழுவினர் போரால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த காஞ்சரம்குடா பிரதேசத்தில் மக்களைச் சந்தித்த போதே அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போர் காலத்தில் பல தடவைகள் பிரதேசத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும், கடந்த 2007 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த தங்களை 2009 ஆம் ஆண்டு சமாதானம் ஏற்பட்டு 3 வருடங்கள் ஆகியுள்ளபோதும் சட்டப்படி குடியமர்த்தவில்லை எனத் தெரிவித்தனர் மக்கள்.

''தமது வாழ்வாதரத்துக்காக சுயமாகப் பல குடும்பங்கள் குடியமர்ந்துள்ளனர். குடிதண்ணீர், குடிசைகள், பாடசாலை, மலசலகூடம், மின்சாரம், போக்குவரத்து போன்ற வசதிகள் மற்றும் மாணவர்களின் கல்வி போன்ற எந்தவித வசதிகளும் இன்றி வாழ்கிறோம். அவற்றைச் சீர்செய்து வாழ்வதற்கு எற்ற வசதிகளை அரசு செய்து தரவேண்டும்'' என்று தெரிவித்தனர்.

இவற்றைக் கேட்டறிந்த பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்ததாவது:-

விசேடமாக பெண்கள் அதிகளவில் உள்ள பகுதிக்கு கூடுதல் கவனம்செலுத்தி ஒரு இணக்கப்பாடான அபிவிருத்தியைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம்.

எனவே எதிர்பார்ப்பான காலத்தை நோக்கி இருக்கின்றோம். நம்பிக்கையான காலடியை எடுத்துவைக்க வேண்டும். அதற்காக இணைந்து வேலைசெய்வதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அமைப்புக்கள் இயங்கிகொண்டிருக்கின்றன. அந்தவகையில் எதிர்காலத்தை நம்பிக்கையாகப் பார்க்க வேண்டும் - என்றார். (ச)

## மீண்டும் கூட்டமைப்புக்கே ஆதரவை வெளிப்படுத்தினர் திருமலை மக்கள்

### வெற்றியாளர் நாகேஸ்வரன் தெரிவிப்பு

தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதே எனது நோக்கம்.



திருகோணமலை,செப்.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான முழுமையான ஆதரவைத் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு இரண்டாவது அதிகப்படியானவிருப்பு வாக்குகளால் தெரிவான சம்பூர் பிரதேச இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் குமாரசுவாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய உணர்விலிருந்து ஒரு துளியும் விலகாது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முழுமையாக அங்கீகரித்து ஓர் அணியாகத் திரண்டு, திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக வெற்றியை ஈட்டித்தந்த திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்

துன்பப்பட்ட சூழ்நிலையிலும் அகதி முகாம்களில் அல்லல் உற்றபோதும் உணர்வுரீதியாக ஒன்றுபட்டு வாக்களித்த சம்பூர் பிரதேச மக்களுக்கும், எனது வெற்றியை உறுதிப்படுத்திய மூதூர் பிரதேச மக்களுக்கும், வெற்றியைப் பெற்றுத்தந்த திருகோணமலை மாவட்ட அனைத்துப் பிரதேசத்தைச் சார்ந்த மக்களுக்கும் நான் மிகவும் நன்றியுடையவனாவேன்.

பணபலம், அதிகார பலம் ஆகியவற்றுக்கு முகம் கொடுத்து பல்வேறு அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைத்த தமிழ் உறவுகளுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க எனது உயிர் இருக்கும்வரை பாடுபடுவேன் - என்றார். (ச-40)

## திருமணத்துக்கு ஒரே நாள் இருக்கையில் மணமகன் சாவு

திருக்கோவில்,செப்.14

திருக்கோவில் - கஞ்சிகுடிச்சாறு, சாவாறு ஆற்றில் உடல் அழுகிய நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் திருக்கோவில் மைதான குறுக்கு வீதியைச் சேர்ந்த 33 வயதுடைய சிவசிதம்பரம் நந்தகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரைக் கடந்த புதன்கிழமை தொடக்கம் காணவில்லை என உறவினர்கள் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

சிவசிதம்பரம் நந்தகுமார் பதிவுத் திருமணம் முடித்து ஒரு மாதமே ஆகியுள்ள நிலையில் அவருக்கு நாளை சனிக்கிழமை திருமணம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மு.காவின் பேரம்பேசும் சத்திக்கு வித்திட்ட கிழக்கு மக்களுக்கு நன்றி

### சம்மாந்துறை மன்சூர் தெரிவிப்பு

இன்று பேரம்பேசும் சக்தியாக எமது கட்சியை மாற்றிய பெருமை எமக்கு வாக்களித்த மக்களையே சாரும். அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்கள் பிரதேசவாதங்களை மறந்து ஒட்டுமொத்தமாக வாக்களித்தமைக்காகக் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள வெற்றியாளர் சம்மாந்துறை மன்சூர் தெரிவித்தார்.

தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து [illegible]

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று கிழக்கில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற்றம் பெற்றுள்ளது. இதன் மூலம் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையும், சமூக உறவும் வலுப்பெறும் காலம் கனிந்துவிட்டது. கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள், அபிலாஷைகள் உரிய முறையில் தீர்க்கப்படுவதையே நீண்டகாலமாக மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

சம்மாந்துறை மக்கள் ஒரு தனி மனிதனுக்குத் தொடர்ந்தும் வாக்களித்து தங்களது அபிலாஷைகளை இழந்து நிற்பதையும், இதனால் சம்மாந்துறை மக்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் வாழ்வதையும் காண்கின்றபோது பெரும் வேதனையளிக்கிறது.

இதனாலே 90 சதவீதமான சம்மாந்துறை மக்கள் இந்தத் தடவை முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்து சாதனை படைத்துள்ளனர். இதற்கு மாகாணசபைத் தேர்தலே களம் அமைத்துக்கொடுத்ததையும் நாம் மறந்துவிட முடியாது- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் நண்பரிடம் கேலி பேசுவதில் எல்லை மீறி விடக்கூடாது. அதிருப்தியும், பயன்களை இழப்பதுமான நிலை வரலாம். நிதானம் வேண்டும். தொழில் வளர்ச்சிப்பணி நிறைவேற தாமதமாகும். பணவருமானம் குறைவதால் சிறு அளவில் பணக்கடன் பெறுவீர்கள்.

**இடபம்:** நீங்கள் கடந்தகாலத்தில் முயற்சித்த முக்கிய காரியம் இனிதே நிறைவேறும். உறவினர், நண்பர் மனமுவந்து பாராட்டுவர். தாராள பணவரவில் பெருமிதம் கொள்வீர்கள்.

**மிதுனம்:** தடங்கலும், தாமதசெயலும் உங்கள் மனதை சங்கடப்படுத்தும். அனுபவம் நிறைந்தவர்களின் உதவியால் நிலைமையைச் சரிசெய்யலாம். தொழிலில் இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது அவசியம். பணச்செலவில் சிக்கனம் நல்லது.

**கடகம்:** உங்கள் நண்பரின் வாழ்வு வளம் பெற உதவுவீர்கள். உங்கள் மீதான மதிப்பு, மரியாதை உயரும். தொழில் வளர்ச்சி பெற முக்கிய காரணி பலம்பெறும். தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தேவையை பெருமளவில் பூர்த்தி செய்வீர்கள்.

**சிங்கம்:** உங்கள் மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது. எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும். இருப்பினும், புதிய இனங்களில் பணச் செலவு ஏற்படும்.

**கன்னி:** உங்கள் நண்பரின் உதவியால் புதிய நன்மை ஒன்று ஏற்படும். இதனால் மனதில் உற்சாகம், நம்பிக்கை வளரும். தொழில் வளர தேவையான அபிவிருத்திப் பணி செய்வீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**நாளை**

ஆவணி - 30 சனிக்கிழமை 15.09.2012
திதி: சதுர்த்தசி மு.ப 09.43 வரை
நட்சத்திரம்: பூரம் சித்தம் பி.இ 04.11 வரை
சுபநேரம்: 03.03- 04.33 வரை
ராகுகாலம்: 09.03- 10.33 வரை

**துலாம்:** உங்கள் பேச்சு பிறருக்கு ஆறுதல் தரும் வகையில் இருக்கும். உங்களின் தகுதி உணர்ந்து செயற்படுவீர்கள். தொழிலில் அனுகூலம் ஒருசேரக்கிடைக்கும். உறவினர்களின் வருகையால் குடும்ப மகிழ்ச்சி தழைக்கும். பணியாளர்களுக்கு கௌரவம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். இயன்ற அளவில் உதவி புரிந்து நற்பெயர் பெறுவீர்கள். தொழிலில் எதிர் வருகிற குளறுபடி சரி செய்வதால் மட்டுமே வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணவரவில் தாமதநிலை இருக்கும். உழைப்புக்கேற்ற ஓய்வின் மூலம் உடல்நலம் காக்கும்.

**தனுசு:** உங்கள் உறவினரிடம் பேச நினைத்த விடயம் மாறிப்போகலாம். செயல்களில் தாமதமும், குளறுபடியும் உருவாகி மனதை வருத்தும். எதிர்பார்ப்பை விட குறைந்த அளவில் பணம் கிடைக்கும். நெருப்பு, கூர்மையான பொருள்களைப் பயன்படுத்துவதில் தகுந்த கவனம் வேண்டும். தகுந்த ஓய்வின் மூலம் உடல்நலம் சீராக்கும்.

**மகரம்:** உங்கள் வாழ்வில் பெற்ற வசதியை பெரிதெனப் போற்றுவீர்கள். நண்பரின் நல் வழிகாட்டுதல் புதிய உற்சாகம் தரும். தொழில் வியாபாரத்தில் தேவையான அபிவிருத்திப் பணி செய்வீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும். கடன், பணி தொந்தரவு குறையும்.

**கும்பம்:** உங்கள் வாழ்வின் கடந்தகால நினைவுகளில் மகிழ்வீர்கள். பொது நலப்பணி புரிவதில் ஆர்வம் வளரும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு பெறுவீர்கள். நண்பரின் செயல் நட்பின் பெருமையை உணர்த்தும்.

**மீனம்:** உங்கள் மனம் சஞ்சலத்திற்கு உள்ளாகலாம். இதனால், நம்பகத்தன்மை இல்லாதவரிடம் ரகசியம் சொல்லக்கூடாது. தொழில் வளம்சீராக அதிகஉழைப்பு, கண்காணிப்பு அவசியம். பணவரவு சுமாரான அளவில் கிடைக்கும். எதிர்பாராத வகையில் பணச்செலவு ஏற்படலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | 1 | | 6 |
| 3 | 8 | 6 | 1 | | | 9 | | 5 |
| | | | | | | 3 | 7 | |
| 1 | 2 | | 8 | 6 | | | | 3 |
| 6 | | | 9 | | 1 | | | 8 |
| 8 | | | | 4 | 3 | | 5 | 1 |
| | 6 | 1 | | | | | | |
| 5 | | 8 | | | 9 | 2 | 6 | 4 |
| 2 | | 9 | | 5 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 3 | 5 | 8 | 6 | 9 | 1 | 4 |
| 4 | 1 | 6 | 9 | 2 | 3 | 8 | 7 | 5 |
| 8 | 5 | 9 | 7 | 4 | 1 | 3 | 2 | 6 |
| 6 | 8 | 1 | 2 | 3 | 5 | 7 | 4 | 9 |
| 3 | 9 | 7 | 8 | 1 | 4 | 6 | 5 | 2 |
| 5 | 4 | 2 | 6 | 9 | 7 | 1 | 3 | 8 |
| 1 | 7 | 5 | 4 | 6 | 9 | 2 | 8 | 3 |
| 9 | 3 | 8 | 1 | 5 | 2 | 4 | 6 | 7 |
| 2 | 6 | 4 | 3 | 7 | 8 | 5 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

18.08.2012 சனிக்கிழமை அன்று சிவபதம்
அடைந்த எமது அன்புத் தெய்வம்

## திருமதி சிவமணி இராமலிங்கம்



பிறப்பு
04.04.1944

இறப்பு
18.08.2012

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (15.09.2012)
சனிக்கிழமை அன்று காலை 8.00
மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று
மதியம் அன்னதான நிகழ்வு
கீரிமலை சிவபூமி மண்டபத்தில் நடைபெறும்.
(17.09.2012) திங்கட்கிழமை அன்று முற்பகல் 11.00
மணியளவில் எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய கிரியைகளும்,
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும்.
அத் தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
மேற்படி நிகழ்வுகளிலும் தொடர்ந்து
இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாவடிப்பிள்ளையார் கோயிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை. – குடும்பத்தினர்.

(சு/3314)(2-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்தர பரீட்சை இசற் புள்ளி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது, பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெற்றோர் சகிதம் நீதிமன்றத்தைச் சூழ்ந்திருக்கின்றனர்.

## வருகிறது சீன பஸ்

கொழும்பு,செப்.14

அரச போக்குவரத்து சேவையை வலுப்படுத்தும் வகையில் 3000 பஸ்களைப் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்து சபையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுமார் 3500 பஸ்கள் 15 வருட பழையமையானவை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கை போக்குவரத்துச் சபையை வலுப்படுத்த புதிய பஸ்கள் தேவை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தெரிவானோர் பெயர்களை வெளியிடுவதில் தாமதம்

### சொத்து விவரங்களை வழங்கத் தவறியமையே இதற்குக் காரணம் என்கிறார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு,செப்.14

நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்று மாகாண சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்களின் விவரங்களை வர்த்தமானியில் அறிவிக்க மேலும் தாமதமாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசபிரிய தெரிவித்தார்.



மாகாண சபை உறுப்பினர்களின் விவரங்கள் நேற்று வியாழக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. எனினும், சில உறுப்பினர்கள் தங்களின் சொத்து விவரங்களை வழங்கத் தவறி இருப்பதாக அவர் கூறினார்.

இதனால் இந்த வர்த்தமானி அறிவித்தல் மேலும் தாமதமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

சொத்து விவரங்கள் குறித்த தகவல்களை உறுப்பினர்கள் வழங்கியதன் பின்னர், இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தமிழர் நிலம் ஆக்கிரமிப்பு

### தேர்தல் முடிந்த கையோடு பெரும் அடாவடி

கொழும்பு,செப்.14

கேகாலை மாவட்டம், தெரணியகலைத் தொகுதியைச் சேர்ந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் மாலிபொட - தோட்டத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி புகுந்து தோட்ட நிலங்களை ஆக்கிரமித்து வருகின்றனர் என்று அந்தப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் குறித்த தோட்டத்தில் வாழும் தமிழ்த் தொழிலாளிகள் தெரணியகலையிலுள்ள ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அலுவலகத்தின் தொழிற் சங்கப் பொறுப்பாளர் ஆர்.மேகநாதனிடம் முறையிட்டுள்ளனர் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் நிர்வாக செயலாளர் தெரிவித்தார்.

இது குறித்து ஜனநாயக மக்கள் காங்கிரஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் இத்தோட்டத்துக்குள் பிரவேசித்து நிலங்களை ஆக்கிரமிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.**

ஏற்கனவே பல பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் இத்தோட்டத்துக்குள் பிரவேசித்து நிலங்களை ஆக்கிரமிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இருப்பினும், இம்முறை அதிகளவு பெரும்பான்மை இனத்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு அண்மையிலுள்ள நிலங்களை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலே பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தோட்ட நிர்வாகத்தின் மூலம் பொலிஸாரிடம் முறையிட்டும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு காரணம் அப்பகுதியிலுள்ள ஆளும் அரச தரப்பு அரசியல்வாதிகளே என அறியமுடிகிறது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 317 சாரதிகள் சிக்கினர்

கொழும்பு,செப்.14

மதுபோதையில் வாகனம் செலுத்திய 317 சாரதிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி.அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோரில் 268 பேர் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

மது போதையில் இருந்த தனியார் பஸ் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் நாள்களிலும் நாடு முழுவதும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் கைது செய்யப்படுவர் என்று அவர் மேலும் கூறினார். (ச)

## மாநாடு நடைபெறுவதால் நாய்கள் வெளியேற்றம்

கொழும்பு,செப்.14

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாய்களை அடைப்பில் இட்டுள்ளதாகவும், தற்போது சர்வதேச மாநாட்டு ஞாபகார்த்த மண்டபத்தில் 58ஆவது பொதுநலவாய நாடாளுமன்ற மாநாடு நடைபெற்றுவருவதால் நாய்களினால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் 'புளு போவ் ட்ரஸ்ட்டின்' பிரதம அதிகாரி வைத்தியர் நலினிக அபசேகர தெரிவித்தார்.

இந்தநாய்கள் குறிப்பிட்ட காலமாக இங்கு சுற்றித்திரிந்தமையால் மாநாடு முடிந்ததும் அவற்றை மீண்டும் இங்கு கொண்டுவந்து விடும் ஏற்பாடு இருந்ததாகவும் 'புளு போவ் ட்ரஸ்ட்' என்னும் மிருகநேய அமைப்பு கூறியது.

நாய்களுக்கு நாம் நோய் தடுப்பூசிகளை போட்டும் கருத்தடை செய்தும் நன்கு பராமரித்துவந்தோம். இவைகளை பொது இடங்களில் வைத்து பராமரித்துவந்தோம் என்றுஅவர் குறிப்பிட்டார். நாய்களை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு வளாகத்தில் வைத்து பராமரிப்பதற்கான ஒப்பந்தமொன்றை இந்தநிறுவனம், குறித்த மாநாட்டுடன் செய்திருந்ததாக இவ்வமைப்பைச் சேர்ந்த வைத்தியர் டி.சுபசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிகிச்சை பெற்ற தமிழ்க் கைதி மகஸின் சிறைக்குள் அடைப்பு

கொழும்பு,செப்.14

கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் அரசியல் கைதியான சுந்தரம் சதீஷ்குமார் குணமடைவதற்கு முன்னரே திடீரென மீண்டும் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனால் உரிய மருத்துவ வசதிகளின்றி அவர் சிறைச்சாலைக்குள் அவஸ்தைப்படுகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சதீஷ்குமாரை பார்வையிடுவதற்கு அவரது உறவினர்கள் வரும்போது, சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களுக்குப் பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர் என்று சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான சதீஷ்குமார் வழக்கு விசாரணைக்காக காலி நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் அங்கு தடுத்து வைக்கப்பட்ட நிலையில் திடீர் சுகவீனம் ஏற்பட்டு காலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

**இரும்புக் கூட்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதியின் மன நிலை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.**

இதனையடுத்து, அவரை கொழும்பு வைத்தியசா லைக்கு மாற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க, சதீஷ்குமார் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்தநிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை உறவினர்களுக்கு அறிவிக்காதநிலையில் மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச்செயலாளர் சி.பாஸ்க்கரா கூறியதாவது:-

சதீஷ்குமார் என்ற தமிழ் அரசியல் கைதிக்கு ஏற்பட்ட நோய் குணமடைவதற்கு முன்னரே அவர் வைத்தியசாலையிலிருந்து மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். நோய் பூரணமாகக் குணமடையாததால் அவர் சிறைச்சாலைக்குள் பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றார்.

அதுமட்டுமின்றி, சதீஷ்குமாரைப் பார்வையிடுவதற்கு வரும் அவரது குடும்பத்தாருக்கு அதிகாரிகள் நிபந்தனைகளை விதிக்கின்றனர்.

இதனால் இரும்புக் கூட்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதியின் மன நிலை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

நோயாளியொருவரை இவ்வாறு அடைத்து வைத்திருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும். இதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது- என்றார். (ச-சி)

# முதலமைச்சர் பதவியை வழங்குபவருக்கே மு. காங்கிரஸ் ஆதரவை வழங்கவேண்டும்

### கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலர் கோரிக்கை

கொழும்பு,செப்.14

முஸ்லிம்களின் முக்கிய கோரிக்கையான முதலமைச்சர் பதவி எங்களுக்கு வழங்குபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மத்திய அரசின் மூலம் வழங்கும் வெறும் சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் மட்டும் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் அரசியல் அதிகார உரிமைகளை அடகு வைக்க முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் துணை போகக் கூடாது என்று முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் எஸ்.எம்.ஏ. கபூர் கட்சித் தலைமைத்துவத்துக்கு அனுப்பிய மனுவில் தெரிவித்தார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் இவைகளை முன் வைத்தே எமது வாக்குப் பலத்தை அதிகரிப்பதற்கு மக்கள் எங்களை நம்பி அளித்த ஆதரவுகளுக்கு நன்றிக் கடனாக இம் முதலமைச்சர் பதவியைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் அரசுடன் இணைந்தா அல்லது தமிழ் கூட்டணியுடன் சேர்ந்தா கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்கு ஆதரவு வழங்குவது சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கவிருக்கும் முடிவின் போது மேற்படி விடயத்தை முன் நிபந்தனையாக முதலில் விதித்து அதனை ஏற்றுக் கொள்ளும் தரப்பினருக்கே கட்சி தமது ஆதரவை வழங்க வேண்டும்.

தனிநபர்களின் பட்டம் பதவிகளுக்காக அரசுக்கு முட்டுக்கொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் முனையக்கூடாது.

குறித்த முடிவுகளை இன்னும் காலம் தாழ்த்தாது உடனடியாக எடுத்து உரியவர்களுடன் உடன்படிக்கையையும் நிறைவேற்ற வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு,செப்.14

களனி பல்கலைக்கழகத்தின் வைத்திய பீட விரிவுரையாளர்கள் நேற்று அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் மேற்கொண்டுவரும் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவது இதன் நோக்கமாகும்.

இதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்துக்குப் பல தொழிற்சங்கங்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குளவி தாக்கியதில் 31 பெண்கள் காயம்

கொழும்பு,செப்.14

ஹப்புத்தளை பிரதேச தோட்டமொன்றில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள் மீது குளவி தாக்கியதில் 31பேர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிகளுக்குப் பயந்து ஓடும் போது தவறி விழுந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111


## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது, 16.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் பொதுக்கூட்டம் இடம் பெறும். அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- சில முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.

## இரண்டாம் ஆண்டு நினைவு



மலர்வு
11.02.1996

உதிர்வு
14.09.2010

### சிவசுதன் அரவிந்

எம் வாழ்வின் உதயமே
எம் இனிய அண்ணாவே
கல்லூரி மாணவனாய் - நீ,
எம்முடன் வலம் வந்த நாளை
எண்ணுகிறோம் அண்ணா,
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
எம் உயிருடன் கலந்த உன்
நினைவுகள் செயல்கள்
என்றும் எம்மை வழி நடத்தும்
அண்ணா நீ பிரியவில்லை
எம்முள்ளே வாழ்கிறாய்
உன் நிழல் படமே
நாம் காணும் கடவுள்

குடும்பத்தினர். (தம்பி, தங்கை)
37/20, பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக அங்கத்தவர்களான
ப.முகுந்தன், ப.பகீரதன், இ.முரளிதரன்
ஆகியோரின் பெரிய தந்தை



### அருளையா பூதத்தம்பி

அவர்கள் 11.09.2012 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு.
(சி/3348)(5-6-7)

கழக நண்பர்கள்
வளர்மதி முன்னேற்றக் கழகம்

## மரண அறிவித்தல்

### திருமதி மகேசன் செல்வரத்தினம் (கற்கண்டு)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேசன் செல்வரத்தினம் கடந்த (10.09.2012) திங்கட்கிழமை ஆஸ்திரேலியா - சிட்னி நகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இளையபிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியரின் மருமகளும், நா. மகேசன் (வானொலி மாமா) அன்பு மனைவியும், உமா, கேதீசன் (கேதா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் திருநாவுக்கரசு, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும், கேதீசன் பிரதீபாவின் மாமியும், அரன், அனவி, கபிலன், நர்மதா, மித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.09.2012) வியாழக்கிழமை சிட்னிநகரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. திருநாவுக்கரசு,
க. சோமசுந்தரம்.

உடுவில்.
(22839) (45.6.7)

## சேவை நலன் பாராட்டு



### திரு. நவரத்தினம் பாக்கியநாதன்

(ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சி கல்வி வலயம்)

ஏறத்தாழ பத்து ஆண்டுகள் ஆசிரியராகவும் இருபத்திரண்டு ஆண்டுகள் ஆசிரிய ஆலோசகராகவும் சேவையாற்றி 13.09.2012 இல் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் திரு.நா.பாக்கியநாதன் அவர்களின் சேவையை நயந்து போற்றுகின்றோம். அவரது ஓய்வுக்காலம் சிறக்க எமது நல் வாழ்த்துக்கள்.

விஞ்ஞான ஆசிரியர்கள்,
தென்மராட்சி கல்வி வலயம்.

## தவறவிடப்பட்டுள்ளது

தளையசிங்கம் நிறஞ்சன் என்பவரது 712810769V இலக்கமுடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் WP-KA 6863 NP-XI 9665 இலக்கமுடைய வாகனங்களின் வாகன அனுமதிப் பத்திரம், இன்சூரன்ஸ் பத்திரம் என்பன பேர்சுடன் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 225 0377, 021 222 2822
(22835)(5-6-7)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெறவேண்டுகின்றேன்.

(22685) (2-7-6) - அடியாள்.

## வீடு, வளவு விற்பனைக்கு

உடுப்பிட்டி
சந்திக்கு அருகில்
துவாலி வீதி
பகுதியில் வீட்டுடன்
கூடிய வளவு
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
078 3035058

## வான் விற்பனைக்கு



252 xxxx எனும் தொடரிலக்கமுடைய ISUZU Fargo (ரூட் வான்) விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 262 2988
(22836)(5-6-7)

## மக்கள் வங்கி அறிவித்தல்

அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில், நாளை (15.09.2012) சனிக்கிழமை நடைபெற இருந்த அடகுநகை ஏலவிற்பனை பிற்போடப்பட்டுள்ளது. ஏல விற்பனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012.09.13

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம்
13.04.1962

மறைவு
01.08.2012


### அமரர் மகேந்திரன் தங்கமலர்

01.08.2012 அன்று சிவபதமடைந்த எனது சகோதரியின் துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவிகள் புரிந்த அயலவர்கள், உறவினர், நண்பர்கள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நேற்று வியாழக்கிழமை செல்வச்சந்நிதி ஆலய புனித தீர்த்தக் கரையிலும், இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடைக்குறிச்சி மேற்கு.வரணி. (22833) (2.6.7) செ.செல்வநாயகம் (சகோதரன்)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு
28
★
11
★
1946



இறப்பு
15
★
08
★
2012

கடந்த 15.08.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

### கந்தையா தவராசா (சி.மு.)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்
(சி/3337)(5-6-7) மகன்-சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்து பார்த்தா தெரியப் போகுது!

## கோப்பாய் சண்முகம்
## கதையோடு செய்தி

கடந்த வாரம் சுன்னாகம் சந்தைக்கு பொருள் வாங்கச் சென்ற எனது நண்பனுடன் நானும் சென்றிருந்தேன். வானம் இருளாக இருந்ததால் சந்தைக்குள் இருள் குடிகொண்டிருந்தது. அதனால் பொருள்களை கையில் எடுத்து பார்த்து வாங்கிக் கொண்டிருந்தோம். சந்தைக்குள் இருளைப் பார்த்ததும் எனது நண்பன் ''மெய்யே சுன்னாகத்தில் பெரிய கறண்ட் என்ஜின் ஒன்று பூட்டப்பட்டு வருகுதாம். இது இயங்க வெளிக்கிட்டால் யாழ்ப்பாணத்து சனத்துக்கு போதுமான கறண்ட் கிடைக்குமாம் என்று சொல்லு கினம் உண்மையே?'' என்றான்.

நானோ ''நீ இந்த இடத்திலைதானே இருக்கிறாய்! வெளிய கிளிய போகலை தானே பிறகு என்ன உனக்கு சந்தேகம்''. என்றதும் நண்பனோ ''அப்ப முழுமையாகக் கறண்ட் கிடைக்கும் என்கிறாயா?'' என்று கேட்டான். நானோ ''உனக்கு கதை விளங்கவில்லை இப்படித்தான் புதிது புதிதாக சுன்னாகத்துக்கு கறண்ட் என்ஜின் வந்து ஓடியது. ஆனால் சிறிது காலத்திலை அதின்ரை வேலையும் விட்டுப் போட்டுது. இப்ப இந்த என்ஜின் வந்திருக்குது. இது எப்ப விடப்போதோ தெரிய வில்லை''. என்றேன். நண்பனோ '' ஏன் இப்படிச் சொல்லுகிறாய் இந்த என்ஜின் பெரிய வலுவுள்ள என்ஜினாம்'' என்றான். நானோ ''வரேக்கை எல்லாம் பெரிய என்ஜின் தானேபிறகுதான் அந்த என்ஜின் பழுதடைந்துவிட்டது. அதைத் திருத்துவதற்கு பாட்ஸ் இல்லை என்று ஒரு போடு போடுவார்கள். அப்படிப் போட்டு கறண்ட் இல்லாததுக்கான காரணத்தை மின்சார சபையினர் கூறுவினம்'' என்றேன்.

நண்பனோ ''அப்ப இந்த என்ஜினும் வேலை விட்டுப் போகும் என்று கூறுகிறாயா'' என்றான். நானோ ''அப்படி இல்லை இதற்கு முதல் வந்த என்ஜினுக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்'' என்றேன். நண்பனோ ''இந்த என்ஜினை கப்பலில் கொண்டுவந்து காங்கேசன் துறையில் இறக்கிவிட்டினமாம். பணியாளர்கள்தான் பெரும் கஸ்ரப்பட்டு சுன்னாகத் துக்கு கொண்டுவந்தவையாம்'' என்றான்.

நானோ ''இந்த என்ஜினை கொண்டு வருவதற்கே இவ்வளவு கஷ்டம் என்றால் அதனை இயக்குவதற்கு மேலும் கஷ்டங்களைப்படத்தான் போகிறார்கள். என்ஜினை கொண்டுவருவதற்கு முயற்சிசெய்தது போல அந்த என்ஜினை ஓடவிட்டு யாழ்ப்பாண மக்கள் முழுமையான கறண்டைப் பெற வழியை ஏற்படுத்த வேண்டும். இல்லாது போயின் ஏன்ரா இந்த என்ஜினை கொண்டு வந்தார்கள் என்றுதான் சனம் கேட்கும்'' என்றேன். நண்பனோ ''சரி நேரம் போகுது வீட்ட போவம்'' என்றான். சந்தையை விட்டு வெளியேறினோம்....

மோட்டார் சைக்கிளில் ஏறும் போது நண்பனோ ''ஒருக்கால் அந்த என்ஜினை பார்த்துவிட்டுப் போவம்'' என்றான். நானோ ''சரி'' என்று தலையாட்டிவிட்டு அந்த என்ஜின் இருக்கும் இடத்துக்குச் சென்றும் பார்க்கமுடியவில்லை. அந்த இடத்தை விட்டு நகர்ந்தோம்...

நண்பனோ ''வடக்கின் வசந்தம் வீச முடியாமல் வீழ்ந்து கிடக்கேக்கை இந்த என்ஜின் மூலம் மின்சாரத்தை வழங்கி வடக்கின் வசந்தம் ஓரளவு வீசுமா என்று பார்ப்பார்களா'' என்றான். நானோ ''வீசும்... வீசும்! ஆனால் வீசி எறியிற கட்டத்துக்குத்தான் வருகுதோ தெரியல. எதையும் உடனே முடிவு செய்துவிடக்கூடாது. போகப் போகத்தான் அதன் முடிவுதெரிய வரும். எத்தனை முடிவுகளை நாங்கள் பார்த்தனாங்கள். எங்களுக்கு மீண்டும் முடிவுகளை காட்டாதீர்கள். இந்த என்ஜினில் இருந்து வெளிவரும் கறண்ட் யாழ்ப்பாணம் முழுவதும் ஒரே நேரத்தில் கிடைக்குமா அல்லது நேர அட்டவணை போட்டுத்தான் கிடைக்குமோ தெரியலை'' என்றேன்.

நண்பனோ ''முதலில் அதிகாரிகள் திருந்துவார்களாயின் மின்சாரத்தை முழுமையாகப் பெறக்கூடிய சூழல் ஒன்றினை உருவாக்க முடியும். இல்லாது போயின் மாறி மாறி வரும் அதிகாரிகள் தங்கள் போக்கில் வேலையில் ஈடுபட்டு தமது காலத்தை நகர்த்தி விடுவார்கள். இந்த நாட்டு மக்களின் மின்சாரத் தேவை பற்றியே கணக்கில் எடுக்கமாட்டார்கள்''- என்றான்.

யாழ்ப்பாணப் பகுதி ஒன்றின் மின் பாவனையாளர் சேவை நிலையத்தின் அதிகாரி ஒருவர் செய்த விளையாட்டை. அதாவது உள்ளூராட்சி மன்றங்களில் பணி புரிந்த மின்சாரப் பகுதியின் ஆளணி யினர் மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்டனர்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் 1974 இல் இந்தத் திட்டம் அமுல்படுத்தப் பட்டது. ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் போர் காரணமாக இது தாமதமாகியது . 1998 இலே இங்கு இது சாத்தியமாகியது. மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரிந்து மின்சார சபைக்குள் உள் வாங்கப்பட்டவர்கள் உள்வாங்கப்பட்ட தினத்தில் இருந்து இணைப்பாகியுள்ளது டன் அன்றிலிருந்து தமது ஓய்வூதியத் தைப் பெற முடியும்.

இந்தத் திட்டம் ஏனைய இடங்களில் இடம்பெற்றது ஆனால் இறுதியாக மின் சார சபைக்குள் உள்வாங்கப்பட்ட கண்டி , யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்ட திகதியில் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை .

இதனால் கண்டி மாநகரசபையில் கடமையாற்றி மின்சாரசபைக்குள் உள் வாங்கப்பட்டவர்கள் நீதி மன்றத்தை நாடினர். பயனும் கிடைத்தது. அவர்களுக்குரிய ஓய்வூதியம் அவர்கள் மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்ட திகதியில் வழங்கப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் மின்சார சபை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமையால் ஓய்வூதியத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறி நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கெனப் பணத்தை வசூலித்தனர். ஆனால் ஆண்டுகள் கடந்தும் ஒன்றுமே நடக்கவில்லையாம். பின்னர் ஒரு வருடத்துக்கு முன்னர் நீதிமன்றத்தின் தீர்ப் பின் பிரகாரம் யாழ். மாநகர சபையைச் சேர்ந்த 29 பேருக்கு நிறுவனத் தொகையாக இலட்சக் கணக் கில் பணம் கிடைத்திருந்தது. இதனைப் பயன்படுத்திய அதிகாரி ஒருவர் கடந்த வருடம் ஓய்வூதியம் கிடைக்காதவர்களுக்கு தான் நீதிமன்றில் வழக்கு வைத்து நிலுவையைப் பெற்றுத் தருவே னெனக் கூறி பலரிடம் பணம்பெற்றுள்ளார். ஒருவரிடம் இருந்து தலா பத்தாயிரம் ரூபா வசூலிக்கப்பட்டு இலட்சக் கணக்கில் பெற்றுள்ளார். ஆனால் ஒரு வருடம் கழிந்த நிலையில் அதிலும் ஒன்றுமே நடக்கவில்லையாம்.

ஓய்வூதியப் பணம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் பணத்தைக் கொடுத்த பலர் இலவு காத்த கிளிகளாக காத்திருக்கின்றனர். இதேவேளை கொழும்பு ஓய்வூதியத் திணைக் களத்தினர் நிலுவையாகவுள்ள ஓய்வூதியம் வழங்கப்படாதவர்களின் விவரங்களைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ஒரு செய்தி கசிந்துள்ளது.

மின்சார சபைக்குள்ளே இப்படியான குத்துவெட்டுக்கள் இடம்பெறுவது எதிர் காலத்தில் முழுமையான மின்சாரமின்றி நாடு அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தும். தனிப்பட்ட சுக போகங்களுக்காக இப்படிப்பட்ட செயலில் இறங்குவது ஏனைய மின்சாரசபை ஊழியர்களின் வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இதனைக் கருத்தில் கொண்டு அதிகாரிகள் ஒழிவு மறைவு இல்லாத வேலையில் ஈடுபட்டு இந்த நாட்டை

VACANCY
Word Press இல் அனுபவமுள்ள Developers தேவை. ஆர்வமுடையவர்கள் உங்களது சுயவிவரக் கோவையை It@Uthayan.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
(வி/3347)(5-6-7)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

வீடு வாடகைக்கு உண்டு
யாழ் கச்சேரிக்கு அருகில் சகல வசதிகளுமுள்ள சிறிய வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 458 8898
(22822)(5-6)

விற்பனைக்கு
CBZ(Hero Honda)
மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 021 222 7117
(வி/3350)(5-6-7)

வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு
93அடி நீளமும்,11 அடி அகலமும் கொண்ட கடை (ஆதிவிநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.
★ ஹோட்டல்கள் தவிர்க்கப்படும்.
★ தரகர் தேவையில்லை.
முகவரி: இல.66, புகையிரத நிலைய வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொடர்பு: 024 222 0112
(20878) (5-6)

After A/L......?
இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
New batches
14th Sept 2012
15th Sept 2012
17th Sept 2012
@ 9.00 am
DiTEC Diploma in Information Technology 4 Months
DiCA Diploma in Computerized Accounting 4 Months
DiBM Diploma in Business management 4 Months
DiSE Diploma in Software Engineering 6 Months
DiWE Diploma in Web Engineering
DiE Diploma in English 4 Months
HOTLINE 077 309 9 308



ESOFT Computer Studies (Pvt)Ltd.
17/1, Brown Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk
The Leader in Professional ICT Education
Nelliady 151, Jaffna Rd 021 226 4940
Kilinochchi 01, Kanagapuram Rd, 077 990 5611
Udoppidy Jaffna Rd, Udoppidy 021 320 1303
(வி/3311)(6-7)


HND - Edexcel
கற்கை நெறிகளுக்காகப் பதிவு செய்து
i5 Laptops
Free
Offer valid till 1st October Only while Stocks last
for Reserve 077 309 9 308
for ALL edexcel HND
Computing or Business Management



bucks
B.A. Degree
B.Sc. (Hons) in Computing
Edexcel HND in Business Management
Edexcel HND in Computing
DIBM / DITEC
"O" Level
"A" Level
Registrations @ ESOFT
The Leader in Professional ICT Education
ESOFT Computer Studies (Pvt)Ltd.
17/1, Brown Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk
(வி/3309)(6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகமானது ஐபோன் 5





உலகம் முழுவதிலும்பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய ஐபோன் 5 ஸ்மார்ட்போனை அமெரிக்காவின் அப்பிள் நிறுவனம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தியது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் கூப்பர்டீனோ நகரை தலைமையகமாக கொண்ட நிறுவனமே அப்பிள் இன்கார்ப்பரேஷன். கணனிகள், மென்பொருள், வன்பொருள், ஐபேட், டேப்லட் கணனிகள், மீடியா பிளேயரான ஐபாட் ஆகியவற்றை தயாரித்து வருகிறது. பல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் போன்களை 2007ஆம் ஆண்டு முதல் தயாரித்து வருகிறது.

முதல் தலைமுறை ஸ்மார்ட்போன் ஐபோன் என்ற பெயரில் 2007ஆம் ஆண்டு ஜனவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் ஐபோன் 3ஜி [2008], 3ஜிஎஸ் [2009], ஐபோன்4 [2010], 4எஸ் [2011 ஒக்ரோபர்] ஆகியவை வெளியிடப்பட்டது.

இந்நிலையில் ஐபோன் வரிசையில் 6வது தலைமுறை ஸ்மார்ட்போன் ஐபோன் 5 தற்போது முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது வரை வந்த மொடல்களைவிட இது நீளமானதும், ஒல்லியானதும், எடை குறைந்தது, பளபளப் பானதுமாகும்.

கருப்பு, சில்வர் என இரு நிறங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய 4எஸ் மொடல் போலவே 16ஜிபி, 32ஜிபி, 64ஜிபி மாடல்கள் முறையே ரூ.33 ஆயிரம், ரூ.42,000 ரூ.66,000 என நிர் ணயிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் செல்போன் சேவை வழங்கும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதால் இந்த விலை. ஸ்மார்ட் போனுக்கே உரித்தான டச் ஸ்கிரீன், ஜிபிஎஸ் வசதி, மீடியா பிளேயர், வீடியோ கமெரா, வை,பி மற்றும் ப்ளூடூத் இணைப்பு வசதிகள் இதிலும் உண்டு. 7.66 மி.மீ. தடிமன், 112 கிராம் எடை, இன்னும் அதிக தெளிவான ஸ்கிரீன் ஆகியவை சிறப்பு அம்சங்கள்.

லித்தியம் அயான் பாலிமர் பற்றரி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அதிக பட்சம் 225 மணி நேரம் வரை பற்றரி சார்ஜ் நிற்கும். பேசினால் 8 மணி நேரம் வரை சார்ஜ் இருக்கும். ஐபோன்5 வாங்குவதற் கான முன்பதிவு நாளை தொடங்குகிறது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் வரும் 21ஆம் திகதி விற்பனை தொடங்குகிறது.

## கூகுளைப் பின்தள்ளிய பேஸ்புக்

சர்வதேச ரீதியில் வலைத்தளங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிடும் அலெக்ஸா நிறுவனத்தின் பட்டியலில், கூகுளை பின்னுக்கு தள்ளி முதலிடத்தை பிடித்திருக்கிறது பேஸ்புக்.

கணினி யுகத்தின் ஜாம்பவனான கூகுள் நிறுவனம் தான் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்தது. தற்போது முதன் முறையாக கூகுளை பின்னுக்கு தள்ளி விட்டு, முதலிடத்தைப் பிடித்துள்ளது பேஸ்புக். இது திகைக்க வைக்கும் சாதனை என்று தான் சொல்ல வேண்டும். எந்த ஒரு தகவலைத் தேட வேண்டும் என்றாலும், கூகுளைத் திறக்காமல் சாத்தியம் இல்லை என்று ஒரு நிலை இருப்பதனால் கூகுள் தரவரிசைப் பட்டி யலில் முதலில் இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

ஆனால் சில காலங்களாக அனைவரின் மனதையும் இரவு பகலாக ஆக்கிரமித்து வரும் பேஸ்புக் தற்போது முதலிடத்தை பிடித்துள்ளது. லட்சக்கணக்கான மக்களால் தினம் தினம் ஆயிரக்கணக்கான வலைத்தங்கள் இணையத்தில் தேடப்பட்டு வருகிறது. இவற்றில் எந்த வலைத்தளம் அதிகமான பேரால் தேடப்படுகிறது என்பது பற்றிய தரவரிசைப் பட்டியலைப் பிரித்துக் காட்டும் நிறுவனம் அலெக்ஸா.

இந்த அலெக்ஸா ரூல்பாரை ஒருமுறை உங்களது சிஸ்டத்தில் பயன்படுத்தி விட்டால் போதும், அதன் பின்னர் எந்த வலைத்தளத்தைத் திறந்தாலும் அதன் தரவரிசைப் பட்டியல் தெளிவாகக் காட்டப்படும்.

இதில் முதல் 10 இடத்தில் இருக்கும் வலைத்தளங்களின் பட்டியலையும் பார்க்கலாம். முதலிடத்தில் பேஸ்புக், இரண்டாவது இடத்தில் கூகுள், மூன்றாவது இடத்தில் யூடியூப், நான்காவது யாஹூ மற்றும் ஐந்தாவது இடத்தில் பெய்டூ.கொம்

இதனைத் தொடர்ந்து ஆறாவது இடத்தில் விக்கிபீடியா, ஏழாமிடத்தில் விண்டோஸ் லைவ் இருக்கிறது. சமூக வலைத்தளமான டுவிட்டர் எட்டாமிடத்தில் உள்ளது. கியூகியூ.கொம் ஒன்பதாம் இடத்திலும் மற்றும் அமே சான்.கொம் பத்தாமிடத்திலும் உள்ளன.




## தகவல் சேகரிக்கும் கரப்பான் பூச்சி

தொழில்நுட்ப வளர்ச்சியானது சகல துறைகளையும் ஆக்கிரமித்து வரும் அதேவேளை இராணுவத் துறையிலும் அதன் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்காக பல்வேறு கண்டுபிடிப்புக்களும் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

இவற்றின் அடிப்படையில் தற்போது எந்த ஒரு சிறிய இடத்திலும் புகுந்து தகவல்களைச் சேகரிக்கக் கூடிய வகையிலும், கட்டுப்பாட்டுக் கருவி மூலம் தொலைவிலிருந்து இயக்கக்கூடிய வகையிலும் இலத்திரனியல் கரப்பான் ஒன்றை நோர்த் ஸ்டேட் கலிபோர்னியா பல்கலைக் கழக ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

வியாபார நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட இந்த இலத்திரனியல் கரப்பான் ஆனது வயர்லெஸ் மூலம் இயங்கும் தகவல் வாங்கி [Receiver], தகவல் பரிமாற்றி [Transmitter] மற்றும் கட்டுப்படுத்தியை [Controller] கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



## அன்ரோயிட் இயங்குதளத்தில் கேமிங் சாதனம்

பொழுதுபோக்குச் சாதனங்களில் ஒன்றாக விளங்கும் இலத்திரனியல் விளையாட்டுச் சாதனங்களை பல்வேறு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்திய வாறு அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளன.

இக்காலகட்டத்தில் PlayMG நிறுவனமானது தற்போது பிரபலமாகிவரும் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட கேமிங் சாதனம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

4 அங்குல தொடுதிரையினைக் கொண்ட இலகுவானதும், கவர்ச்சியானதுமான பயனர் இடைமுகத்தைக் கொண்டுள்ளதுடன் Wi&Fi வசதியையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இப்புதிய அம்சங்களின் காரணமாக குறித்த விளையாட்டுச் சாதனமானது கேம் பிரியர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்ப்பதாக PlayMG நிறுவனம் தெரிவித்துள்ளது.

## லெனோவாவின் திங்க்பேட்

லெனோவாவின் திங்க்பேட் லப்ரொப்புகள் மிகவும் பிரபலமானவை. இந்த திங்க்பேட் லப்ரொப்புகள் வந்து 20 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்த 20 ஆம் ஆண்டு நினைவாக லெனோவா நிறுவனம் இந்தியாவில் ஒரு புதிய அல்ட்ராபுக்கைக் களமிறக்கி இருக்கிறது. இந்த புதிய லப்ரொப்பிற்கு திங்க்பேட் எக்ஸ்1 கார்பன் அல்ட்ராபுக் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

மிகவும் மெல்லியதாக இருக்கும் இந்த லப்ரொப் அதிகமான தொழில்நுட்ப வசதிகளுடன் வருகிறது. குறிப்பாக இதன் 14 இன்ச் எச்டி டிஸ்ப்ளே மிகவும் துல்லியமாக இருக்கிறது. அதோடு இந்த லப்ரொப் மிகவும் உறுதியானது, அதிகமான வேகம் கொண்டது, நீடித்து உழைக்கக்கூடியது மற்றும் அதிகமான பாதுகாப்பு வசதிகளைக் கொண்டது.

பார்முலா 1 ரேஸ் கார்களில் இருக்கும் பைபர் தகடுகளால் இந்த லப்ரொப் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இது ஐவி பிரிட்ஜ் புரொசஸர், சிறந்த பற்றரி, மற்றும் ஒரு கண்ணாடி மல்டி தொடுகை ட்ராக்பேடுடன் களம் இறங்குகிறது. மேலும் டோல்பியின் சரவுண்ட் சவுண்டும் இந்த லப்ரொப்பில் இருப்பதால் சிறந்த இசையையும் கேட்கலாம்.

தற்போது இந்த லப்ரொப் விண்டோஸ் 7 இயங்கு தளத்தில் வருகிறது. ஆனால் ஒக்ரோபர் 26 இல் விண்டோஸ் 8 இயங்கு தளம் வந்த பின் இந்த புதிய இயங்கு தளத்தை இந்த லப்ரொப்பில் பதிவேற்றம் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111

# 33 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



மண்ணில் மாதரிவாய்
15 ★ 10 ★ 1934

விண்ணில் தேவதையாய்
13 ★ 08 ★ 2012

## திருமதி வயிரமுத்து செல்லம்

(13.08.2012) அன்று எமது குடும்ப குல விளக்கின் பிரிவுச்செய்தி கேட்டவுடன் எம்முடன் இருந்து பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் எமக்கு அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவித்து எமது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க சக நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கஞ்சிட்டி,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை. (22850)(6.7.8) குடும்பத்தினர்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
26.03.1935

விண்ணில்
15.08.2012

## சிவக்கொழுந்து தர்மறாஜன்

கண்ணின் மணி போல எம்மை காத்தீர்கள்
இன்று கண்ணீர் மல்கவிட்டு சென்றதேனோ
பொல்லாத காலனவன் - உங்களைப் பறித்து விட்டான்
இப் புவியில் நல்லவர் வாழ்வதெல்லாம் குறுகிய காலம்
என்ற உண்மைதனை உங்கள் மறைவின் பின் எமக்கு
உணர்த்திச் சென்றீரோ. எத்தனை நாள்கள் நகர்ந்தாலும்
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உமது பிரிவினை எங்கள்
உள்ளங்கள் ஏற்க மறுக்கின்றன.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவி சிவக்கொழுந்து தர்மறாஜன் 15.08.2012 அன்று இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து எமது இல்லத்துக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், தந்தி, தபால், இணையத் தளம், ஊடாகவும் தொலைபேசி ஊடாகவும் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இருந்து ஆறுதல் தெரிவித்தோர் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளின் போது சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இந்நாளில் அன்னாரின் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புத்தூர் றோட், ஈவினை. (22844) (2,6,7) - குடும்பத்தினர்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.14

மாணிக்கவாசகர் எழுதிய வேலனை ஒரு வரலாற்று அறிமுகம் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறும்.

வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரைகளை சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமச்சாரிய சுவாமிகளும், பேராயர் தோமஸ் சவுந்தரநாயகமும் வழங்குவர்.

பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகமும், கௌரவ அதிதியாக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கலந்துகொள்வர்.

(16-50)

## கிராமிய வீதிகளின் தரவுகளை ஒப்படைக்கவும்

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் தமது கிராமிய வீதிகளின் தரவுத் தொகுப்பினை ஒப்படைக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் கேட்டுள்ளார்.

50 மீற்றருக்கான மதிப்பீடுகள் தரவுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தத் தரவுகள் முழுமையாக வழங்கப்பட வேண்டும் எனவும் இதுவரை 4 சபைகள் முழுமையாக ஒப்படைக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி தரவுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித்தினம் இன்றாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(16-14)

## ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரி,செப்.14

சாவகச்சேரிப் பிரதேச சபையின் சுற்றுச் சூழலைப் பேணல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச சபையின் பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபைத் தலை வர் எஸ்.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சுற்றுப்புறச்சூழலுக்கு இடையூறாகவுள்ள கழிவுகளை அப்புறப் படுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

(16-131)

## பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி, செப்.14

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

அகில இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் பச்சி லைப் பள்ளி, சாவகச் சேரி ஆகிய பிரதேச சபை மற்றும் சாவகச் சேரி நகரசபை உறுப்பினர்கள் பங்குபற்றவுள்ளனர்.

(16-131)

# விற்பனைக்குண்டு

| | | |
|---|---|---|
| 01. மோட்டார் சைக்கிள்: | 01. | NPVU - X X X X - PLEASURE 100 CC |
| | 02. | NPWI - X X X X - PULSAR 180 CC |
| 02. உழவு இயந்திரம் | : 01. | 36 - SRI X X X X (MASSEY FERGUSON) |
| | 02. | 270 - X X X X (MASSEY FERGUSON) |
| | 03. | 49 - X X X X (MASSEY FERGUSON) |
| | 04. | 49 - X X X X (MASSEY FERGUSON) |
| | 05. | NPHF - X X X X (MASSEY FERGUSON) |
| 03. கன்ரர்: | 01. | 40 SRI - X X X X |
| 04. பஸ் - : (JOURNEY) | 01. | 29 - X X X X |

மேற்குறிப்பிட்ட வாகனங்கள் உடன் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் திங்கள் - வெள்ளி காலை 9.00 தொடக்கம் மாலை 4.30 வரையான நேரத்தில் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

021 222 1898
021 222 1900
075 728 2184

இல. 74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/3354) (45-6-7)

# உதயகுமார் வசந்திமாலா தம்பதியரின் 25 ஆம் ஆண்டு திருமண நாளும் கண்ணீரில் கரைந்தோடும் 10 மாதமும்



## உதயகுமார் வசந்திமாலா

இல்லறமாம் நல்லறமெனும் பண்புடன் சீரிய சிந்தையுடன்
உற்றார், உறவினர்களின் தோழனாய் சேவை மனப்பாங்குடன்
வாழ்ந்து வந்த எம் ஆருயிர் பெற்றோர்கள் திருமண வாழ்வில்
இணைந்த 25 ஆம் ஆண்டு நிறைவினை
நினைவு கூரும் இவ்வேளையில்
அந்த அன்புத் தெய்வங்கள் எம்முடன் இல்லையே.
சட்டத்தின் பின்னால் நின்று சதிராடும் பேராசைக்காரர்களின்
சதிக்கு இலக்காகி எம் தெய்வங்கள் ஒரே நாளில் இறைவனிடம்
சேர்ந்தமையினை எப்படி எம்மால் தாங்கிக் கொள்ள முடியும்
நீதி தேவனின் தீர்ப்பு நிச்சயம் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன்
கண்ணீர் மல்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் மீது அன்புள்ளம் கொண்ட உற்றார்,
உறவினர்களுக்கு நன்றியறிதலைத்
தெரிவிப்பதுடன் எம் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தி
யடைவதற்குப் பிரார்த்திக்குமாறும் பணிவுடன்
கேட்டுக் கொள்கின்றேம். - பிள்ளைகள்

புத்தூர் மேற்கு,
புத்தூர். (22848) (2,6,7)
செந்தூரன், குகதீபன், சங்கீதன், கோபிகா.

# மரண அறிவித்தல்

## சுந்தரராமநாதர் ஞானசவுந்தரி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராமநாதர் ஞானசவுந்தரி நேற்று (13.09.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான விஜயரட்ணம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற சுந்தரராமநாதர் (கூட்டுறவு உதவி ஆணையாளர், J.P) அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் புஸ்பவதி, வாலாம்பிகை, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும், சித்திரலேகா, சுமித்திரலேகா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், சரவணமுத்து (இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்களத் தொழிநுட்பவியலாளர்), காலஞ்சென்ற விஜயகுமார் ஆகியோரின் அன்புமாமியும், சசிக்குமார் (நிதிக்கிளை யாழ். பல்கலைக்கழகம்), பிரசன்னா (Quantity Surveyor, Dubai), வினோஜன் (லண்டன்), மயூரன் (லண்டன்), நித்தியலக்ஷ்மி (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), ஸ்ரீரங்கனி (Dubai) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், அபிலாஷ், ஆகாஷ், பவனிஷ் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

608, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (22856)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

11.09.2012 ஆம் திகதி பகல் கடல் தொழிலுக்காக கடலில் சென்ற பலாலியைச்சேர்ந்தவரும், பொலி கண்டியில் வசிப்பவருமான தே. துரைராஜா மறுநாள் கரை திரும்பாததால் அவரைத்தேடிச் சென்று கரை சேர்வதற்கு உதவிய பலாலி, பொலி கண்டி மேற்கு, பொலிகண்டி கிழக்கு, கடல் தொழி லாளர் சங்கத் தினருக்கும், பருத்தித்துறை கடற் படை யினருக்கும் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கும், ஈ.பி.டி.பி யினருக்கும், பருத்தித்துறை முனை கடற்தொழி லாளர் சங்கத்தலைவர் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து மக்களுக்கும் அன்பான நன்றி யைத் தெரிவிக்கின்றோம்.

இப்படிக்கு:
தே. துரைராஜா,
அ. உதயராஜ்
077 2627877

(18747)(14.8)

# நன்றி கூறுகின்றோம்



கடந்த 09.09.2012 அன்று எமது திருஅவை யின் வழிபாட்டில் கலந்து சிறப்பித்ததுடன் மாத் திரமன்றி கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக திருஅவையின் சகோ தரத்துவ உறவில் இருந்து நாம் பிரிக்கப்பட்டவர் களாக அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை என்னும் தென்னிந் திய திருச்சபை எனவும் வாழ்ந்த எங்களை ஒருமைப் பாட்டுடன் மீளவும் ஒரே உடுவில் திருச்சபையாக வழிபடுவதற்கு ஏற்ற வழிகாட்டலுடன், ஆலோச னையை வழங்கிய கௌரவ அமைச்சர்

**உயர்திரு**
**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை மனதார நாம் வாழ்த்துவதுடன், எமது இவ்வாறான ஒருமைப்பாட்டின் பயணத்தில் இறையாசீருடன் தங்களின் உதவியும் தொடர்ந்து இருக்க வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றோம்.

திருச்சபை மக்கள், உடுவில்

(22859)(5-8-7)

# மீனவர்கள் ஐவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,செப்.14

சட்டவிரோத மீன்பிடித் தொழிலில் ஈடு பட்ட ஐவரை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட் கிழமை சட்டவிரோத வெடிபொருள்களைப் பயன்படுத்தி கிளி நொச்சிக் இரணைமாதா கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட யாழ்.குருநகரைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சிப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது வழக்கை விசாரித்த நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் இவர்களை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (16-6)

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் நற்பண்பும் சேவை மனப்பான்மையுமுடை யோரிடமிருந்து கோரப்படுகின்றன.

**1. எழுதுநர்**
க.பொ.த. உயர் தரம் வர்த்தகம் பயின்றவராயின் குறைந்தபட்சம் இரு பாடங்களிலேனும் சித்திபெற்றிருக்க வேண்டும். ஏனைய துறைகளில் பயின்றிருப்பின் க.பொ.த. சாதாரண தரத்தில் வர்த்தகமும் கணக்கியலும் " B "சித்தி பெற்றிருக்க வேண்டும். விடுதியில் தங்கியிருந்து பணியாற்ற முன்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**2. விடுதி மேற்பார்வையாளர்**
முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 25.09.2012 க்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(சி/3358)(8.14)

## விற்பனைக்கு

லண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட (பாவித்த நிலையில் உள்ள) உழவு இயந்திரம் (240 தனி) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :077 4525538

(21525)(8.14)

## வீடு விற்பனைக்கு

ஆனைப்பந்தி நாவலர் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 0388 421

(22558) (45-6-9)

## விற்பனைக்கு

வாகனம் (டொயட்டா ஹயஸ்) (செல்மொடல்) விற்பனைக்கு உண்டு.
T.P : 077 5925162, 021 222 4179 (22870)(8.14)

# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அஞ்சலி

எமது கழகத்தின் முன்னாள் தலை வர்

**லயன் தி. முருகதாஸ் அவர்**களின் அன்பு தாயார்

**இராஜலட்சுமி தில்லைநடேசன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

சாவகச்சேரி,
லயன்ஸ் கழகம்.

(22863)(8.14)

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜலட்சுமி தில்லைநடேசன்

(இளைப்பாறிய ஆசிரியை, யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)



பெரிய அரசடி சாவகச்சேரி யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராஜ லட்சுமி தில்லைநடேசன் நேற்று (13.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான இராமுப்பிள்ளை (கால் நடை வைத்தியர்) - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ் சென்றவர்களான காரத்தி கேசு (தலைமை ஆசிரியர்), தங்கம் மா தம்பதியரின் அன்புமருமகளும், கா. தில்லைநடேசனின் (இளைப்பாறிய தபாலதிபர் (சாமியார்), அன்புமனைவியும், லயன் முருகதாசனின் (மதுவரி உதவி உத்தியோகத்தர், மதுவரித் திணைக்களம் சாவகச்சேரி, லயன்ஸ் கழக முன்னாள் வலயத் தலைவர்), அன்புத்தாயும், திருமதி நிர்மலா முருகதாசனின் அன்பு மாமியும், விஸ்னுகா, கம்சிகா, சரணிகா, ஆருணிகா ஆகியோரின் பேர்த்தியும், சி.கந்தசாமி (உரிமையாளர் ஸ்ரீ ஐங்கரன் வெதுப் பகம்), சிவகாமி தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.

தகவல்:
லயன். தி. முருகதாசன்
(மகன்)

(22871)(14.8)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

IT Diploma Courses
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Dip in Video Production & Multimedia
Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

75% OFF



அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு II - 10/09/2012
பிரிவு III - 15/09/2012
பிரிவு IV - 17/09/2012

75% நேரடிக் கட்டணச்சலுகையைப் பெற்று குறைந்த கட்டணத்தில் முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வியை இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட DMI COMPUTER EDUCATION இல் தொடருங்கள்.

(சி/3355)(2-6)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113 கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | நெல்லியடி M.M.V வீதி, Tel.:021-226 2470 | சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0243 | சுன்னாகம் Jet மோட்டேர்ஸ் சந்தி Tel.:021-224 1970

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

யாழில் பல்கலைக்கழக; தொழில் புரிவோர்; தொழில் தேடுவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து தமது ஆங்கில புலமையில் வெற்றி பெற்ற... ஆங்கில பாடநெறி

- ISO 9001:2000 Certified அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- சிறந்த வேலை வாய்ப்புக்கு....
  பல்கலைக்கழகம் செல்ல உள்ளோருக்கு....
  உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு....

DMI COMPUTER EDUCATION

veta
City & Guilds Approved Centre



முறையானதும் தரமானதுமான ஆங்கிலப்பயிற்சி
புதிய பிரிவுகள் ஆரம்பம்

veta Foundation ENGLISH — For beginners who want to read and write English
veta Fluent English First Step — For people who are doubtful about their English and want to speak English fluently
veta Fluent English Next Step — For speakers of English who want to master diction and style.

பதிவுகளுக்கு- யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம் கிளைகளில்
Hotline - 0777 577 333

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான) | B1-Exam | IELTS (Student Visa மூலம் UKசெல்வதற்கான)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | சாவகச்சேரி No.174, கண்டி வீதி,(HNB அருகில்) Tel. : 021-227 0243 | சுன்னாகம் (NSB அருகில்) Tel. : 021-224 1970

A/L பரீட்சையின் மற்றும் பெறுபேறுகளின் பின்பு உங்கள் வளமான எதிர்காலத்திற்கான முதல் வாய்ப்பு!!
UGC அங்கீகாரமுடைய மற்றும் சர்வதேச தரமுடைய கணினி பட்டதாரியாகும் வாய்ப்பு யாழ் மண்ணில்...

NORTH LANKA IIT & ISLES INTERNATIONAL UNIVERSITY
Jaffna, Sri Lanka
UK, IRELAND, MALAYSIA, KENYA & ST.KITS & NEVIS
இணைந்து வழங்கும்
மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

5வது Batch இல் இணையுங்கள்!

B.Sc. in Computer Science
B.Com with Computer App.
Duration: 1 -- 3 Years with A/L / O/L

P.G.Dip. in Comp. Sc. >> M.Sc.
MBA >> DBA
Duration: 1 Year Any Degree

மேற்படி புலமைப் பரிசில் திட்டம் எமது Senate உறுப்பினர்களது வழிகாட்டலில்..

Senate of NLIIT
Prof.K.Devarajah, Prof. T.Velnumby, Prof.V.Chinnathamby
Prof. V.P.Sivanathan, Dr.Sarathchandra, Dr.R.Surenthirakumar
Dr.S.J.M.Sahajan, Lect.S.Anpalagan, Mr. Angajan Ramanathan

மேலதிக விபரங்களுக்கு ...
NORTH LANKA IIT
#118, [illegible] Plaza, [illegible] Road, Jaffna.
Phone :- 021567 7774

(சி/3356)(2-6)

வெல்லுங்கள்! 10% முதல் 70% வரை கற்கைநெறிக் கட்டணம் Free!


எமது வாழ்த்துக்கள்!!



Dr. C.A Sarathchandra - DBA
(எமது பல்கலைக்கழகத்தில் DBA பட்டம் பெற்று தற்போது World Bank இனது தெற்காசிய பிராந்தியத்திற்கான ஆலோசகராவார். அத்துடன் Merchant Bank, Peoples Bank, HDFC Bank என்பவற்றின் உயரதிகாரியுமாவார். இவர் தற்போது NORTH LANKA IIT இனது Senate உறுப்பினருமாவார்.)

Mr. R.Ganaraj - MBA (NSB - Pointpedro Branch)
Mr. S.Naathasoruban - MBA (NSB - Dehiwala Branch)
Mr. S.Prashanthan - M Sc. (NSB - Jaffna Branch)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நெடுந்தீவில் இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.14

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் உள்நாட்டு இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டத்துக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து விசேட தேவைக்கு உட்பட்ட 50 இளைஞர், யுவதிகள் நெடுந்தீவுக்கு வருகை தரவுள்ளனர்.

இதற்கமைவாக வருகை தரும் இளைஞர், யுவதிகள் கலை, கலாசார, விளையாட்டு மற்றும் சிரமதானப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளனர். (3-14)

## ஒரே நாளில் தங்கம் கடத்திய 7 பேர் சென்னையில் கைது

இலங்கையில் இருந்து நேற்று முன்தினம் ஒரே நாளில், 38 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்த ஏழு பேரைச் சென்னை விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து அதிகளவிலான தங்கக் கட்டிகள், சென்னைக்கு கடத்தி வரப்படுவதாக, சென்னை விமான நிலையச் சுங்கத் துறையினருக்குத் தகவல் கிடைத்தது.

நேற்றுமுன்தினம் இரவு முதல், கொழும்பில் இருந்து, சென்னை வந்த விமானப் பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் கண்காணித்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணிக்கு வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானப் பயணி, அகமது மொய்தீன் மீது அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அவர் தன்னிடம் வரி செலுத்தும் பொருள்கள் ஏதும் இல்லை எனக்கூறி, கிரீன் சிக்னல் வழியாக வெளியேற முயன்றார். அவரைச் சுற்றிவளைத்த அதிகாரிகள், தனி அறையில் சோதனை நடத்தினர்.

அப்போது அவரது ஆடைக்குள் ஏதோ ஒரு பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. ஆடைகளைக் களைந்து பார்த்த போது, கறுப்பு நிற கார்பன் காகிதத்தில் சுற்றி, 237 கிராம் தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருந்தார். இதன் சர்வதேச மதிப்பு, எட்டு லட்சம் ரூபாய் எனத் தெரிய வருகிறது. (3)



அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயண ஆலய தேர்த்திருவிழாவின் போது நாராயணன் தேரில் வீதியுலா வருவதைக் காணலாம். (3)



உடுவில் தெற்கு சித்தி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழாவின்போது விநாயகப் பெருமானுக்கு அபிசேகம் நடைபெறுவதைக் காணலாம். (3)

## வினைத்திறன் காண் போட்டிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், செப்.14

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் வடமாகாண பொதுச் சேவைக்கு ஆள் சேர்ப்புச் செய்தல் மற்றும் வினைத் திறமைகாண் பரீட்சைகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இதற்கமைவாக நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நெசவுப் போதணாசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தவற்கான போட்டிப் பரீட்சை, தையல் போதனாசிரியர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான 2 ஆம் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை, ஆய்வு உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை என்பன இடம் பெறவுள்ளன. (3-14)

## அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி தரம் 1 ஏபி பாடசாலைக்கு வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவரிகளிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கலாம் என வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார். (3)

* * *

வடமராட்சி, செப்.14

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஞானாசாரியார் கல்லூரி தரம் 1 C பாடசாலைக்கு வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடைய யாழ். மாவட்டத்துக்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார். (3-14)

* * *

யாழ்ப்பாணம், செப்.14

தீவகக் கல்வி வலயத்தில் காரை ஊரி அ.மி.த.க. வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும், இவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 , தரம் 2-1, தரம் 2-II ஐச் சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்10 ஆம் திகதிக்கு முன்னதாக தீவக வலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (3-14)



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த்திருவிழாவின் போது தேரில் வரதராஜப் பெருமாள் வீதியுலா வருவதைக் காணலாம். (3)

## வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.14

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த சொற்பொழிவு நிகழ்வில் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை கு.விக்னேஸ்வரன் அவர்கள் ''இறை தியானம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (3-78)

## “நா” காக்க

*சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தும் ஐம்பொறிகளுடன் தொடர்புபட்டவை. பொதுவில் இவை மனிதனுக்கு அடங்கியிருக்க வேண்டியவை. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது, இவை மனிதன் மீது மேலாண்மை செலுத்தி, அவனை ஆட்டிப் படைக்கின்றன. இதனால் மனிதன் தன்னியல்பை இழந்து, ஆசைகளைப் பெருக்கி, வாழ்க்கையில் அல்லல்படவேண்டியுள்ளது. புலன்களின் செல்வாக்கினைத் தளர்த்தி, அவற்றை எவன் ஒருவன் தனது ஆட்சிக்குள் கொண்டு வருகின்றானோ அவனே பெரியவன், மேலானவன் ஆகின்றான். இதற்கு நல்லறிவு தேவை. ஐந்தவித்தான் ஆற்றல் மிகப் பெரிது. செயற்கரிய செய்த பெருமையும் கிடைக்கின்றது. இந்த வகை யில் இன்று சுவை யோடு சம்பந்தப்பட்ட வாய் எனும் பொறி பற்றிச் சிறிது நோக்குவோம்.*

*வாய் என்பதன் முக்கிய அங்கம் நாக்கு ஆகும். சுவைத் தல், வழங்குதல் ஆகிய இரண்டு முக்கிய தொழில்களைச் செய்கின்றது. பொருள்களின் அறுசுவைகளையும் உணர்ந்து அறிவிப்பது நாக்கு. நாக்கின் அடுத்த தொழிற்பாடு ஒலியுடன் தொடர்புடையது. ஒலிதான் முதலில் தோன்றியது என்பர். மனிதனும் ஒலியை நாவிலிருந்து பிறப்பிக்கிறான். இந்த ஒலியைப் பயன்படுத்தி மனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறருக்கு வழங்குகின்றான். அதாவது அவற்றை வெளிப்படுத்துகிறான். இதுவே நாவின் வழங்கல் தொழிற்பாடு. வழங்கல் என்பது தானம் செய்தல் ஆகும். தானம் தர்ம வழியில், தர்ம முறையில் செய்யப்பட வேண்டியது அவசியம்.பாத்திரம் அறிந்து தானம் வழங்கப்படவேண்டும். வேண்டாதன தவிர்த்து, வேண்டப்படுவன மாத்திரம் கொடுக்கப்பட வேண்டியது நீதியாகும். இந்த வகையில் வாயிலிருந்து வெளிப்படும் வாக்கு அல்லது சொல் ஒலி பொருந்தியதாக விளங்கவேண்டும்.*

*நன்றி: ஞானச்சுடர்*

## கலைஞர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு

கொழும்புத்துறை,செப்.14

கலைஞர்களுக்கான அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் கால எல்லை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதியுடன் முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டபோதிலும் அனேகமான கலைஞர்கள் விண்ணப்பிக்கத்தவறியமையால் கால எல்லை எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக் கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கலைத் துறைகளிலும் 15 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டுவரும் கலைஞர்கள் கலாசார அமைச்சினால் வழங்கப்படவுள்ள அடையாள அட்டையைப் பெறவிண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி தகுந்த சான்றிதழ்கள், பாராட்டுப் பத்திரங்களை புகைப்படத்துடன் இணைத்து ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3-135)

## இளைஞர் மன்ற விழா

யாழ்ப்பாணம், செப். 14

இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் மன்ற விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இளைஞர் சேவை மன்ற யாழ். உதவி அதிகாரி த. ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் நாயகம் லலித் பெரேரா கலந்து கொள்வார். சிறந்த இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறந்த இளைஞர் செயற்பாட்டாளர், சிறந்த பிரதேச மன்றம் ஆகியவற்றுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-7)

## இரத்த தானம்

யாழ்ப்பாணம், செப். 14

வட பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இந்த இரத்ததான நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் இரத்ததானம் வழங்க விரும்புவோர் இரத்ததானம் செய்ய முடியும் என நிறுவனத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய ரீதியில் பாயக்காத்திருக்கும் வீராங்கனைகள்.....



தேசிய மட்ட கபடிப் போட்டிகள் நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் கண்டியில் உள்ள சென். அன்ரனிஸ் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டங்களில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி வீராங்கனைகள் பங்குகொள்ளவுள்ளனர். தேசிய மட்டப் போட்டிக்குச் செல்லும் குறித்த பாடசாலையின் கபடி வீராங்கனைகள் பாடசாலை அதிபர், பயிற்றுநர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன். (ந-6)

## வடமாகாண தடகளப் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.14

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாண மட்ட தடகளப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வட மாகாண தடகளப் போட்டியின் முதல் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாக உள்ளன. ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறும். இறுதிநாள் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி மாவட் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் டி.வி.டி.யு.ஏ. பெரேரா கௌரவ விருந்தினராகவும், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-23)

# கனிஸ்ரனின் அதிரடிச் சதத்தால் மத்திய கல்லூரி இலகு வெற்றி

யாழ்ப்பாணம், செப்.14


யூலியஸ் கனிஸ்ரனின் அற்புதமான சதமும், நிரூபன், மதுசன் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சும் கைகொடுக்க 63 ஓட்டங்களால் மகாஜனக் கல்லூரியை வீழ்த்தியது யாழ். மத்திய கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் பிரிவு 3 இற்கான 17 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்று, அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மத்திய கல்லூரி அணியினர் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் யூலியஸ்கனிஸ்ரன் அதிரடியாக ஆடி சதம்



(106 ஓட்டங்கள்) கடந்தார். அத்துடன் சௌமிதரன் 40 ஓட்டங்களையும் , சன்சயன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பாக நிஷாந் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், மயூரன் 7 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 1 இலக்கினையும், ஜெனதாஸ் 7 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

235 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி மத்திய கல்லூரியின் பந்துவீச்சுக்கு இரையாகி தோல்வியைத் தழுவியது. மகாஜன அணி 37.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் மயூரன் 52 ஓட்டங்களையும், ரசீகரன் 25 ஓட்டங்களையும், ஜெனந்தன் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக நிரூபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், மதுசன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 59 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும், நிரோஜன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.30 மணிக்கு

பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் எதிர் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் (ந-23)

***

யாழ்ப்பாணம், செப்,14

மன்னார் பெரிய கடை ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 'மன்னார் பிறீமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் வெள்ளிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு -

விக்டோறிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இந்துமுன்னணி விளையாட்டுக்கழகம். (ந-23)

## தேசிய மட்ட ஜிம்னாஸ்ரிக் போட்டிகள்

வலி. வடக்கு, செப் 13

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஜிம்னாஸ்ரிக் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம், 16ஆம், 17 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வடமாகாணப் பாடசாலை அணிகள் எவையும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந-86)

## கலைமதியை வீழ்த்தி டைமன்ஸ் இறுதிக்குள்

யாழ்ப்பாணம், செப்.14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலை மதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில்



கலைமதி அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ந-23)

# அளவெட்டி மத்திய வி.க. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் முடிவுகள்

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடத்திவரும் மென்பந்தாட்டக் கிரிக்கெட் போட்டியின் "ஆ" பிரிவுக்கான போட்டிகள் மல்லாகம் ஆர்.டி.எஸ் மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்றன.

இதில் முதலாவது போட்டியில் அரியாலை சரஸ்வதி அணியும் மூளாய் விக்ரோரி அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோரி அணி ஆட்ட நேர நிறைவில் 7 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இந்த பரபரப்பான போட்டியில் 5 ஓட்டங்களால் சரஸ்வதி அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டி ஏழாலை ஞானகலா அணிக்கும், வி.பி. அணிக்குமிடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானகலா அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வி.பி. அணியினர் ஞானகலா வீரர்களின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் இலக்குகளை இழந்ததோடு ஓட்டங்களையும் எடுக்கத் திணறினர். இதனால் இந்த அணி ஆட்ட நேர நிறைவில் 7 இலக்குகளை இழந்து 33 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. 24 ஓட்டங்களால் ஞானகலா அணிக்கு வெற்றி கிடைத்தது.

மூன்றாவது போட்டியில் ஞானம்ஸ் அணியும் கார்மேல் போய்ஸ் அணியும் சமராடின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப்பெற்றது.

இந்த இலக்கினை துரத்தத் தொடங்கிய கார்மேல் போய்ஸ் அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றனர். இதனால் போட்டி சமநிலையில் காணப்பட்டது. எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 'சுப்பர் ஓவர்' முறை பயன்படுத்தப்பட்டது.

சுப்பர் ஓவரில் ஞானம்ஸ் அணி 5 ஓட்டங்களைப் பெற்றது. இலகுவான இந்த இலக்கைக் கூட கார்மேல் போய்ஸ் அணியால் எட்ட முடியவில்லை. அந்த அணி சுப்பர் ஓவரில் வெறும் 4 ஓட்டங்களை மாத்திரமே எடுத்ததால் ஞானம்ஸ் அணிக்கு வெற்றி கிடைத்தது.

நான்காவது போட்டி வள்ளுவர் அணிக்கும் பிரைட் அணிக்கும் இடையே நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரைட் அணி அதிரடியாக ஆட முற்பட்டு இலக்குகளை இழந்து திணறியது. அந்த அணி ஆட்ட முடிவில் 7 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் வள்ளுவர் அணி 43 ஓட்டங்களால் வெற்றியை தன் வசமாக்கிக்கொண்டது.

ஐந்தாவது போட்டி சரஸ்வதி அணிக்கும் ஞானம்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி அணி அதிரடியாக ஆடி 6 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டி காலிறுதிக்குள் நுழைந்தது.

ஆறாவது போட்டியில் வள்ளுவர் அணியும் ஞானகலா அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் அணி 8 பந்துப் பரிமாற்ற நிறைவில் 5 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானகலா அணி 7 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களையே பெற்றதனால், வள்ளுவர் அணி 29 ஓட்டங்களால் வெற்றியீட்டி, காலிறுதிக்கு முன்னேறியது.

இந்தச் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சரஸ்வதி அணியை எதிர்த்து வள்ளுவர் அணி களமாடவுள்ளது. (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசத்தலாகத் தொடங்கியது இலங்கையின் ஆட்டம்




உலகக் கிண்ண 'ரி-20' பயிற்சி ஆட்டத்தில் இலங்கை சகலதுறைகளிலும் அசத்த, மேற்கிந்தியத் தீவுகள் அணியை 9 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை இலகு வெற்றியை பெற்றுக் கொண்டது.

இலங்கையில், 'ரி-20' உலகக் கிண்ணத் தொடர் செப். 18 இல் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கு முன், ஒவ்வொரு அணிகளும் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகின்றன. நேற்று நடந்த பயிற்சி ஆட்டத்தில் இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் ஜெயவர்தன, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சிம்மன்ஸ் (2), டுவைன் ஸ்மித் (5) ஜோடி மோசமான தொடக்கம் கொடுத்தது. அடுத்து வந்த சார்லஸ் (30), டரன் பிராவோ (29), பொலார்ட் (28) கைகொடுத்தனர். மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 132 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை சார்பில் குலசேகரா 2, மலிங்க, மத்தியூஸ் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 15.4 பந்துப் பரிமாற்றங்களிலேயே ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மஹேல 35 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களையும், டில்ஷான் 38 பந்துகளில் 50 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர்.

# நான் ரெடி

9 மாதங்களாக சர்வதேசப் போட்டியில் பங்குபற்றியிருக்காத இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ், தான் சர்வதேசப் போட்டியில் மீண்டும் பங்குபற்றுவதற்குத் தயாராக உள்ளதாகவும் ஆர்வமாகக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். உலக 'ரி-20' தொடரில் சிறப்பாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




முதுகு உபாதை காரணமாக 9 மாதங்களாகப் போட்டியில் பங்குபற்றியிருக்காத அஜந்த மெண்டிஸ், இலங்கையில் இடம்பெறவுள்ள உலக 'ரி-20' தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணியில் இடம் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை சார்பாக உலக 'ரி-20' தொடரில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அஜந்த மெண்டிஸ், தனது 5 வகையான வித்தியாசமான பந்துவீச்சு வகைகளையும் இந்தத் தொடரில் பயன்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தனது முதுகு உபாதை காரணமாக முன்னர் சிறப்பாகப் பந்துவீச முடிந்திருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், சில வகையான பந்துவீச்சுக்களை வீசுவ்தற்கு கடினத்தை எதிர்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது தனது முதுகு உபாதை குணமாகியுள்ள நிலையில் தன்னால் சிறப்பாகப் பந்துவீச முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் தனது பந்துவீச்சைச் சிறப்பாகக் கணித்து ஆடத் தொடங்கியுள்ளார்கள் எனத் தான் நம்பவில்லை எனத் தெரிவித்த அஜந்த மென்டிஸ், தன்னால் மிகச்சிறப்பாகச் செயற்பட முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அணி தனது முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே அணியை செப்ரெம்பர் 18ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளது.

# சாதனையுடன் விடைபெறுவது நல்லது



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர், சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பல சாதனைகளை படைத்து புகழின் உச்சியில் உள்ளார்.

கடந்த 23 ஆண்டுகளாக இந்திய அணிக்காக ஆடி வரும் சச்சின், விரைவில் ஓய்வு அறிவிக்க வேண்டும் என்று முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் சிலர், சச்சின் தொடர்ந்து இந்திய அணிக்காக ஆட வேண்டும் என்று அவருக்கு ஆதரவாக கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடி வரும் சச்சின், புகழின் உச்சியில் இருக்கும் போதே ஓய்வுபெற வேண்டும் என்று முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

நன்கு ஆடிக் கொண்டிருக்கும் போதே சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதுதான் சிறந்தது என்றும், தெரிவாளர்களின் கருணையைப் பெற்று அணியில் இடம்பெறக் கூடாது என்றும், சச்சின் டெண்டுல்கருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், நான் சச்சின் இடத்தில் இருந்திருந்தால் நன்கு விளையாடிக் கொண்டிருக்கும் போதே கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றிருப்பேன். தெரிவாளர்களின் கருணைக்கு ஆளாகியிருக்க மாட்டேன். ஒரு சிறந்த கிரிக்கெட் வீரரான சச்சின், இந்திய மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். கடந்த 23 ஆண்டுகளாக சச்சினின் ஆ[illegible] பார்த்து வரும், இந்திய ம[illegible] அவரது பிரிவைத் தாங்க முடியாது என்பது தெரிகிறது.

ஆனால் மற்றொரு பகுதியில் தொடர்ந்து விளையாடுவதா[illegible] சச்சினின் புகழ் மங்கிப்போக வாய்[illegible]புள்ளது. எனவே ஓய்வு பெறுவ[illegible] எப்போது என்பது குறித்து சச்சி[illegible] யோசிக்க வேண்டிய நேரம் வந்[illegible] விட்டது. பாகிஸ்தான் அணியின் தெரிவு[illegible] குழுவினரின் கருணையை நா[illegible] எதிர்பார்க்கவில்லை. இதனால் தா[illegible] நான் நன்றாக ஆடி கொண்டிருந்[illegible] போதே ஓய்வை அறிவித்தேன்.

மேலும் மக்கள் என்னிடம் நீங்க[illegible] [illegible] என்று [illegible] விரும்பவில்லை எனவும் கூறியுள்ளா[illegible]

# பந்து வீச்சே எங்களின் பலம்




இலங்கை அணியின் பந்துவீச்சே எமது அணிக்குப் பலம் சேர்ப்பதாகவும், அணிக்கு வெற்றிகளை வழங்கக்கூடிய ஒன்றாகக் காணப்படுவதாகவும் அணியின் உப தலைவரும், சகலதுறை வீரருமான அன்ஜலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் பந்துவீச்சுக் குறித்துத் தாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அன்ஜலோ மத்தியூஸ், தமது அணியில் மிகச்சிறப்பான பந்துவீச்சுச் சேர்க்கை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். ஏனைய அணிகளோடு ஒப்பிடும்போது இலங்கை அணியின் பந்துவீச்சு சிறப்பான நிலையில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியில் லசித் மலிங்க, நுவான் குலசேகர, அஜந்த மெண்டிஸ், அகில தனஞ்சய ஆகியோர் அணியின் பலமான பந்துவீச்சு வரிசையை உள்ளடக்குவதாக அன்ஜலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நுவான் குலசேகர, அஜந்த மெண்டிஸ் ஆகியோர் உபாதைகளின் பின்னர் அணிக்குள் வருகின்றதால் அணி தற்போது முழுமையான பலத்தை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய அணிகளோடு ஒப்பிடும்போது லசித் மலிங்கவின் வித்தியாசமான பந்துவீச்சும், அஜந்த மெண்டிஸ், அகில தனஞ்சய ஆகியோரின் புதுமையான பந்துவீச்சும் எதிரணிகளுக்கு சவாலாக அமையும் என்று அன்ஜலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

எல்லா அணிகளும் தங்களது மிகச்சிறந்த 15 வீரர்களோடு இந்தத் தொடருக்கு வருகின்ற நிலையில், 'ரி-20' போட்டியில் வெற்றிபெற வேண்டுமாயின் அனைத்துப் போட்டியிலும் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவை அடக்கியது இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது 'ரி-20' ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்ற தென்னாபிரிக்க அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு ஆட்டத்தின் முடிவில் தென்னாபிரிக்கா 1-0 என்று முன்னிலை வகித்தது. மூன்றாவது ஆட்டம் பர்மிங்காமில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டிவிலியர்ஸ் களத்தடுப்பை தேர்வு செய்தார். மழை காரணமாக இந்த ஆட்டம் 11 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு கீஸ்வெட்டர் (50), ஜோஸ் பட்லர் (32) கைகொடுத்தனர். நிர்ணயிக்கப்பட்ட 11 பந்துப் பரிமாற்றங்களில் இங்கிலாந்து அணி 5 இலக்குகள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஹசிம் அம்லா (36), அல்பி மோர்கல் (17) ஆறுதல் அளித்தனர். மற்றவர்கள் ஏமாற்ற தென்னாபிரிக்க அணி 11 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 90 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது.

இதன் மூலம் மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடர் 1-1 என்று சமநிலையில் முடிவடைந்தது. (5)


**MyWay இன் முக்கிய அறிவித்தல்**

தவிர்க்க முடியாத காரணங்களால் 15.09.2012 மீண்டும் ஆரம்பமாகவிருந்த MyWay இன் பயிற்சி நெறிகள் மற்றும் செயற்பாடுகள் 01.10.2012 ஆரம்பிக்கப்படும் என மாணவர்களுக்கும் அலுவலர்களுக்கும் அறியத்தருகிறோம்

(சி/3037)

**MyWay.** 182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்



**ஐரோப்பிய நாடான சைப்பிரஸிற்கு Student Visa**

G.C.E. (O/L) மட்டும் போதுமானது
IELTS தேவையில்லை

மாதாந்த 1இலட்சம் ரூபாய் வரை சம்பளம் தரக்கூடிய பகுதி நேர வேலைவாய்ப்புக்கான ஆலோசனை

விரைந்து வாருங்கள்

புதன்கிழமைகளில் விடுமுறை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9016

தொலைபேசியூடாக வியாபார விசாரணைகள் இடம் பெறமாட்டாது.

(22857)(6-7-8)



**A/L முடித்தவர்களுக்கான புதிய பாதை !**

*உயர்தரப்பெறுபேறுகள் கிடைப்பதற்குள்...*

உயர்தரம் எந்த துறையை கற்றவராயினும் தொழில் தகமை ஒன்றையும்,வாழ்க்கைக்குத் தேவையான மருத்துவ அறிவையும் விரைவான வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும்..வழிவகுக்கும் பாடநெறி ! கே.யு விடமிருந்து மட்டுமே!

(சி/3037)

**Certified Medical Assistants- Batch 9**

Duration- 3 months | Course Fee : 12,500/=

M.B.B.S வைத்திய விரிவுரையாளர்கள்
LAVA வைத்தியசாலையில் பயிற்சி
ஒரு மாதப்பயிற்சியுடன் பகுதிநேர வேலை

Tel:0777302882
021-3208342

**K.U Education** Medical Sciences
No 75,Temple Road,Jaffna. www.kugroup.info



**IIS CITY CAMPUS இல் இணைந்து புத்தம் புதிய TOSHIBA i3 LAPTOP கணனி ஒன்றினை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்**



edexcel BTEC

**HND**
in
COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT

மாணவர்களே!!!
September 2012 பிரிவிலே மேற்குறிப்பிட்ட HND கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு TOSHIBA i3 Laptop கணனி ஒன்றினை IIS பரிசாக வழங்குகின்றது. இது வரை எந்த நிறுவனமும் சிந்திக்காத வழங்காத இச்சலுகை இப்பிரிவிற்கு மட்டுமே.

புதிய பிரிவு ஆரம்பம் : 14.09.2012 காலை 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900

(சி/3346)

**IIS CITY CAMPUS**
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk



**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

* Oct 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் திட்டமிடல் சேவை மட்டுப் படுத்தப்பட்ட திறந்த பரீட்சை விசேட வகுப்புசனி, ஞாயிறு 1 மணிதொடக்கம் 5 மணி வரை
* முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஏனைய பரீட்சைகள் வகுப்பு ஒவ்வொரு ஞாயிறும் 12 மணி தொடக்கம் 4 மணி வரை
* அனைத்து வினைத்திறன் காண் தடைப்பரீட்சை வகுப் புக்களும் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு - 0754164564

*யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)*

(c/3357)(9.14)





Aptech COMPUTER EDUCATION
Unleash your potential

உலகின் No. 1 கணனிக்கல்லூரியின் 65 இலட்சம் மாணவர்களுடன் நீங்களும் இணைந்து மிகக் குறைந்த கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த சான்றிதழைப் பெற்று உலகளாவிய ரீதியில் தொழில் வாய்ப்பை உறுதிசெய்யுங்கள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
15/09/2012
17/09/2012
19/09/2012

- Certificate Courses
- Diploma Courses
- Degree Courses

0212219456

(சி/3349)

**APTECH Computer Education World Wide**
No.04, Clock Tower Lane,Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை. Science [illegible])



**CIMA கல்வி @ CAPSTONE**
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.



**இந்திய சாஸ்திரியார் வருகை**

*யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்*

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

(20772)(15-14)



**வேலணையூர் மக்களுக்கான அழைப்பு**

எமது பிரதேசத்தின் ஆலயங்கள், பாடசாலைகள், சமூகஸ்தாபனங்கள், புவியியல் அமைப்புக்கள் எமது பிரதேச அபிவிருத்திக்காக தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய பெரியார்களின் வரலாறுகள் அடங்கிய **"வேலணை வரலாறு"** என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை (15.09.2012) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எமது பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களையும் குடும்பமாக இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களையும் கேட்டுக்கொள்வதுடன் தீவகத்தைச் சேர்ந்த ஏனைய பிரதேச மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

ச. மாணிக்கவாசகர்
பதிப்பாசிரியர் / செயலாளர்,
நூல் வெளியீட்டுச்சபை.

(சி)(6-7-8)



**இலவச கருத்தரங்கு**

கருத்தரங்கு விடயங்கள்
Computer Networking, VIOP, Wireless & Security

| இடம் | காலம் |
| --- | --- |
| Moorthy Guest House Hall | 16/09/2012 |
| 62/20 Stanley Road, Jaffna | Sunday |
| (Opposite to Union Bank) | 10 am to 2 pm |

தயவு செய்து கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு உங்களது இருக்கையினை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

(22751)

**IP Tech Training & Consultancy**
255, K.K.S Road, Mathavadi, Chunnakam Web: www.iptech.lk
Email: info@iptech.lk T.P: 0217539925



**G.C.E (A/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!**
**விசேட கட்டணக் கழிவுகள்**

பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை எதுவுமே சாத்தியப்படாது.

சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick Learning Course) (1 1/2 Months)

**DIPLOMA IN ENGLISH** (2 Months)

- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention
- எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

Batch 1 : 12.09.2012
Batch 2 : 15.09.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Hot Line : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(சி/3306)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org